## க.பொ.த. (உ.தர)ப் பரீட்சை - 2012

# மதிப்பீட்டு அறிக்கை

# 32 - வணிகக் கல்வி

ஆய்வு அபிவிருத்திக் கிளை
தேசிய மதிப்பீட்டிற்கும் பரீட்சித்தலுக்குமான சேவை
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்

# க.பொ.த (உ.தர)ப் பரீட்சை - 2012

## மதிப்பீட்டு அறிக்கை

# 32 - வணிகக் கல்வி

ஆய்வு அபிவிருத்திக் கிளை
தேசிய மதிப்பீட்டிற்கும் பரீட்சித்தலுக்குமான சேவை
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்

**முழுப் பதிப்புரிமையுடையது.**

**வணிகக் கல்வி**

**மதிப்பீட்டு அறிக்கை - க.பொ.த (உ.தர)ப் பரீட்சை - 2012**

**நிதி அனுசரணை**

எதிர்கால அறிவை மையமாகக் கொண்டு பாடசாலை
கல்விமுறையை மாற்றியமைக்கும் செயற்றிட்டம்
(TSEP-WB) மூலம்

இலங்கைப் பரீட்சைத் திணைக்கள அச்சகத்தில் அச்சிடப்பட்டது.

# அறிமுகம்

கல்விப் பொதுத் தராதரப் பத்திர உயர் தரப் பரீட்சையானது இலங்கையின் உயர்மட்ட இரண்டாம் நிலைக் கல்வியின் இறுதிச் சான்றிதழ்ப் பரீட்சையாகும். உயர்மட்ட இரண்டாம் நிலைக் கல்வியின் இறதியில் மாணவர்களின் அடைவு மட்டத்தைச் சான்றுப்படுத்தல் இப் பரீட்சையின் முக்கிய நோக்காக இருந்த போதும் தேசிய பல்கலைக்கழகங்கள், வேறு கல்வி மற்றும் தொழில் பயிற்சி நிறுவனங்கள், தேசிய கல்வியியல் கல்லூரிகள் என்பவற்றுக்குத் தகைமையானோரைத் தெரிவு செய்தலும் இப்பரீட்சையின் பெறுபேறுகளின் அடிப்படையில் இடம்பெறுவதால் அடைவுப் பரீட்சையாகவும் தேர்வுப் பரீட்சையாகவும் க.பொ.த (உ.தர)ப் பரீட்சை மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த தன்மையைப் பெறுகிறது. மேலும் மூன்றாம் நிலையில் தொழிலில் பிரவேசிப்பதற்கான தகைமையை சான்றுப்படுத்தும் பரீட்சையாகவும் இது ஏற்றுக்கொள்ளப்படுகின்றது. இப்போது இப்பரீட்சைக்காக 2012 ஆம் ஆண்டில் 196954 வரையிலான பாடசாலைப் பரீட்சார்த்திகளும் 10,954 வரையிலான தனிப்பட்ட பரீட்சார்த்திகளும் தோற்றியிருந்தனர்.

இப்பரீட்சையில் உயர் அடைவு மட்டத்தைப் பெறுவதற்காக மாணவர்களும் அவர்களின் எதிர்பார்ப்புகளை நிறைவு செய்வதற்காக ஆசிரியர்களும் பெற்றோரும் பெரிதும் முயற்சி செய்கின்றனர். இந்த மதிப்பீட்டு அறிக்கையை அவர்களின் அந்த எதிர்பார்ப்புக்களை நிறைவேற்றுவதற்கு உதவும் பொருட்டே இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் தயாரித்துள்ளது. இந்த மதிப்பீட்டு அறிக்கையில் உள்ளடக்கப்பட்ட தகவல்கள் பரீட்சையை எதிர்பார்த்திருப்போர் ஆசிர்யர்மார், அதிபர்மார், ஆசிரியர் ஆலோசகர்கள், பாடப் பொறுப்புக் கல்விப் பணிப்பாளர்கள் பெற்றோர், கல்வி ஆய்வாளர்கள் அனைவருக்கும் பயன்படும் என்பதில் ஐயமில்லை.

இந்த மதிப்பீட்டு அறிக்கை I, II, III என மூன்று பகுதிகளைக் கொண்டுள்ளது.

க.பொ.த (உ.தர) வணிகக் கல்வி பாடத்தின் நோக்கம் பாட அடைவு பற்றிய தகவல்கள் இந்த அறிக்கையின் பகுதி I இல் அடங்கியுள்ளது. இப்பகுதியில் பாடத்திற்கு தோற்றிய பரீட்சார்த்திகளின் எண்ணிக்கை, அவர்கள் தரங்களைப் பெற்றுள்ள விதம், மாவட்ட மட்டத்தில் பாடசாலைப் பரீட்சார்த்திகள் தரங்களைப் பெற்றுள்ள விதம் வகுப்பாயிடைக்கேற்ப புள்ளிகளின் பரம்பல் ஆகிய பாட அடைவு பற்றிய புள்ளிவிபரத் தகவல்களும் வணிகக் கல்வி பாடத்தின் வினாப்பத்திரம் I, II என்பவற்றில் வினாக்கள் தெரிவு செய்யப்பட்ட விதம், அவ்வினாக்களுக்கும் அவ்வினாக்களின் பகுதிகளுக்கும் புள்ளிகள் பெற்றுள்ள விதம் என்பன பற்றி விரிவாகக் குறிப்பிடும் பாட அடைவு பற்றிய பகுப்பாய்வும் உள்ளடக்கப்பட்டுள்ளன. க.பொ.த (உ.தர)ம் - 2012 பரீட்சையில் வணிகக் கல்வி பாடத்தின் வினாப்பத்திரம் I, II என்பவற்றுக்கான வினாக்கள் அவ்வினாக்களுக்கு பரீட்சார்த்திகள் விடைகள் அளித்திருந்தமை பற்றிய தகவல்கள் இந்த அறிக்கையின் பகுதி II இல் அடங்கியுள்ளன. அதில் வினாப்பத்திரம் I, II என்பவற்றின் வினாக்களுக்கு எதிர்பார்க்கப்பட்ட விடைகள், புள்ளி வழங்கும் திட்டம், விடைகள் அளித்தமை பற்றிய அவதானிப்புக்களும், முடிவுகள், பாட அடைவை மேம்படுத்துவதற்கான ஆலோசனைகள் என்பனவும் உள்ளடக்கப்பட்டுள்ளன.

இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் ஆய்வு அபிவிருத்திக் கிளை மூலம் விடைத்தாள் மதிப்பீட்டில் ஈடுபட்ட பிரதம பரீட்சகர், மேலதிக பிரதம பரீட்சகர், உதவிப் பரீட்சகர்கள் ஆகியோரால் முன்வைக்கப்பட்ட தகவல்கள், அவதானிப்புகள், கருத்துகள், ஆலோசனைகள், மரபு ரீதியான சோதனைக் கோட்பாடு (Classical Testing Theory) மற்றும் உருப்படித் துலங்கள் கோட்பாடு (Item Response Theory) என்பவற்றைப் பயன்படுத்தி பரீட்சார்த்திகளின் துலங்கல்களைப் பகுப்பாய்வு செய்தலினூடாகப் பெறப்பட்ட தகவல்கள் என்பன இந்த அறிக்கையை தயாரிப்பதற்கு ஆதாரமாகக் கொள்ளப்பட்டுள்ளன.

வினாப்பத்திரத்திலுள்ள ஒவ்வொரு விளாக்களுக்கு விடையளிக்கும்போது பரீட்சார்த்திகள் கவனத்தில் கொள்ள வேண்டிய விடயங்கள், கற்றல் - கற்பித்தல் பணிகள் பற்றிய கருத்துகள், ஆலோசனைகள் என்பனவும் இந்த அறிக்கையில் பகுதி III இல் அடங்கியுள்ளன. பல்வேறு தேர்ச்சிகள் அத்தேர்ச்சி மட்டங்களை அணுகுவதற்கான கற்றல் - கற்பித்தல் செயன்முறையை ஒழுங்கமைக்கும் விதம் என்பன தொடர்பாக இந்த அறிக்கையானது பெரிதும் துணை புரியும் என நம்புகின்றேன்.

**எதிர்காலத்தில்** தொகுக்கப்படும் மதிப்பீட்டு அறிக்கைகளின் பண்புத்தரத்தை மேம்படுத்தக் கூடிய பயன்தரும் கருத்துகள், ஆலோசனைகள் என்பவற்றை எங்களுக்குச் சமர்ப்பிக்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன். இந்த அறிக்கையைத் தயாரிப்பதற்குத் தேவையான தகவல்களை வழங்கிய பிரதம பரீட்சகர், மேலதிக பிரதம பரீட்சகர், உதவிப் பரீட்சகர்கள், ஊக்கத்துடன் பங்களிப்பு வழங்கிய குழு உறுப்பினர்கள், பொறுப்புடன் கடமையாற்றிய இலங்கைப் பரீட்சைத் திணைக்கள அலுவலர்கள் பணிக்குழுவினர் ஆகியோருக்கும் இதை அழகுற அச்சிட்டு உதவிய அரச அச்சகக் கூட்டுத்தாபனத்துக்கும் இத்தொகுப்புக்கான நிதி அனுசரணை வழங்கி எதிர்கால அறிவை மையமாகக் கொண்டு பாடசாலைத் தொகுதியினை மீளமைக்கும் செயற்றிட்டத்துக்கும் (TSEP - WB) எனது மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கின்றேன்.

டபிள்யு.எம்.என்.ஜே. புஷ்பகுமார
பரீட்சை ஆணையாளர் நாயகம்.

2013 டிசம்பர் 01
ஆய்வு அபிவிருத்திக் கிளை,
தேசிய மதிப்பீட்டிற்கும் பரீட்சித்தலுக்குமான சேவை,
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்,
பெலவத்தை,
பத்தரமுல்ல.

| | | |
|---|---|---|
| வழிகாட்டல் | : | **டபிள்யு.எம்.என்.ஜே. புஷ்பகுமார**<br>பரீட்சை ஆணையாளர் நாயகம் |
| ஒழுங்கமைப்பும் நெறிப்படுத்தலும் | : | **திருமதி. கயாத்திரி அபேகுணசேகர**<br>பரீட்சை ஆணையாளர்<br>(ஆய்வு அபிவிருத்திக் கிளை) |
| இணைப்பு | : | **திருமதி. வருணி செனவிரத்ன**<br>உதவிப் பரீட்சை ஆணையாளர் |
| தொகுப்பு | : | **திருமதி. கயாத்திரி அபேகுணசேகர**<br>பரீட்சை ஆணையாளர்<br>(ஆய்வு அபிவிருத்திக் கிளை) |
| | : | **கலாநிதி. பீ. ஜே. குமாரசிங்ஹ**<br>சிரேஷ்ட விரிவுரையாளர்<br>வணிக பொருளியல் கற்கை பிரிவு<br>சிறி ஜயவர்தனபுர பல்கலைக்கழகம் |
| ஆக்கக் குழு | : | **திருமதி. யூ. ஜீ. டீ. சமன்குமாரி**<br>மே/மா. பிலி. தரமராஜ ம.வி<br>பிலியந்தல |
| | : | **திருமதி. செறின் கன்டம்பி**<br>க. உயர்தர மகளிர் கல்லூரி<br>கண்டி |
| | : | **திரு. டபிள்யு. டீ. ரஞ்சித் ஜயநாத**<br>கொ. சாந்த பீடர்ஸ் கல்லூரி<br>கொழும்பு - 04 |
| | : | **திரு. டபிள்யு. ஏ. டபிள்யு. ஜீ. அபேசிங்ஹ**<br>மே. மா. கல/ மஹாமாயா மகளிர் கல்லூரி<br>கடவத. |
| மொழிபெயர்ப்பு | : | திரு. M. H. M புஹாரி<br>முன்னால் ஆசிரிய ஆலோசகர் (வணிகக் கல்வி)<br>கேகாலை |
| கணினிப் பக்க வடிவமைப்பு | : | திரு. பொ. அற்புதரூபன்<br>முகாமைத்துவ உதவியாளர் |
| | : | **செல்வி. எஸ். காஞ்சனா.**<br>கணினித் தரவுப் பதிவாளர் |

## உள்ளடக்கம்

பக்க எண்


பகுதி I

1 பாடக் குறிக்கோள்களும், பாட அடைவு தொடர்பான தகவல்களும்

1.1 பாடக் குறிக்கோள்கள் 1

1.2 பாட அடைவு தொடர்பான தகவல்கள்

1.2.1 இப்பாடத்துக்குத் தோற்றிய பரீட்சார்த்திகளின் எண்ணிக்கை. 2
1.2.2 பரீட்சார்த்திகளால் தரங்கள் பெறப்பட்டுள்ள விதம். 2
1.2.3 மாவட்ட அடிப்படையில் முதற் தடவையாகத் தோற்றிய பாடசாலைப் பரீட்சார்த்திகளால் தரங்கள் பெறப்பட்டுள்ள விதம் 3
1.2.4 வகுப்பாயிடை அடிப்படையில் புள்ளிகள் பெறப்பட்டுள்ள விதம் 4

1.3 பாட அடைவு பற்றிய பகுப்பாய்வு
1.3.1 வினாப்பத்திரம் I இன் அடைவு 5
1.3.2 வினாப்பத்திரம் II இல் வினாக்கள் தெரிவு செய்யப்பட்டுள்ள விதம் 6
1.3.3 வினாப்பத்திரம் II இல் புள்ளிகள் பெறப்பட்டுள்ள விதம் 6
1.3.4 வினாப்பத்திரம் II இன் அடைவு 7

பகுதி II

2 வினாக்களும் அவற்றிற்கு விடையளிக்கப்பட்டமை தொடர்பான விவரங்களும்
2.1 வினாப்பத்திரம் I ற்கு விடையளிக்கப்பட்டுள்ள விபரங்கள் தொடர்பான தகவல்கள்

2.1.1 வினாப்பத்திரம் I இன் கட்டமைப்பு 9
2.1.2 வினாப்பத்திரம் I 10
2.1.3 வினாப்பத்திரம் I இல் 1 தொடக்கம் 30 வரையான வினாக்களுக்கு எதிர்பார்க்கப்பட்ட விடைகளும் புள்ளி வழங்கும் திட்டமும். 16
2.1.4 வினாப்பத்திரம் I இல் 1 தொடக்கம் 30 வரையான வினாக்களுக்கு விடையளித்தல் தொடர்பான அவதானம் 17
2.1.5 வினாப்பத்திரம் I இல் 1 தொடக்கம் 30 வரையான வினாக்களுக்கான தெரிவை மேற்கொண்ட விதம் (சதவீதத்தில்) 18
2.1.6 வினாப்பத்திரம் I இல் 1 தொடக்கம் 30 வரையான வினாக்களுக்கு விடையளித்தல் தொடர்பான முடிவும் ஆலோசனைகளும் 19
2.1.7 வினாப்பத்திரம் I இல் 31 தொடக்கம் 50 வரையான வினாக்களும் எதிர்பார்க்கப்பட்ட விடைகளும் புள்ளி வழங்கும் திட்டமும் 20
2.1.8 வினாப்பத்திரம் I இல் 31 தொடக்கம் 50 வரையான வினாக்களுக்கு விடையளித்தல் தொடர்பான முழுமையான அவதானிப்பு 25
2.1.9 வினாப்பத்திரம் I இல் 31 தொடக்கம் 50 வரையான வினாக்களுக்கு புள்ளிகள் பெற்றுள்ள விதம் 26
2.1.10 வினாப்பத்திரம் I இல் 31 தொடக்கம் 50 வரையான வினாக்களுக்கு விடையளித்தல் தொடர்பான அவதானிப்பும், ஆலோசனைகளும் 27

2.2 வினாப்பத்திரம் II உம் விடையளிக்கப்பட்டமை தொடர்பான தகவல்களும்
2.2.1 வினாப்பத்திரம் II இன் கட்டமைப்பு 29
2.2.2 வினாப்பத்திரம் II - எதிர்பார்க்கப்பட்ட விடைகள், புள்ளி வழங்கும் திட்டம், விடையளித்தல் தொடர்பான அவதானிப்புகள், முடிவுகள் மற்றும் ஆலோசனைகள் 30
2.2.3 வினாப்பத்திரம் II இற்கு விடையளித்தல் தொடர்பான முழு அவதானிப்புகள், முடிவுகள் மற்றும் ஆலோசனைகள் 55

பகுதி III

3 விடையளிக்கும்போது கவனத்திற்கொள்ளப்பட வேண்டிய விடயங்களும் ஆலோசனைகளும்
3.1 விடையளிக்கும்போது கவனிக்கப்பட வேண்டிய விடயங்கள் 56
3.2 கற்றல் கற்பித்தல் தொடர்பான கருத்துக்களும் ஆலோசனைகளும் 57

# பகுதி I

## 1 பாடக் குறிக்கோள்களும், பாட அடைவு தொடர்பான தகவல்களும்

### 1.1 பாடக் குறிக்கோள்கள்

இப்பாடத்திட்டத்தைக் கற்பதன் மூலம் மாணவர்கள்

- மனிதத் தேவைகள் விருப்பங்கள் நிறைவேற்றுதல் தொடர்பான பிரச்சினைகளுக்கு நிருவன அல்லது அமைப்புக்களை அடிப்படையாகக் கொண்டு தீர்வுகளை அறிந்துக் கொள்ளக் கூடிய முறைகள் தொடர்பான தேர்ச்சிகளை விருத்தி செய்து கொள்வார்.
- மாற்றமுறும் வணிகச் சூழலை விளங்கிக் கொள்வதன் மூலம் அதற்கிசைவாக்கமடைவதற்குத் தேவையான திறன்களைப் பெற்றுக்கொள்வார்.
- வணிகம் தொடர்பாக பெற்றுக்கொள்ளும் அறிவு பூர்வமான அறிவினை செயற்பாட்டு ரீதியாகப் பயன்படுத்துவார்.
- வணிகம் தொடர்பான எண்ணக்கருக்கள், அடிப்படைத் தத்துவங்கள் என்பவற்றைக் கற்பதனூடாக விரிவான பாட விடையங்களை இலகுவாக கிரகித்துக் கொள்வதற்கான தேர்ச்சிகளை விருத்தி செய்து கொள்வார்.
- முயற்சியாண்மை, முகாமைத்துவத் திறன்களை விருத்தி செய்து கொள்வார்.
- வணிகத் துறையொன்றின் கருப்பொருட்கள் ஒன்றுடன் ஒன்று தொடர்புபட்டுள்ளது என்பதைச் சுட்டிக் காட்டுவார்.
- தேசிய, வலைய, பூகோலமயமாதல் ரீதியாக வணிகங்களில் ஈடுபடுவதற்குத் தேவையான அடிப்படைத் தேர்ச்சிகளைப் பெற்றுக் கொள்வார்.
- இலங்கையில் சாதகமான வணிகக் கலாசாரமொன்றை ஏற்படுத்துவதற்குத் தேவையான மனப்பாங்கினை கட்டி எழுப்பவார்.
- ஒழுங்கமைக்கப்பட்ட திட்டத்துடன் வணிகங்களை ஆரம்பிப்பதற்கும், அதனை நடத்திச் செல்வதற்கும் தேவையான திரன்களைப் பெற்றுக் கொள்வார்.
- தொழில் வகிபாகங்களின் கருமங்களை வெற்றிகரமாக நடத்திச் செல்வதற்குத் தேவையான தேர்ச்சிகளைப் பெற்றுக் கொள்வார்.
- சமூகப் பொருளாதார மேம்பாடு கருதி முகாமைத்துவம் நவீன தொழில்நுட்ப முறைகளைப் பயன்படுத்தும் திரன்களை விருத்தி செய்துகொள்வார்.
- உயர் கல்வியில் ஈடுபடுவதற்கான முன் ஆயத்தத்தைப் பெற்றுக் கொள்வார்.

## 1.2 பரீட்சார்த்திகளின் பாட அடைவு தொடர்பான புள்ளிவிபரத் தகவல்கள்

### 1.2.1 இப்பாடத்துக்குத் தோற்றிய பரீட்சார்த்திகளின் எண்ணிக்கை

| மொழிமூலம் | பாடசாலை | தனிப்பட்ட | மொத்தம் |
|---|---|---|---|
| சிங்களம் | 43379 | 1493 | 44872 |
| தமிழ் | 6701 | 430 | 7131 |
| ஆங்கிலம் | 1402 | 451 | 1853 |
| **மொத்தம்** | **51482** | **2374** | **53856** |

அட்டவணை 1

### 1.2.2 பரீட்சார்த்திகளினால் தரங்கள் பெறப்பட்டுள்ள விதம்

| தரம் | பாடசாலைப் பரீட்சார்த்திகள் | | தனிப்பட்ட பரீட்சார்த்திகள் | | மொத்தம் | சதவீதம் |
|---|---|---|---|---|---|---|
| | எண்ணிக்கை | சதவீதம் | எண்ணிக்கை | சதவீதம் | | |
| A | 13251 | 25.74 | 238 | 10.03 | 13489 | 25.04 |
| B | 9766 | 18.97 | 254 | 10.70 | 10020 | 18.61 |
| C | 13542 | 26.30 | 534 | 22.49 | 14076 | 26.14 |
| S | 10696 | 20.78 | 701 | 29.53 | 11397 | 21.16 |
| F | 4227 | 8.21 | 647 | 27.25 | 4874 | 9.05 |
| மொத்தம் | **51482** | **100.00** | **2374** | **100.00** | **53856** | **100.00** |

அட்டவணை 2

## 1.2.3 மாவட்ட மட்டத்தினடிப்படையில் முதற்தடவையாகத் தோற்றிய பாடசாலைப் பரீட்சார்த்திகளால் தரங்கள் பெறப்பட்டுள்ள விதம்:

| மாவட்டம் | தோற்றியோரின் எண்ணிக்கை | அதி சிறந்த சித்தி (A) பெற்றோர் | | விசேட திறமைச் சித்தி (B) பெற்றோர் | | திறமைச் சித்தி (C) பெற்றோர் | | சாதாரண சித்தி (S) பெற்றோர் | | சித்தி (A+B+C+S) பெற்றோர் | | சித்தி யடையாதோர் (F) | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | எண்ணிக்கை | % | எண்ணிக்கை | % | எண்ணிக்கை | % | எண்ணிக்கை | % | எண்ணிக்கை | % | எண்ணிக்கை | % |
| 1. கொழும்பு | 7806 | 2348 | 30.08 | 1415 | 18.13 | 1877 | 24.05 | 1511 | 19.36 | 7151 | 91.61 | 655 | 8.39 |
| 2. கம்பஹா | 4732 | 1412 | 29.84 | 820 | 17.33 | 1093 | 23.10 | 1020 | 21.56 | 4345 | 9182 | 387 | 8.18 |
| 3. களுத்துறை | 2115 | 585 | 27.66 | 378 | 17.87 | 583 | 27.57 | 401 | 18.96 | 1947 | 92.06 | 168 | 7.94 |
| 4. கண்டி | 2616 | 823 | 31.46 | 453 | 17.32 | 611 | 23.36 | 532 | 20.34 | 2419 | 92.47 | 197 | 7.53 |
| 5. மாத்தளை | 679 | 150 | 22.09 | 96 | 14.14 | 185 | 27.25 | 176 | 25.92 | 607 | 89.40 | 72 | 10.60 |
| 6. நுவரெலியா | 870 | 142 | 16.32 | 185 | 21.26 | 267 | 30.69 | 203 | 23.33 | 797 | 91.61 | 73 | 8.39 |
| 7. காலி | 2166 | 553 | 25.53 | 379 | 17.50 | 548 | 25.30 | 460 | 21.24 | 1940 | 89.57 | 226 | 10.43 |
| 8. மாத்தறை | 1367 | 263 | 19.24 | 220 | 16.09 | 351 | 25.68 | 365 | 26.70 | 1199 | 87.71 | 168 | 12.29 |
| 9. அம்பாந்தோட்டை | 895 | 191 | 21.34 | 143 | 15.98 | 267 | 29.83 | 191 | 21.34 | 792 | 88.49 | 103 | 11.51 |
| 10. யாழ்ப்பாணம் | 817 | 170 | 20.81 | 170 | 20.81 | 241 | 29.50 | 175 | 21.42 | 756 | 92.53 | 61 | 7.47 |
| 11. கிளிநொச்சி | 103 | 27 | 26.21 | 21 | 20.39 | 33 | 32.04 | 14 | 13.59 | 95 | 92.23 | 8 | 7.77 |
| 12. மன்னார் | 164 | 12 | 7.32 | 39 | 23.78 | 59 | 35.98 | 35 | 21.34 | 145 | 88.41 | 19 | 11.59 |
| 13. வவுனியா | 241 | 47 | 19.50 | 61 | 25.31 | 64 | 26.56 | 51 | 21.16 | 223 | 92.53 | 18 | 7.47 |
| 14. முல்லைத்தீவு | 80 | 13 | 16.25 | 16 | 20.00 | 26 | 32.50 | 18 | 22.50 | 73 | 91.25 | 7 | 8.75 |
| 15. மட்டக்களப்பு | 550 | 186 | 33.82 | 132 | 24.00 | 102 | 18.55 | 92 | 16.73 | 512 | 93.09 | 38 | 6.91 |
| 16. அம்பாறை | 853 | 190 | 22.27 | 144 | 16.88 | 221 | 25.91 | 212 | 24.85 | 767 | 89.92 | 86 | 10.08 |
| 17. திருகோணமலை | 446 | 54 | 12.11 | 87 | 19.51 | 114 | 25.56 | 126 | 28.25 | 381 | 85.43 | 65 | 14.57 |
| 18. குருநாகல் | 2247 | 465 | 20.69 | 433 | 19.27 | 617 | 27.46 | 507 | 22.56 | 2022 | 89.99 | 225 | 10.01 |
| 19. புத்தளம் | 1075 | 342 | 31.81 | 203 | 18.88 | 284 | 26.42 | 188 | 17.49 | 1017 | 94.60 | 58 | 5.40 |
| 20. அனுராதபுரம் | 1198 | 267 | 22.29 | 249 | 20.78 | 334 | 27.88 | 245 | 20.45 | 1095 | 91.40 | 103 | 8.60 |
| 21. பொலன்னறுவை | 557 | 115 | 20.65 | 108 | 19.39 | 141 | 25.31 | 135 | 24.24 | 499 | 89.59 | 58 | 10.41 |
| 22. பதுளை | 1277 | 283 | 22.16 | 210 | 16.44 | 325 | 25.45 | 317 | 24.82 | 1135 | 88.88 | 142 | 11.12 |
| 23. மொனராகலை | 505 | 136 | 26.93 | 103 | 20.40 | 135 | 26.73 | 89 | 17.62 | 463 | 91.68 | 42 | 8.32 |
| 24. இரத்தினபுரி | 1714 | 525 | 30.63 | 310 | 18.09 | 437 | 25.50 | 308 | 17.97 | 1580 | 92.18 | 134 | 7.82 |
| 25. கேகாலை | 1248 | 293 | 23.48 | 245 | 19.63 | 352 | 28.21 | 235 | 18.83 | 1125 | 90.14 | 123 | 9.86 |
| **மொத்தம்** | **36321** | **9592** | **26.41** | **6620** | **18.23** | **9267** | **25.51** | **7606** | **20.94** | **31900** | **87.83** | **4421** | **12.17** |

**அட்டவணை** 3

### 1.2.4 வகுப்பாயிடை அடிப்படையில் புள்ளிகள் பெறப்பட்டுள்ள விதம்

| வகுப்பாயிடை | மீடிறன் | மீடிறன் சதவீதம் | திரள் மீடிறன் | திரள் மீடிறன் சதவீதம் |
|---|---|---|---|---|
| 91-100 | 804 | 1.49 | 53856 | 100.00 |
| 81-90 | 5773 | 10.72 | 53052 | 98.51 |
| 71-80 | 9644 | 17.91 | 47279 | 87.79 |
| 61-70 | 10281 | 19.09 | 37635 | 69.88 |
| 51-60 | 10065 | 18.69 | 27354 | 50.79 |
| 41-50 | 8569 | 15.91 | 17289 | 32.10 |
| 31-40 | 5512 | 10.23 | 8720 | 16.19 |
| 21-30 | 2535 | 4.71 | 3208 | 5.96 |
| 11-20 | 629 | 1.17 | 673 | 1.25 |
| 01-10 | 44 | 0.08 | 44 | 0.08 |
| 00-00 | 0 | 0.00 | 0 | 0.00 |

**அட்டவணை 4**

மேலே தரப்பட்டுள்ள அட்டவணையிலிருந்து தகவல்களைப் பெற்றுக்கொள்ளும் முறை கீழே தரப்பட்டுள்ள உதாரணத்தின் மூலம் காட்டப்பட்டுள்ளது.

உதாரணம் : (31 - 40 வரையிலான வகுப்பாயிடையினை நோக்குவோமாயின்)

இப்பாடத்திற்காகத் தோற்றிய 53856 பேர்களில் 31 தொடக்கம் 40 வரையிலான புள்ளிகளைப் பெற்றவர்களின் எண்ணிக்கை 5512 பேர்களாவர். இது சதவீதமாகக் காணுவதாயின் 10.23% மாகும். புள்ளிகள் 40 அல்லது அதனை விடக் குறைவாகப் பெற்றவர்களது தொகையானது 8720 பேர்களாக இருப்பதுடன் அது 16.19% மாகும்.

## 1.3 பாட அடைவு பற்றிய பகுப்பாய்வு

### 1.3.1 வினாப்பத்திரம் I இன் அடைவு




**வரைபு1** (RD/16/05/AL படிவத்தை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்பட்டது.)

மேலே தரப்பட்ட வரைபிலிருந்து தகவல்களைப் பெற்றுக் கொள்ளும் முறை கீழே தரப்பட்டுள்ளது.

உதாரணம் : இவ்வினாத்தாளில் 2 ஆம் வினாவிற்கே அதிகமான பரீட்சார்த்திகள் சரியாக விடையளித்திருந்ததோடு இதன் இலகுத்தன்மை 96% ஆகக் காணப்படுகின்றது. 40 ஆம் வினாவுக்கே குறைந்தளவு பரீட்சார்த்திகளால் சரியாக விடையளிக்கப்பட்டிருந்தது. இதன் இலகுத்தன்மை 17% ஆகும்.

### 1.3.2 வினாப்பத்திரம் II - இல் வினாக்கள் தெரிவு செய்யப்பட்டுள்ள விதம்




இவ்வரைபிலிருந்து தகவல்கள் பெறும் முறை பின்வரும் உதாரணம் மூலம் காட்டப்படுள்ளது.

உ-ம்: விடையளித்தலுக்காக வினாவினைத் தேர்ந்தெடுக்கும் போது 1 ஆம் வினாவினை 98% ஆனவர்கள் தெரிவுசெய்துள்ளதோடு 7 ஆம் வினாவினை 31% ஆனவர்கள் தெரிவுசெய்துள்ளனர்.

**வரைபு 2** - (RD/16/02/AL படிவத்தை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்பட்டது.)

### 1.3.3 வினாப்பத்திரம் II இல் புள்ளிகள் பெற்றுள்ள விதம்




இவ் வரைபிலிருந்து தகவல்கள் பெறும் முறையானது பின்வரும் உதாரணம் மூலம் காட்டப்பட்டுள்ளது.

உ-ம்: இங்கு 1 ஆம் வினாவுக்காக ஒதுக்கப்பட்ட புள்ளி 20 ஆகும். இவ்வரைபுக்கு ஏற்ப அப்புள்ளிகளில் 16-20 வகுப்பாயிடையில் புள்ளிகளைப் பெற்ற பரீட்சார்த்திகள் 44% வீதத்தினராவர். 11-15 இற்கு இடைப்பட்ட வகுப்பாயிடையில் 37% ஆன பரீட்சார்த்திகள் புள்ளிகளைப் பெற்றுள்ளனர். 6 - 10 இற்கு இடைப்பட்ட வகுப்பாயிடையில் 14% மான பரீட்சார்த்திகளும் 0 - 5 இற்கு இடைப்பட்ட வகுப்பாயிடையில் 5% மான பரீட்சார்த்திகளும் புள்ளிகளைப் பெற்றுள்ளனர்.

**வரைபு 3** - (RD/16/02/AL படிவத்தை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்பட்டது.)

## 1.3.4 வினாப்பத்திரம் II இன் அடைவு

**க.பொ.த (உ.தர)ப் பரீட்சை - 2012**

**32 - வணிகக் கல்வி - வினாப்பத்திரம் II - பகுதி I**

**வினாக்களுக்கான இலகுச்சுட்டி**




**வரைபு 4.1** (RD/16/04/AL படிவத்தை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்பட்டது.)

மேலே தரப்பட்ட வரைபிலிருந்து தகவல்களைப் பெற்றுக் கொள்ளும் முறை கீழே தரப்பட்டுள்ளது.

உதாரணம் : 1 ஆம் வினாவின் (ii) (அ) பிரிவின் இலகுத்தன்மை 93% மாவதோடு 3 ஆம் வினாவில் (ii) இன் இலகுத்தன்மை 2% ஆகும்.


க.பொ.த (உ.தர)ப் பரீட்சை - 2012
32 - வணிகக் கல்வி - வினாப்பத்திரம் II - பகுதி II
வினாக்களுக்கான இலகுச்சுட்டி
இலகுச் சுட்டி
1.0
0.9
0.8
0.7
0.6
0.5
0.4
0.3
0.2
0.1
0.0
(i) (ii) அ ஆ இ (iii) அ ஆ (iv) அ ஆ (v)
5
(i) அ ஆ 1 2 (ii) 1 2 (iii) (iv) (v) அ ஆ இ
6
(i) (ii) அ 1 2 ஆ (iii) (iv) அ ஆ இ ஈ (v) அ ஆ 1 2
7
(i) 1 2 (ii) (iii) 1 2 (iv) (v) அ ஆ
8
வினா - பிரிவுகளும் உபபிரிவுகளும்.

t i uG **4.2**

# பகுதி II

## 2 வினாக்களும், அவற்றிற்கு விடையளிக்கப்பட்டமை தொடர்பான விபரங்களும்

### 2.1 வினாப்பத்திரம் I உம் அதற்கு விடையளிக்கப்பட்டுள்ளமை தொடர்பான விபரங்களும்

#### 2.1.1 வினாப்பத்திரம் I இன் கட்டமைப்பு

**நேரம் 02 மணித்தியாலங்களைக் கொண்டது. மொத்தப்புள்ளிகள் 100 ஆகும்.**

* 1 - 30 வரையில் வினாக்கள் 30 உம் 31 - 40 வரையில் வினாக்கள் 10 இற்குப் பொருத்தமான பதங்களைப் பயன்படுத்தி இடைவெளிகளை நிரப்புதலும், 41 - 50 வரையான உறுதியான விடையினை வழங்குவதற்கான வினாக்கள் 10 இனையும் உள்ளடக்கியதாகும்.

* அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கப்படுதல் வேண்டும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

* ஒரு வினாவிற்கு 02 புள்ளிகள் வீதம் மொத்தப் புள்ளிகள் 100 ஆகும்.

## 2.1.2 வினாப்பத்திரம் I (வினா இலக்கம் 1 தொடக்கம் 30 வரை)

1. பின்வருவனவற்றுள் எது **விருப்பமாகக்** கருதப்படுகின்றது ?
   (1) தொடர்பாடல் (2) போக்குவரத்து (3) கல்வி (4) காப்புறுதி (5) சுகாதாரம் (......)

2. பொருட்களைப் பின்வருமாறு வகைப்படுத்தலாம்
   - வசதிப் பொருட்கள்
   - கடைப் பொருட்கள்
   - விசேட (சிறப்பு) பொருட்கள்
   - நாடப்பெறா (நாடாப்) பொருட்கள்

   இவ்வகைப்படுத்தலானது எவ்வாறு அழைக்கப்படுகிறது,
   (1) நீண்டகாலப் பாவனைப் பொருட்கள் (2) குறுங்காலப் பாவனைப் பொருட்கள்
   (3) நுகர்வுப் பொருட்கள் (4) கைத்தொழில் பொருட்கள்
   (5) இடைநிலைப் பொருட்கள் (......)

3. வணிகச் சூழல் விசைகள் சில கீழே தரப்படுகின்றது.
   A – முகாமையாளர்கள் B – போட்டியாளர்கள்
   C – ஊழியர்கள் D – வாடிக்கையாளர்கள்
   E – உடைமையாளர்கள் F – எதிர்கால வணிகர்கள் (potential businessmen)
   G – விநியோகத்தர்கள்

   வேலைச் (பணிச்) சூழல் விசைகளை மட்டும் உள்ளடக்கியுள்ள தொகுதியைத் தெரிவு செய்க.
   (1) A, C, E, G (2) B, D, F, G (3) A, B, D, F (4) B, D, E, G (5) B, C, F, G (......)

4. வணிகமொன்றின் சமூகப் பொறுப்புக்கள் சில கீழே தரப்படுகின்றது.
   A – வினைத்திறனான முகாமைத்துவம் B – தொழில் பாதுகாப்பு
   C – சமூகத்துக்கான சேவை D – வெளிப்படைத் தன்மை
   E – பாதுகாப்பான உற்பத்திப்பொருட்கள் F – சுகாதார வசதிகள்
   G – கழிவுப்பொருள் முகாமைத்துவம் H – வேலைவாய்ப்பை வழங்குதல்
   I – சமத்துவம்

   ஊழியர்களுடன் தொடர்புடைய சமூகப் பொறுப்புக்களை மட்டும் உள்ளடக்கியுள்ள தொகுதியைத் தெரிவு செய்க.
   (1) A, D, F (2) B, E, H (3) C, F, G (4) A, D, I (5) B, F, I (......)

5. நுகர்வோர் உரிமைகள் மற்றும் நுகர்வோர் பொறுப்புக்கள் சில கீழே தரப்படுகின்றது.
   A – தகவல்களைப் பெறுதல்
   B – பகுத்தறியக்கூடிய விழிப்புணர்வு (critical awareness)
   C – சமூக அக்கறை (social concern)
   D – தெரிவு (choice)
   E – சுகாதாரமான சூழலில் வாழுதல்
   F – சூழல் தொடர்பான விழிப்புணர்வு (Environmantal awareness)
   G – கவனத்தை ஈர்த்தல்
   H – ஐக்கியம் (solidarity)

   மேலே உள்ளவற்றுள் நுகர்வோர் பொறுப்புக்களை மட்டும் உள்ளடக்கியுள்ள தொகுதியைத் தெரிவு செய்க.
   (1) A, B, D, F (2) B, C, F, H (3) B, E, G, H (4) B, C, E, F (5) C, F, G, H (......)

6. ISO 9001 : 2008 நியமமானது
   (1) சூழல் முகாமைத்துவ முறைமைக்கான சான்றுறுதிப்படுத்தல் ஆகும்.
   (2) உணவுப் பாதுகாப்பு முகாமைத்துவ முறைமைக்கான சான்றுறுதிப்படுத்தல் ஆகும்.
   (3) தர முகாமைத்துவ முறைமைக்கான சான்றுறுதிப்படுத்தல் ஆகும்.
   (4) சமூக வகைகூறலுக்கான சான்றுறுதிப்படுத்தல் ஆகும்.
   (5) தொழில்சார் சுகாதார பாதுகாப்பு முகாமைத்துவ முறைமைக்கான சான்றுறுதிப்படுத்தல் ஆகும். (......)

7. பங்குடைமைகளுடன் தொடர்புபட்ட வகையில் **தவறான** கூற்றைத் தெரிவு செய்க.
   (1) ஆகக் குறைந்த பங்காளர் எண்ணிக்கை இரண்டாகக் காணப்படுவதுடன் ஆகக்கூடிய பங்காளர் எண்ணிக்கை இருபதாகக் காணப்படும்.
   (2) குறிப்பாக ஒரு வணிகத்தை நடத்த பங்காளர்கள் உடன்படுதல் வேண்டும்.
   (3) ஒவ்வொரு பங்காளரும் தனக்காகவும், பிறருக்காகவும் முகவராகவும் முதல்வராகவும் காணப்படுவர்.
   (4) எழுத்து வடிவிலான உடன்படிக்கை இல்லாமல் பங்குடைமை ஒன்றை கொண்டு நடத்துவது சாத்தியமில்லை.
   (5) பங்குடைமையில் சட்ட ரீதியான ஆளுமை காணப்படவில்லை. (......)

8. பங்குகளை அல்லது தொகுதிக் கடன் பத்திரங்களை வாங்கச் செய்வதற்கு பொதுமக்களை அழைப்பதற்காக வரையறுத்த பொதுக் கம்பனி ஒன்றினால் வெளியிடப்படும் ஆவணம்
   (1) அமைப்பு அகவிதி (2) அமைப்புப் புறவிதி (3) நியதிச் சட்டப் பிரகடனப்படுத்தல்
   (4) பிரதிபயன் (5) முன்விவரணம் (......)

9. முயற்சியாண்மை அபிவிருத்தி தொடர்பில் தடையை ஏற்படுத்துகின்ற (hindering) மற்றும் வளர்ச்சியை ஏற்படுத்துகின்ற (fostering) காரணிகள் சில கீழே தரப்படுகின்றது.

A – மனோநிலை (mindset) B – கற்பனையுடைய சிந்தனை (imaginary thinking)
C – முன் மாதிரிகள் (role models) D – அதேமாதிரிப் பின்பற்றுதல் (replication)
E – அனுபவங்கள் F – பாரம்பரியத் தன்மை (being traditional)

மேற்கூறப்பட்டவற்றுள் முயற்சியாண்மை அபிவிருத்தி தொடர்பில் தடைகளை ஏற்படுத்துகின்ற காரணிகளை மட்டும் உள்ளடக்கியுள்ள தொகுதியைத் தெரிவு செய்க.

(1) A, D, F (2) B, C, E (3) B, C, D (4) C, D, E (5) D, E, F (……)

10. காசோலை குறுக்குக்கோடிடல் வகைகள் சில கீழே தரப்பட்டுள்ளது.




பொதுவான (சாதாரண) குறுக்குக் கோடிடல்களை மட்டும் உள்ளடக்கியுள்ள தொகுதியைத் தெரிவு செய்க.

(1) A, B, C (2) A, D, E (3) B, D, E (4) B, E, F (5) C, D, E (……)

11. பின்வருவன இலங்கை மத்திய வங்கியின் சில நோக்கங்கள் மற்றும் தொழிற்பாடுகள் ஆகும்.

A – நாணயக் கொள்கையை நடைமுறைப்படுத்தல்
B – பரிமாற்று வீதக் கொள்கையை நடைமுறைப்படுத்தல்
C – விலை உறுதிப்பாட்டைப் பேணுதல்
D – நாணயங்களை வெளியிடுதலும் வழங்குதலும்
E – நிதி முறைமையில் உறுதித்தன்மையைப் பேணுதல்

மேற்கூறப்பட்டவற்றுள் இலங்கை மத்திய வங்கியின் தொழிற்பாடுகளைக் கொண்டுள்ளது.

(1) A, B, C (2) A, C, E (3) B, D, E (4) C, D, E (5) A, B, D (……)

12. பின்வருவனவற்றுள் காப்புறுதியுடன் தொடர்புபட்ட வகையில் ஒரு கூற்று தவறானதாகும். **தவறான** கூற்றைத் தெரிவு செய்க.

(1) நபரொருவர் தனது உயிரின் மீது வரையறுக்கப்படாத காப்புறுதி செய்தகு நலனைக் கொண்டுள்ளார்.
(2) நபரொருவர் தனது வாழ்க்கைத் துணையின் (spouse) உயிரின் மீது காப்புறுதி செய்தகு நலனைக் கொண்டிருக்கவில்லை.
(3) தங்க நகைகளை அடைவு பிடிப்பவர் (pawn broker) தன்னிடம் அடைவு பிடிக்கப்பட்ட தங்க நகைகளுக்கெதிராக காப்புறுதி செய்தகு நலனைக் கொண்டுள்ளார்.
(4) நபரொருவர் தனது பிள்ளைகளின் அல்லது உறவினர்களின் உயிரின் மீது காப்புறுதி செய்தகு நலனைக் கொண்டிருக்கவில்லை.
(5) ஆயுளுறுதி மற்றும் தனிப்பட்ட விபத்துக்கள் தொடர்பான காப்புறுதிக்கு இழப்பீட்டுத் (நட்டாட்டு) தத்துவம் பொருத்தமானதல்ல. (……)

13. போக்குவரத்துக்கான ஒரு சமமான அபிவிருத்தி அவசியமாக அமைவது

(1) வேகத்தை அறிமுகப்படுத்தவும் பாதுகாப்பான போக்குவரத்து முறைகளுக்காகவும்.
(2) நெடுஞ்சாலைகள், புகையிரதப்பாதைகள், நீர்வழிகளின் அபிவிருத்திக்காக.
(3) துறைமுகங்கள், விமான நிலையங்கள், பேருந்து மற்றும் புகையிரத நிலையங்களின் அபிவிருத்திக்காக.
(4) மேலும் மேலும் பேருந்துகள், லொறிகள், புகையிரதங்கள், விமானங்கள் மற்றும் கப்பல்களை உபயோகிப்பதற்காக.
(5) பாதைகள், தரிப்பிடங்கள், ஊடகங்கள், சக்தி (வலு) ஆகியவற்றின் அபிவிருத்திக்காக. (……)

14. பின்வரும் அட்டவணையில் X நிரலானது தொடர்பாடல் ஊடகங்களையும் Y நிரலானது தொடர்பாடல் முறைகளையும் எடுத்துக் காட்டுகின்றது.

| X | Y |
|---|---|
| A. வாய்மொழி மூலம் | 1. கடிதம் |
| B. எழுத்து வடிவில் | 2. கூட்டங்கள் |
| C. இலத்திரனியல் மூலம் | 3. குரல் அஞ்சல் |
| D. அடையாளங்கள் மற்றும் குறியீடுகள் மூலம் | 4. மணி ஒலி (bell) |
| | 5. ஞாபகக் குறிப்பு (memo) |
| | 6. போக்குவரத்து வெளிச்சங்கள் (traffic lights) |
| | 7. கலந்துரையாடல்கள் |
| | 8. பேஜர்ஸ் (pagers) |

X இற்கும் Y இற்கும் பொருத்தமான இணைப்பைத் தெரிவு செய்க.

(1) A – 2, 7 B – 1, 5 C – 3, 8 D – 4, 6
(2) A – 2, 3 B – 1, 8 C – 4, 7 D – 5, 6
(3) A – 2, 7 B – 1, 5 C – 6, 8 D – 3, 4
(4) A – 2, 8 B – 1, 5 C – 3, 7 D – 4, 6
(5) A – 1, 7 B – 2, 5 C – 3, 8 D – 4, 6 (……)

15. நிறுவனமொன்றின் இலக்குகளை அடைதல் எதன் மூலம் எடுத்துக் காட்டப்படு கின்றது.

(1) முகாமைத்துவச் செயன்முறை (management process)
(2) திட்டமிடல்
(3) ஒழுங்கமைத்தல்
(4) நெறிப்படுத்தல்
(5) கட்டுப்படுத்தல் (……)

16. பின்வரும் அட்டவணையில் X நிரலானது முகாமைத்துவத் தொழிற்பாடுகளையும் Y நிரலானது தொழிற் பாடுகளுக்கான நடவடிக்கைகளையும் எடுத்துக் காட்டுகின்றது.

| X | Y |
|---|---|
| A. திட்டமிடல் | 1. பெறுபேறுகளை அளவிடுதலும், வேறுபாடுகளை இனங்காணுதலும் |
| B. ஒழுங்கமைத்தல் | 2. ஊக்குவித்தலும் தொடர்பாடலும். |
| C. நெறிப்படுத்தல் | 3. அதிகாரம் மற்றும் பொறுப்புக்களை கையளித்தல். |
| D. கட்டுப்படுத்தல் | 4. இலக்குகள் மற்றும் நோக்கங்களை உருவாக்குதல் |

X இற்கும் Y இற்கும் பொருத்தமான இணைப்பைத் தெரிவு செய்க.

(1) A – 1 B – 2 C – 3 D – 4
(2) A – 3 B – 4 C – 2 D – 1
(3) A – 2 B – 3 C – 4 D – 1
(4) A – 4 B – 3 C – 2 D – 1
(5) A – 4 B – 3 C – 1 D – 2 (……)

17. பின்வரும் அட்டவணையில் X நிரலானது சில ஒழுங்கமைத்தல் தத்துவங்களையும் Y நிரலானது அத்தத்துவங்களுக்கான வரைவிலக்கணங்களையும் எடுத்துக் காட்டுகின்றது.

| X | Y |
|---|---|
| A. கட்டளைச் சங்கிலி | 1. ஒரு முகாமையாளருக்கு, நிறுவனத்தினால் வழங்கப்பட்டுள்ள சட்ட ரீதியான வலு. |
| B. கட்டுப்பாட்டு விசாலம் | 2. மேற்பார்வையாளருக்கு, முடிவுகள் பற்றிய அறிக்கை சமர்ப்பிப் பதற்கான கடப்பாடும், வெளியீட்டை நியாயப்படுத்துதலும். |
| C. அதிகாரம் | 3. ஒரு முகாமையாளருக்கு நேரடியாக அறிக்கை சமர்ப்பிக்க வேண்டிய கீழுள்ளவர்களின் (ஊழியர்களின்) எண்ணிக்கை. |
| D. வகைகூறல் | 4. மேல்மட்ட முகாமையில் இருந்து கீழ் மட்ட முகாமைக்கு அதிகாரம் பாய்ந்து செல்லும் முறை (வழி) |

X இற்கும் Y இற்கும் பொருத்தமான இணைப்பைத் தெரிவு செய்க.

(1) A – 1 B – 3 C – 4 D – 2
(2) A – 2 B – 3 C – 1 D – 4
(3) A – 4 B – 3 C – 1 D – 2
(4) A – 3 B – 4 C – 1 D – 2
(5) A – 4 B – 1 C – 3 D – 2 (……)

18. உற்பத்திப்பொருளொன்றை வடிவமைத்தல் மற்றும் உற்பத்தி செய்தல் தொடர்பில் சகல மூலகங்களையும் (கூறுகளையும்) ஒருங்கிணைக்கின்ற மற்றும் கட்டுப்படுத்துகின்ற கணினி அடிப்படையிலான முறைமை எது ?

(1) CAD
(2) CAM
(3) CIM
(4) CNC
(5) ரோபோக்கள் (Robotics) (……)

19. பின்வரும் அட்டவணையில் X நிரலானது தளஅமைப்புக்கான முறைகளையும் Y நிரலானது அத்தள அமைப்புக்களுக்கான வரைவிலக்கணத்தையும் எடுத்துக் காட்டுகின்றது.

| X | Y |
|---|---|
| A. செயன்முறைத் தளஅமைப்பு | 1. ஒத்த தன்மையுடைய பகுதிகள் அல்லது செயன்முறைப்படுத்தலுக்கான தேவைப்பாடுகள் வேலைப் பிரிவுகளில் ஒன்றாக இணைத்து செய்யத் தக்கதாக வசதி செய்யப்பட்டு ஒழுங்குபடுத்தப்பட்டுள்ள ஒரு முறை |
| B. உற்பத்திப்பொருள் தள அமைப்பு | 2. உற்பத்திப் பணிகள் தனித்தனிப் பிரிவுகளில் கொண்டு நடத்தத்தக்க முறையில் வசதி செய்யப்பட்டு ஒழுங்குபடுத்தப்பட்டுள்ள ஒரு முறை |
| C. கலத் தளஅமைப்பு | 3. உற்பத்திச் செயற்பாட்டுக்குத் தேவையான மூலப்பொருள், உபகரணங்கள், ஊழியர்கள் உற்பத்தி நடைபெறும் இடத்துக்கு வரத்தக்கதாக வசதி செய்யப்பட்டு ஒழுங்குபடுத்தப்பட்டுள்ள ஒரு முறை |
| D. நிலையான இடத் தள அமைப்பு | 4. உற்பத்தி நடைமுறையானது தொடர்ச்சியாக ஒரு பகுதியில் இருந்து ஒருபகுதிக்கு ஒரு வரிசை அடிப்படையில் வேலைப் பிரிவுகளில் காணப்படக் கூடியதாக வசதி செய்யப்பட்டு ஒழுங்குபடுத்தப்பட்டுள்ள ஒரு முறை |

X இற்கும் Y இற்கும் பொருத்தமான இணைப்பைத் தெரிவு செய்க.

(1) A – 1 B – 4 C – 2 D – 3
(2) A – 2 B – 1 C – 4 D – 3
(3) A – 4 B – 2 C – 1 D – 3
(4) A – 2 B – 4 C – 3 D – 1
(5) A – 4 B – 1 C – 2 D – 3 (……)

20. பின்வரும் அட்டவணையில் X நிரலானது சந்தைப்படுத்தல் எண்ணக்கருக்களையும் Y நிரலானது அவ்வெண்ணக்கருக்களுக்குப் பொருத்தமான விளக்கக் குறிப்புக்களையும் எடுத்துக் காட்டுகின்றது.

| X | Y |
|---|---|
| A. உற்பத்தி எண்ணக்கரு | 1. இலக்குச் சந்தைக்கான தேவைகளையும், விருப்பங்களையும் வெளிக் காட்டுவதும், போட்டியாளர்களை விடவும் சிறந்த பெறுமதியில் விநியோகித்தலும் |
| B. உற்பத்திப்பொருள் எண்ணக்கரு | 2. விற்பனையை தன் வயப்படுத்தக்கூடிய தன்மையும் மேம்படுத்தல் முயற்சி களும் காணப்படும் பட்சத்தில் நுகர்வோர் உற்பத்திப்பொருட்களைக் கொள்வனவு செய்வார்கள் என்ற நம்பிக்கை. |
| C. விற்பனை எண்ணக்கரு | 3. வாடிக்கையாளருக்கு சேவை புரிவதற்காக ஒரு நிறுவனத்தின் சகல பிரிவுகளும் ஒன்றிணைந்து வேலை செய்தல் என்ற அணுகுமுறை. |
| D. சந்தைப்படுத்தல் எண்ணக்கரு | 4. சந்தையில், நியாயமான விலையில் புதிய அம்சங்களுடன் மிகவும் உயர்ந்த தரமுடைய பொருட்களை அவர்கள் வழங்கினால் அவற்றுக்கு சிறந்த கேள்வி காணப்படும் என்ற நம்பிக்கை. |
| E. முழுமைப் படைப்பு சந்தைப்படுத்தல் எண்ணக்கரு | 5. உற்பத்திப்பொருளொன்று சந்தையில் பரந்த அளவில் நியாயமான விலையில் கிடைக்குமாயின் நுகர்வோர் கொள்வனவு செய்வார்கள் என்ற அணுகுமுறை. |

X இற்கும் Y இற்கும் பொருத்தமான இணைப்பைத் தெரிவு செய்க.

(1) A – 5 B – 1 C – 2 D – 4 E – 3
(2) A – 5 B – 4 C – 2 D – 1 E – 3
(3) A – 4 B – 5 C – 2 D – 1 E – 3
(4) A – 5 B – 4 C – 3 D – 1 E – 2
(5) A – 1 B – 3 C – 5 D – 2 E – 4 (……)

21. பின்வருவன சந்தைப்படுத்தற் கலவையில் உள்ளடங்கும் சில கருவிகள் (tools) ஆகும்.

A – பண்டக்குறி
B – கழிவு
C – விளம்பரப்படுத்தல்
D – விநியோக வழிமுறைகள்
E – போக்குவரத்து
F – பொதிகட்டல்
G – கொடுப்பனவு முறைகள்
H – தரம்
I – நேர் சந்தைப்படுத்தல்
J – உத்தரவாதங்கள் (warranties)
K – பொதுசனத் தொடர்புகள்
L – நிகழ்வுகளும் அனுபவங்களும்

மேற்குறித்தவற்றுள் ஒரு உற்பத்திப்பொருட் கருவிகளை **மட்டும்** உள்ளடக்கியுள்ள தொகுதியைத் தெரிவு செய்க.

(1) A, C, F, I (2) B, C, E, L (3) C, I, K, L (4) D, H, I, J (5) A, F, H, J (……)

22. உயர்தரமான பொருட்களுக்கு ஒரு நியாயமான குறைந்த விலையை நிர்ணயித்தல் எவ்வாறு அழைக்கப்படும் ?

(1) கிரயத்துடன் குறித்த வீத இலாபம் வைத்து விலையிடல் (markup pricing)
(2) இலக்குத் திரும்பல் விலையிடல் (target return pricing)
(3) உணரத்தக்க பெறுமதியில் விலையிடல் (perceived value pricing)
(4) பெறுமதி விலையிடல் (value pricing)
(5) நடைமுறை வீத விலையிடல் (going rate pricing) (……)

**23.** பின்வரும் அட்டவணையில் X நிரலானது நிதி முகாமையாளர்களின் பிரதான தீர்மானங்களையும் Y நிரலானது அப்பிரதான தீர்மானங்களுக்கு பொருத்தமான சிறிய தீர்மானங்களையும் எடுத்துக் காட்டுகின்றது.

| X | Y |
|---|---|
| A. நீண்டகால முதலீட்டு தீர்மானங்கள் | 1. வியாபார கடன்கொடுத்தோர் மீதான தீர்மானம். |
| B. குறுங்கால முதலீட்டுத் தீர்மானங்கள் | 2. வியாபாரக் கடன்பட்டோர் மீதான தீர்மானம். |
| C. நீண்டகால நிதியிடல் தீர்மானங்கள் | 3. நிறுத்தி வைத்த இலாபங்கள் மீதான தீர்மானம். |
| D. குறுங்கால நிதியிடல் தீர்மானங்கள் | 4. வணிகத்தை நவீனப்படுத்துவது தொடர்பான தீர்மானம். |

X இற்கும் Y இற்கும் பொருத்தமான இணைப்பைத் தெரிவு செய்க.

(1) A – 3 B – 1 C – 4 D – 2
(2) A – 2 B – 3 C – 4 D – 1
(3) A – 4 B – 1 C – 3 D – 2
(4) A – 3 B – 4 C – 2 D – 1
(5) A – 4 B – 2 C – 3 D – 1 (……)

**24.** பின்வருவனவற்றுள் மூலதனச் சந்தையின் உபசந்தைகளை மட்டும் உள்ளடக்கியுள்ள தொகுதியைத் தெரிவு செய்க.

(1) பங்குச் சந்தை, திறைசேரி உண்டியற் சந்தை, உள்நாட்டு அந்நியச் செலாவணிச் சந்தை.
(2) திறைசேரி முறிச் சந்தை, தாபன (கூட்டுரு) முறிச் சந்தை, பங்குச் சந்தை
(3) திறைசேரி முறிச் சந்தை, தாபன (கூட்டுரு) முறிச் சந்தை, வணிகப் பத்திரச் சந்தை
(4) திறைசேரி உண்டியற் சந்தை, திறைசேரி முறிச் சந்தை, வணிகப் பத்திரச் சந்தை
(5) திறைசேரி உண்டியற் சந்தை, திறைசேரி முறிச் சந்தை, தாபன (கூட்டுரு) முறிச் சந்தை (……)

**25.** மிகப் பெரியளவிலான கூறப்பட்ட மூலதனத்துடன் மிகவும் உயர்ந்தளவிலான கம்பனிகளைப் பட்டியற்படுத்துவதற்கான பட்டியற்திரை (board) எவ்வாறு அழைக்கப்படும்.

(1) திரிசவி பட்டியற்திரை
(2) இரண்டாம் தரப் பட்டியற்திரை
(3) பிரதான பட்டியற்திரை
(4) மீறுவோர் (default) பட்டியற்திரை
(5) காசுப் பட்டியற்திரை (……)

**26.** பின்வருவன ஊழியர் ஆட்சேர்ப்பு முறைகள் சிலவாகும்.

A – தொழிற் சந்தைக் கண்காட்சி (job fair)
B – திறமைப் பட்டியல்
C – இணைய வெப்தளம்
D – அக இணையம்
E – மரபுரிமைத் திட்டம்
F – தொழில்சார் நிறுவகங்கள்
G – கல்வி நிறுவனங்கள்
H – ஊழியர் சிபாரிசுகள் (employee referrals)

இவற்றுள் உள்வாரி ஆட்சேர்ப்பு முறைகளை மட்டும் உள்ளடக்கியுள்ள தொகுதி எது ?

(1) A, B, D, E (2) B, C, F, H (3) C, D, E, F (4) B, D, E, H (5) D, E, F, G (……)

**27.** பின்வரும் அட்டவணையில் X மற்றும் Y நிரல்கள், மனித வள முகாமைத்துவத்துக்குப் பொருத்தமான சில தகவல்களை எடுத்துக் காட்டுகின்றது.

| X | Y |
|---|---|
| A. ஊழியருடைய உரிமைகள் | 1. வேலை ஒப்பந்தத்தின் பிரகாரம் வேலையை பெற்றுக்கொள்வது. |
| B. ஊழியர்களது பொறுப்பு | 2. சிறந்த ஒரு வேலைச் சூழலைப் பேணுதல். |
| C. உடைமையாளரது உரிமைகள் | 3. தொழில்சார் விபத்துக்களில் இருந்து பாதுகாக்கப்படுவதை உறுதி செய்தல். |
| D. உடைமையாளரது பொறுப்பு | 4. நிறுவனத்தின் இலக்குகளை நிறைவேற்றுவதற்காக வேலை செய்தல். |

X இற்கும் Y இற்கும் பொருத்தமான இணைப்பைத் தெரிவு செய்க.

(1) A – 2 B – 1 C – 3 D – 4
(2) A – 1 B – 2 C – 3 D – 4
(3) A – 3 B – 2 C – 1 D – 4
(4) A – 4 B – 3 C – 1 D – 2
(5) A – 3 B – 4 C – 1 D – 2 (……)

**28.** பின்வரும் அட்டவணையில் X நிரலானது தகவல்கள் வகைப்படுத்தப்படும் அடிப்படைகளையும், Y நிரலானது ஒவ்வொரு அடிப்படைக்கும் பொருத்தமான வகைப்படுத்தலையும் எடுத்துக் காட்டுகின்றது.

| X | Y |
|---|---|
| A. மூலம் (source) | 1. நிகழ் காலம் மற்றும் இறந்த காலம். |
| B. தன்மை (nature) | 2. அளவு ரீதியானவை. தர ரீதியானவை (quantitative & qualitative) |
| C. முகாமைத்துவ மட்டங்கள் | 3. உள்வாரியானவை வெளிவாரியானவை. |
| D. காலம் (time) | 4. உபாய ரீதியானவை, செயற்பாட்டு ரீதியானவை. |

X இற்கும் Y இற்கும் பொருத்தமான இணைப்பைத் தெரிவு செய்க.

(1) A – 2 B – 3 C – 4 D – 1
(2) A – 3 B – 2 C – 4 D – 1
(3) A – 3 B – 4 C – 2 D – 1
(4) A – 1 B – 2 C – 4 D – 3
(5) A – 4 B – 2 C – 3 D – 1 (……)

**29.** நிறுவனமொன்றின் முற்று முழுதான தொடர்பாடல்களையும் மேம்படுத்துவதற்கு சொல் முறைவழிப்படுத்தல் (word processing), மின்னஞ்சல், குரல் அஞ்சல், பேஜர்ஸ் (pagers) ஆகிய தகவல் தொழினுட்ப கருவிகளைப் பயன்படுத்தும் தகவல் முறைமை எவ்வாறு அழைக்கப்படும் ?

(1) கொடுக்கல்வாங்கல் செயன்முறைப்படுத்தல் முறைமை (TPS)
(2) அலுவலக தன்னியக்க முறைமை (OAS)
(3) முகாமைத்துவ உதவி முறைமை (MSS)
(4) தீர்மான உதவி முறைமை (DSS)
(5) நிறைவேற்று உதவி முறைமை (ESS) (……)

**30.** முற்று முழுதான வணிகத் திட்டம் பற்றிய ஒரு முன் கருத்தை (pre - idea) எப்பகுதியை வாசிப்பதன் மூலம் பெற்றுக்கொள்ள முடியும் ?

(1) உள்ளடக்கப் பக்கம் (2) நிறைவேற்றுகைச் சுருக்கம் (3) வணிக விவரணம்
(4) சந்தைப்படுத்தல் திட்டம் (5) நிதித் திட்டம் (……)

**2.1.3. வினாப்பத்திரம் I இல் 1 தொடக்கம் 30 வரையான வினாக்களுக்கு எதிர்பார்க்கப்பட்ட விடைகளும் புள்ளி வழங்கும் திட்டமும்.**

| வினா இலக்கம் | விடை | வினா இலக்கம் | விடை |
|---|---|---|---|
| 01. | 4 | 16. | 4 |
| 02. | 3 | 17. | 3 |
| 03. | 2 | 18. | 3 |
| 04. | 5 | 19. | All |
| 05. | 2 | 20. | 2 |
| 06. | 3 | 21. | 5 |
| 07. | 4 | 22. | 4 |
| 08. | 5 | 23. | 5 |
| 09. | 1 | 24. | 2 |
| 10. | 2 | 25. | 3 |
| 11. | 5 | 26. | 4 |
| 12. | 2 | 27. | 5 |
| 13. | 5 | 28. | 2 |
| 14. | 1 | 29. | 2 |
| 15. | 1 | 30. | 2 |

**அட்டவணை 05**

**சரியான ஒரு விடைக்கு 02 புள்ளி வீதம் மொத்தம் 60 புள்ளிகள்**

**2.1.4** **வினாப்பத்திரம் I இல் 1 தொடக்கம் 30 வரையான வினாக்களுக்கு விடையளித்தல் தொடர்பான அவதானம் :**




வரைபு 05

## 2.1.5 வினாப்பத்திரம் I இல் 1 தொடக்கம் 30 வரையான வினாக்களுக்கான தெரிவை மேற்கொண்ட விதம் (சதவீதத்தில்)

| வினா இலக்கம் | சரியான தெரிவு | ஒவ்வொரு தெரிவும் செய்யப்பட்ட மாணவர் சதவீதம் | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | 1 | 2 | 3 | 4 | 5 | Missing |
| 1 | 4 | 3% | 4% | 6% | **83%** | 4% | - |
| 2 | 3 | 1% | 1% | **96%** | 1% | 1% | - |
| 3 | 2 | 13% | **80%** | 2% | 3% | 2% | - |
| 4 | 5 | 0% | 5% | 3% | 2% | **90%** | - |
| 5 | 2 | 4% | **81%** | 2% | 7% | 6% | - |
| 6 | 3 | 9% | 11% | **70%** | 4% | 5% | 1% |
| 7 | 4 | 4% | 3% | 7% | **77%** | 9% | - |
| 8 | 5 | 11% | 7% | 2% | 6% | **74%** | - |
| 9 | 1 | **85%** | 6% | 4% | 3% | 2% | - |
| 10 | 2 | 2% | **67%** | 21% | 8% | 2% | - |
| 11 | 5 | 1% | 8% | 5% | 10% | **76%** | - |
| 12 | 2 | 10% | **58%** | 13% | 8% | 11% | - |
| 13 | 5 | 19% | 7% | 6% | 1% | **67%** | - |
| 14 | 1 | **95%** | 1% | 3% | 0% | 1% | - |
| 15 | 1 | **31%** | 48% | 5% | 10% | 6% | - |
| 16 | 4 | 3% | 4% | 1% | **81%** | 11% | - |
| 17 | 3 | 8% | 2% | **74%** | 12% | 4% | - |
| 18 | 3 | 19% | 21% | **26%** | 14% | 20% | - |
| 19 | All | 13% | 1% | 44% | 9% | 24% | - |
| 20 | 2 | 14% | **65%** | 11% | 2% | 8% | - |
| 21 | 5 | 5% | 3% | 4% | 3% | **85%** | - |
| 22 | 4 | 15% | 15% | 27% | **36%** | 6% | 1% |
| 23 | 5 | 6% | 5% | 16% | 11% | **62%** | - |
| 24 | 2 | 9% | **53%** | 10% | 18% | 9% | 1% |
| 25 | 3 | 17% | 4% | **75%** | 2% | 2% | - |
| 26 | 4 | 6% | 6% | 5% | **80%** | 3% | - |
| 27 | 5 | 3% | 5% | 10% | 3% | **79%** | - |
| 28 | 2 | 15% | **75%** | 4% | 1% | 5% | - |
| 29 | 2 | 14% | **58%** | 11% | 9% | 7% | 1% |
| 30 | 2 | 7% | **63%** | 25% | 2% | 3% | - |

**அட்டவணை 06**

* ஒவ்வொரு வினாக்களின் கீழும் சரியான விடைத் தெரிவினைத் தெரிவுசெய்துள்ள மாணவர் சதவீதங்களை நிறம் தீட்டப்பட்டுக் காட்டப்பட்டுள்ளது.
* வினாக்களுக்கான தெரிவினைத் தெரிவு செய்யாத அல்லது ஒன்றிற்கு மேற்பட்ட தெரிவுகளைத் தெரிவு செய்துள்ள மாணவர்களின் சதவீதத்தையே Missing என்பதன் மூலம் காட்டப்பட்டுள்ளது.
* 19 ஆம் வினாவிற்கான அனைத்துத் தெரிவுகளும் சரியானது எனக் கருதப்பட்டுள்ளது.

### 2.1.6 வினாப்பத்திரம் I இல் 1 தொடக்கம் 30 வரையான வினாக்களுக்கு விடையளித்தல் தொடர்பான முடிவும் ஆலோசனைகளும் :

I ஆம் வினாப்பத்திரத்தில் 1 தொடக்கம் 30 வரையிலான பல்தேர்வு வினாக்களுக்கு விடையளிக்கும் பொழுது அதிகமான மாணவர்கள் 15, 18, 22 ஆகிய வினாக்களுக்கு விடையளிப்பதில் தோல்வியடைந்துள்ளனர்.

வணிக முகாமைத்துவம் தொடர்பான 15 ஆம் வினாவிற்காகச் சரியான விடையாக 1 ஆம் தெரிவினைத் தெரிவு செய்துள்ள சதவீதம் 31% மாகக் காணப்பட்டாலும் 48% மாணவர்கள் இரண்டாம் தெரிவினையே சரியான விடையாகத் தெரிவு செய்துள்ளனர். அமைப்பொன்றின் எதிர்பார்த்த நோக்கத்தை அடைந்து கொள்வதற்காக அனைத்து முகாமைத்துவக் கருமங்களும் தேவையானது என மாணவர்கள் அறியாதுள்ளனர். வினாவின் இறுதிப் பகுதியை வினாவின் கருவாகவுள்ளது என பிழையான விளக்கத்தைப் பெற்றுத் தெரிவினைத் தெரிவு செய்துள்ளனர். அனைத்து வினாத் தெரிவினையும் நன்றாக வாசித்து விளக்கத்தைப் பெற்றதன் பின்னர் சரியான தெரிவினைத் தெரிவு செய்வதற்கான ஆலோசனையை வழங்குவதல் வேண்டும்.

செயற்பாட்டு முகாமைத்துவம் தொடர்பான 18ஆம் வினாவிற்குச் சரியான விடையான 3ஆம் தெரிவினை 26% மாணவர்கள் தெரிவு செய்துள்ளனர். 1 ஆம் தெரிவினை 19% மாணவர்களும் 2ஆம் தெரிவை 21% மாணவர்களும் 4ஆம் தெரிவை 14% மாணவர்களும் 5ஆம் தெரிவை 20% மாணவர்களுமாக நான்கு தெரிவுகளை அனேகமாக ஒத்த தன்மை கொண்ட பரம்பலுடன் கூடிய துலங்களைக் காட்டுவதானது CAD, CAM, CIM, CNC போன்ற நவீன தொழிநுட்ப முறைகள் தொடர்பிலான விளக்கம் கூடுதலான மாணவர்களிடம் காணப்படாமையினாலேயாகும். எனவே அவ் எண்ணக்கருக்கள் மற்றும் அவற்றுக்கிடையேக் காணப்படும் வேறுபாடுகள் தொடர்பாக மாணவர்களுக்கு ஆக்கபூர்வமான ரீதியில் விளக்கம் பெறுவதற்கு வழிவகைகள் செய்தல் வேண்டும்.

சந்தைப்படுத்தல் முகாமைத்துவம் தொடர்பான 22ஆம் வினாவிற்குச் சரியான விடையான 4ஆம் தெரிவினை 36% மாணவர்கள் மட்டுமே தெரிவு செய்துள்ளனர். விலையிடல் முறையின் வரைவிலக்கணங்கள் தொடர்பான சரியான விளக்கமொன்றில்லாதிருத்தலே இதற்குரிய காரணமாகும். எனவே விலையிடல் தொடர்பான அறிவு பூர்வமான விளக்கத்திளைனப் பெற்றுக் கொள்வதற்கு வழிவகை செய்தல் வேண்டும்.

## 2.1.7 வினாப்பத்திரம் I இல் 31 தொடக்கம் 50 வரையான வினாக்களும் எதிர்பார்க்கப்பட்ட விடைகளும் புள்ளி வழங்கும் திட்டமும்

- **31** தொடக்கம் **40** வரையுள்ள வினாக்களுக்குப் பொருத்தமான சொற்களுடன் வெற்றிடங்களை நிரப்பி விடை எழுதுக.

**31.** வணிகமொன்றின் அகச் சூழலை அறிந்து கொள்வதன் மூலம் ................................ மற்றும் ................................ ஆகியவற்றை இனங்காண முடிவதுடன், புறச் சூழலை அறிந்து கொள்வதன் மூலம் ................................... மற்றும் ................................... இனங்காண முடியும்.

**விடைகள்**

* பலம், பலவீனம் **(இரண்டையும் குறிப்பிட 01 புள்ளி)**
* வாய்ப்புக்கள், அச்சுறுத்தல்கள் **(இரண்டையும் குறிப்பிட 01 புள்ளி)**

**32.** (அ) நல்லதைச் செய் மற்றும் கூடாததைச் செய்யாதே என்பதனால் கருதப்படுவது ............................................ ............................................................................................................ ஆகும்.

(ஆ) சூழல் சீரழிவுக்குக் காரணமான அல்லது கலாசார ரீதியாகப் பொருத்தமற்ற நடவடிக்கைகளை உள்நாட்டு மக்களின் காணிகளில் மேற்கொள்வதனை இல்லாது செய்வதற்காக ஐக்கிய நாடுகளின் அங்கத்தவர்களால் கையொப்பம் இடப்பட்ட ஒப்பந்தம் ..................................................... என அழைக்கப்படும்.

**விடைகள்**

(அ) ஒழுக்கம் / வணிக ஒழுக்கம் (Business ethics) **(01 புள்ளி)**
(ஆ) கியோட்டோ உடன்படிக்கை (Kyoto protocol) **(01 புள்ளி)**

**33.** வருமான வரி மற்றும் கூட்டுரு வரி ஆகியவை ................................... வரி ஆகக் கருதப்படுவதுடன், சுங்கத் தீர்வைகள், மற்றும் கலால் வரிகள் ஆகியவை ................................... வரி ஆகக் கருதப்படுகின்றன.

**விடைகள்**

(அ) நேர் வரி **(01 புள்ளி)**
(ஆ) நேரில் வரி **(01 புள்ளி)**

**34.** (அ) அதனுடைய தாய் நிறுவனத்தில் இருந்து சட்ட ரீதியாகத் தனிப்பட்ட மற்றும் வேறுபட்ட வகையில் காணக்கூடியதாக இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட வணிக நிறுவனங்கள் ஒன்றாக இணைந்து உருவாக்கும் ஒரு புதிய வணிக அலகு ..................................................... என அழைக்கப்படும்.

(ஆ) அங்கீகாரம் வழங்குபவரின் வியாபாரப் பெயரைப் பயன்படுத்துவதன் மூலம் உற்பத்திப்பொருட்களை உற்பத்தி செய்வதற்கும், விநியோகிப்பதற்கும் உரிமை வழங்கப்படும் அங்கீகார வணிகம் ................................... என அழைக்கப்படும்.

**விடைகள்**

(அ) கூட்டுமுயற்சி (Joint venture) **(01 புள்ளி)**
(ஆ) உற்பத்தி அங்கீகார வணிகம் (Manufacturing franchising) **(01 புள்ளி)**

**35.** (அ) வணிக நிறுவனமொன்றின் ஊழியர்களது ஆக்கத்திறனூடாக உருவாகும் முயற்சியாண்மை .................... .............................. என அழைக்கப்படும்.

(ஆ) சிறிய மற்றும் நடுத்தர அளவுக் கைத்தொழிலாளர்களுக்கு நிதி உதவிகளை வழங்குவதற்காக அரச ஈட்டு முதலீட்டு வங்கியும், கைத்தொழில் அபிவிருத்திச் சபையும் இணைந்து செயற்படுத்தும் கடன் திட்டம் ................................... என அழைக்கப்படும்.

**விடைகள்**

(அ) உள்ளக முயற்சியாண்மை (Inrapreneurship) **(01 புள்ளி)**
(ஆ) திரிய (Diriya) **(01 புள்ளி)**

36. (அ) ATM அட்டையை அதற்கான தன்னியக்க ரெல்லர் இயந்திரத்தினுள் உட் செலுத்திய பின்னர் ஒரு கொடுக்கல் வாங்கலை மேற்கொள்ள வேண்டுமாயின் அதற்கான ........................................... பதிவு செய்வது தேவையானதாகும்.

(ஆ) தற்போது உலகளாவிய ரீதியில் மிகவும் பிரசித்தி பெற்ற இருவகைக் கடன் அட்டைகளாவன ........................ ............................. யும் .......................................................... யும் ஆகும்.

**விடைகள்**

(அ) தனிப்பட்ட இரகசிய இலக்கத்தை / இரகசிய இலக்கத்தை (PIN) **(01 புள்ளி)**

(ஆ) விசா அட்டையும் (Visa card), மாஸ்ரர் அட்டையும் (Master card) **(இரண்டையும் குறிப்பிட 01 புள்ளி)**

(American express எனக் குறிப்பிட்டிருப்பினும் புள்ளி வழங்கவும்).

37. (அ) வழங்கப்பட்ட காலம் தொடர்பில், ஒரு நாட்டின் ஏற்றுமதி செய்யப்பட்ட பொருட்களின் பெறுமதிக்கும் இறக்குமதி செய்யப்பட்ட பொருட்களின் பெறுமதிக்கும் இடையிலான வித்தியாசம் ........................................ என அழைக்கப்படும்.

(ஆ) இணையத்தளத்தினூடாக பொருட்களை வாங்குதல் மற்றும் விற்றல் தொடர்பில் மேற்கொள்ளப்படும் ஏனைய முந்திய மற்றும் பிந்திய சகல நடவடிக்கைகளும் ................................... என அழைக்கப்படும்.

**விடைகள்**

(அ) வர்த்தக நிலுவை (Balance of trade) **(01 புள்ளி)**

(ஆ) இலத்திரனியல் வணிகம் (e-business) **(01 புள்ளி)**

38. (அ) ஒரே வகையான குழுக்கள் தொடர்புபட்ட வகையில் முழுச் சந்தையின் சிறிய ஒரு பிரிவாகக் காணப்படுவது ................................... என அழைக்கப்படும்.

(ஆ) பின்வரும் அட்டவணையின் இடைவெளிகளை நிரப்புக.

| சந்தைப்படுத்தல் கலவை விற்பனையாளரது நோக்கில் | சந்தைப்படுத்தல் கலவை நுகர்வோரது நோக்கில் |
|---|---|
| 1. உற்பத்திப்பொருள் | 1. ................................................................................ |
| 2. விலை | 2. ................................................................................ |
| 3. இடம்/விநியோகம் | 3. ................................................................................ |
| 4. மேம்படுத்தல் | 4. ................................................................................ |

**விடைகள்**

(அ) சந்தைத் துண்டமாக்கல் (Market segmentation) **(01 புள்ளி)**

(ஆ)

1. நுகர்வோர் தேவைகளும் விருப்பங்களும் (Consumers' needs & wants)
2. கிரயம் (Cost)
3. வசதி (Convenience)
4. தொடர்பாடல் (Communication) **(நான்கைக் குறிப்பிட 01 புள்ளி)**

39. (அ) கொழும்பு பங்குப் பரிவர்த்தனை நிலையத்தின் நடவடிக்கைகளை மேற்பார்வை செய்வதற்காகவும் முறைப் படுத்துவதற்காகவும் உருவாக்கப்பட்ட நிறுவகம் ......................................... என அழைக்கப்படும்.

(ஆ) கொழும்பு பங்கு பரிவர்த்தனை நிலையத்தில் பங்குக் கொடுக்கல்வாங்கலைத் தீர்த்து வைக்கும் மையமாக (நிறுவனமாக) பணியாற்றும் நிறுவகம் .................................................. என அழைக்கப்படும்.

**விடைகள்**

(அ) இலங்கைப் பிணைகள் பரிமாற்று ஆணைக்குழு (Security & Exchange Commission / SEC) **(01 புள்ளி)**

(ஆ) மத்திய வைப்பக முறைமை (தனியார்) கம்பனி {Central Depositary System (pvt) Company / CDS} **(01 புள்ளி)**

**40.** (அ) இணைய வெப்தளங்களில் இருந்து கோவைகளை (files) மாற்றல் (transfer) செய்வதற்கும், பதிவிறக்கம் (download) செய்வதற்கும் பயன்படுத்தப்படும் முறை ........................................ என அழைக்கப்படும்.

(ஆ) ஒரு நபருக்கான அல்லது ஒரு நிறுவனத்துக்கான இணைய வசதிகளை ஒரு .................................. ஊடாகப் பெற்றுக் கொள்ள முடியும்.

**விடைகள்**

(அ) கோப்பு மாற்றுச் செம்மை (File Transfer Protocol) **(01 புள்ளி)**

(ஆ) இணையச் சேவை வழங்குபவர் {Internet Service Provider / ISP} **(01 புள்ளி)**

● **41** தொடக்கம் **50** வரையுள்ள வினாக்களுக்கு மிகவும் பொருத்தமான விடைகளைத் தரப்பட்டுள்ள வெற்றிடங்களில் எழுதுக.

**41.** உற்பத்தியானது தன்மை அடிப்படையில் மூன்று பிரதான பிரிவுகளாகவும் துறை அடிப்படையில் மூன்று பிரதான பிரிவுகளாகவும் வகைப்படுத்தப்பட முடியும். பின்வரும் அட்டவணையைப் பயன்படுத்தி தனித்தனியாக அம்மூன்று பிரதான பிரிவுகளையும் குறிப்பிடுக.

| தன்மை அடிப்படையில் | துறை அடிப்படையில் |
|---|---|
| 1. ........................................................ | 1. ........................................................ |
| 2. ........................................................ | 2. ........................................................ |
| 3. ........................................................ | 3. ........................................................ |

**விடைகள்**

(அ) தன்மை அடிப்படையில் - முதனிலை, இரண்டாம்நிலை, மூன்றாம் நிலை

**(மூன்றையும் குறிப்பிட 01 புள்ளி)**

(ஆ) துறை அடிப்படையில் - விவசாயம், கைத்தொழில், சேவைகள்

**(மூன்றையும் குறிப்பிட 01 புள்ளி)**

**42.** (அ) நியாயமற்ற வியாபார நடைமுறைகளில் இருந்து நுகர்வோரைப் பாதுகாப்பதற்காக இலங்கையில் உருவாக்கப் பட்டுள்ள அரசாங்க நிறுவகம் எது ?

..............................................................................................................................

(ஆ) நீர் குறிப்பிட்ட இந்நிறுவகம் எந்த அமைச்சின் கீழ் கட்டுப்படுத்தப்படுகின்றது என்பதைக் குறிப்பிடுக.

..............................................................................................................................

**விடைகள்**

(அ) நுகர்வோர் விவகார அதிகார சபை (Consumer Affair Authority) **(01 புள்ளி)**

(ஆ) தற்போது - உள்நாட்டு வர்த்தக கூட்டுறவு அமைச்சு **(01 புள்ளி)**

* முன்னர் - வர்த்தக, நுகர்வோர் விவகார அமைச்சு

(வர்த்தக அமைச்சு எனக் குறிப்பிட்டிருப்பினும் புள்ளி வழங்கவும்).

**43.** சர்வதேச ரீதியில் ஏற்றுக்கொள்ளப்பட்ட கூட்டுறவுக் கொள்கைகள் **நான்கைக்** குறிப்பிடுக.

1. ..............................................................................................................................
2. ..............................................................................................................................
3. ..............................................................................................................................
4. ..............................................................................................................................

**விடைகள்**

1. சுயேட்சையான திறந்த அங்கத்துவம் (Voluntary Open Membership)
2. ஜனநாயகமான அங்கத்துவக் கட்டுப்பாடு (Democretic Member Control)
3. சுயாதீனமானதும் சுதந்திரமானதும் (Autonomy and Independence)
4. சமூகப் பொருளாதாரப் பங்களிப்பு (Social Economic Participation)
5. கூட்டுறவுக் கல்வி, பயிற்சி மற்றும் தகவல்கள்
6. பிரதேச, தேசிய, சர்வதேச கூட்டுறவுச் சங்கங்களுக்கிடையிலான ஒத்துழைப்பு
7. சமூகம் தொடர்பான அக்கறை (Concern for Society)

**(நான்கைக் குறிப்பிட 02 புள்ளி)**

**(இரண்டை அல்லது மூன்றைக் குறிப்பிட்டால் 01 புள்ளி)**

44. (அ) "சுயாதீனமாகவும் சொந்தமாகவும் உருவாக்கிச் செயற்படுத்தக்கூடியதும் அதனது துறைவாரியான செயற்பாட்டில் மேலாதிக்கம் செலுத்த முடியாததுமான ஒன்று சிற்றளவு வணிகமாகும்" மேற்கூறப்பட்ட வரைவிலக்கணம் எந் நிறுவனத்தினூடாக முன்வைக்கப்பட்டது ?

........................................................................................................................................

(ஆ) இலங்கையின் பொருளாதார அபிவிருத்திக்கு சிற்றளவு வணிகங்களின் **நான்கு** பிரதான பங்களிப்புக்களைக் குறிப்பிடுக.

1. ........................................................................................................................

2. ........................................................................................................................

3. ........................................................................................................................

4. ........................................................................................................................

## விடைகள்

(அ) Institute of Small business Administration (USA) **(01 புள்ளி)**

(ஆ)

1. வேலை வாய்ப்பினை வழங்குதல்.
2. வறுமை ஒழிப்பு / வருமானப் பங்கீடு.
3. புதிய பொருட்களை அறிமுகப்படுத்துதல்.
4. பாரிய நிறுவனங்களுக்குத் தேவையான சேவையை வழங்குதல்.
5. பிரதேச அபிவிருத்தி.
6. உள்நாட்டு வளங்களின் உச்சப் பயன்பாடு.
7. தேசிய உற்பத்தியின் அபிவிருத்தியில் செல்வாக்குச் செலுத்துதல்.
8. சமூக சேவைகளில் ஈடுபடுதல்.
9. பாரிய வணிகங்கள் மேற்கொள்ளாத வணிக நடவடிக்கைகளில் ஈடுபடுதல்.
10. விசேட பொருட்கள், சேவைகளை (பாரம்பரிய) வழங்குதல்.

**(நான்கைக் குறிப்பிட 01 புள்ளி)**
**(பொருத்தமான ஏனைய விடைகளுக்கும் புள்ளி வழங்கவும்)**

45. (அ) EU, WTO, ASEAN, SAARC ஆகிய அமைப்புக்களுள், எதனை வியாபாரக் கூட்டணியாகக் (trade bloc) கருதமுடியாது ?

........................................................................................................................................

(ஆ) இறக்குமதி செய்த பொருட்களை துறைமுகத்துக்கு வெளியே கொண்டுவந்து செயன்முறைக்கு உட்படுத்தியோ அல்லது செயன்முறைக்கு உட்படுத்தாமலோ மீண்டும் ஏற்றுமதி செய்வதற்கு உபயோகிக்கப்படும் சொற்பதம் யாது ?

........................................................................................................................................

## விடைகள்

(அ) WTO **(01 புள்ளி)**

(ஆ) மீள் ஏற்றுமதி (Re export) **(01 புள்ளி)**

46. (அ) நிறுவனமொன்றின் நோக்கம், அடிப்படை இலக்குகள் மற்றும் தத்துவங்களை விவரிக்கும் கூற்று யாது ?

........................................................................................................................................

(ஆ) சரியான தீர்மானம் எடுத்தலில் ஊழியர்களுக்கு விட்டுக் கொடுக்கும் தலைவரது தலைமைத்துவப் பாங்கு (leadership style) எது ?

........................................................................................................................................

## விடைகள்

(அ) இலட்சியநோக்குக் கூற்று (Mission statement) **(01 புள்ளி)**

(ஆ) தலையிடாத் தலைமைத்துவம் (Laizerfair Leadership) **(01 புள்ளி)**

**47.** (அ) தொடர்ச்சியாக ஒரு உற்பத்தி வரிசையில் ஒரே இயல்பான பொருட்களை பேரளவு அடிப்படையில் உற்பத்தி செய்யும் உற்பத்தி முறை எது ?

.....................................................................................................................................

(ஆ) உள்ளீட்டுக்கும் வெளியீட்டுக்கும் இடையிலான தொடர்பு வீதத்திற்கு வழங்கப்படும் சொற்பதம் யாது ?

.....................................................................................................................................

**விடைகள்**

(அ) பாய்ச்சல் / பாய்ச்சல் வரிசை / பாரிய அளவிலான / செயன்முறை உற்பத்தி (Flow / Flow line / Large scale / Process method production). **(01 புள்ளி)**

(ஆ) உற்பத்தித்திறன் (Productivity) **(01 புள்ளி)**

**48.** (அ) ஒருவரது கல்வி, அனுபவம், திறன்கள் உள்ளடங்கலாக வேலைக்கு மிகவும் பொருத்தமான நபரின் வகையை விவரிக்கும் கூற்று எது ?

.....................................................................................................................................

(ஆ) முக்கியமான பதவி நிலைகளுக்குச் சாத்தியமான பிரதியீடுகளை இனங்காண்பதற்கு வடிவமைக்கப்பட்டுள்ள திட்டத்தின் பெயர் யாது ?

.....................................................................................................................................

**விடைகள்**

(அ) வேலை குறித்துரைத்தல் (Job specification) **(01 புள்ளி)**
(ஆ) மரபுரிமைத் திட்டம் (Succession plan) **(01 புள்ளி)**

**49.** பின்வரும் அட்டவணையில் X நிரலானது ஒரு கணினி மயப்படுத்தப்பட்ட தகவல் முறைமையின் கூறுகளுக்கான (மூலகங்களுக்கான) உதாரணங்களைத் தருகின்றது. இவ்வுதாரணங்களுக்கு மிகவும் பொருத்தமான கூறுகளை Y நிரலில் அதற்கு எதிராக எழுதுக.

| X | Y |
|---|---|
| 1. வின்டோஸ் (Windows) | 1. ........................................ |
| 2. கணினி நிகழ்ச்சித் தயாரிப்பாளர் (Computer Programmer) | 2. ........................................ |
| 3. திரை (monitor) | 3. ........................................ |
| 4. விதிகளும் பிரமாணங்களும் (Rules and regulations) | 4. ........................................ |

**விடைகள்**

1. மென்பாகம்.
2. வன்பாகம்.
3. உயிர்ப்பாகம்.
4. செயற்பாட்டு முறை.

**(நான்கைக் குறிப்பிட 02 புள்ளி)**
**(இரண்டை அல்லது மூன்றைக் குறிப்பிட்டால் 01 புள்ளி)**

**50.** (அ) வணிகத் திட்டமொன்றில், மதிப்பிடப்பட்ட காசுப் பெறுவனவுகள், கொடுப்பனவுகள் மற்றும் காசு மீதிகளை எடுத்துக் காட்டும் ஆவணத்தின் பெயர் என்ன ?

.....................................................................................................................................

(ஆ) வணிகத் திட்டமொன்றின் எப்பிரிவில் மதிப்பிடப்பட்ட இயந்திரங்களுக்கான கிரயம் மற்றும் மூலப்பொருட்களுக்கான தேவைப்பாடுகள் போன்றன எடுத்துக் காட்டப்படுகின்றது.

.....................................................................................................................................

**விடைகள்**

(அ) எதிர்வுகூறப்பட்ட காசுப் பாய்ச்சல் கூற்று / காசுப் பாய்ச்சல் கூற்று **(01 புள்ளி)**
(ஆ) செயற்பாட்டுத் திட்டம் (operational plan). **(01 புள்ளி)**

**2.1.8 வினாப்பத்திரம் I இல் 31 தொடக்கம் 50 வரையான வினாக்களுக்கு விடையளித்தல் தொடர்பான முழுமையான அவதானிப்பு**




வரைபு 6

2.1.9 வினாப்பத்திரம் I இல் 31 தொடக்கம் 50 வரையான வினாக்களுக்கு புள்ளிகள் பெற்றுள்ள விதம் :

| வினா இலக்கம் | புள்ளிகள் பெற்ற சதவீதம் | | | |
|---|---|---|---|---|
| | புள்ளிகள் 0 | புள்ளிகள் 1 | புள்ளிகள் 2 | துலங்களை வெளிக்காட்டாத |
| 31 | 10% | 3% | 87% | - |
| 32 | 18% | 38% | 43% | 1% |
| 33 | 15% | 2% | 82% | 1% |
| 34 | 35% | 38% | 26% | 1% |
| 35 | 53% | 43% | 2% | 2% |
| 36 | 6% | 35% | 59% | - |
| 37 | 36% | 43% | 20% | 1% |
| 38 | 39% | 35% | 25% | 1% |
| 39 | 49% | 27% | 22% | 2% |
| 40 | 70% | 21% | 7% | 2% |
| 41 | 25% | 12% | 62% | 1% |
| 42 | 31% | 47% | 21% | 1% |
| 43 | 56% | 19% | 21% | 4% |
| 44 | 40% | 57% | 2% | 1% |
| 45 | 15% | 36% | 48% | 1% |
| 46 | 42% | 39% | 18% | 1% |
| 47 | 22% | 34% | 43% | 1% |
| 48 | 40% | 38% | 20% | 2% |
| 49 | 41% | 39% | 17% | 3% |
| 50 | 25% | 41% | 33% | 1% |

அட்டவணை 07

## 2.1.10 வினாப்பத்திரம் I இல் 31 தொடக்கம் 50 வரையான வினாக்களுக்கு விடையளித்தல் தொடர்பான அவதானிப்பும், ஆலோசனைகளும் :

I ஆம் வினாப்பத்திரத்தின் 31 தொடக்கம் 40 வரையிலான வினாக்களுக்குப் பொருத்தமானப் பதங்களைப் பயன்படுத்தி இடைவெளிகளை நிரப்புதல் தொடர்பான வினாக்களுக்கு விடையளிக்கும் போது அதிகமான மாணவர்கள் 34, 35, 37, 38, 39, 40 ஆகிய வினாக்களுக்கு விடையளிப்பதில் பின்னடைந்துள்ளனர்.

வணிக அமைப்புக்கள் தொடர்பான 34ஆம் வினாவிற்கு 26% மானவர்களே முழுமையான புள்ளியைப் பெற்றுக்கொண்டுள்ளனர். இந்நிலைமையானது மிக பலவீனமான நிலையையே எடுத்துக் காட்டுகின்றது. வணிக அமைப்புக்கள் தொடர்பான அடிப்படை விளக்கமொன்றில்லாதிருப்பதே இதற்குரிய காரணமாகும். எனவே அனைத்து வணிக அமைப்புக்கள் தொடர்பாகவும் செயல்முறை உதாரணங்களினூடாக மாணவர்களுக்கு விளக்கத்தை பெற்றுக் கொள்ளும் வகையில் கற்றல் - கற்பித்தல் செயலொழுங்கை ஒழுங்கமைத்துக் கொள்ளல் வேண்டும்.

முயற்சியாண்மை, சிற்றளவு வணிகங்கள் தொடர்பான 35 ஆம் வினாவிற்கு 2% மானவர்களே மொத்தப்புள்ளிகளைப் பெற்றுள்ளனர். முயற்சியாண்மை தொடர்பான சரியான விளக்கம் மாணவர்களிடம் காணப்படாமையே இதற்குரிய காரணமாகும். எனவே கற்றல் - கற்பித்தல் செயலொழுங்கை ஒழுங்கமைக்கும் பொழுது முயற்சியாண்மையின் வகைகள் தொடர்பாக விஷேட கவனம் செலுத்துதல் வேண்டும். அதே போன்று சிற்றளவு, நடுத்தர அளவிலான கைத்தொழிலாளர்களுக்காக நடைமுறைப்படுத்தப்படும் புதிய கடன் திட்ட முறைமைகள் தொடர்பான விளக்கம் மாணவர்கள் மத்தியில் சென்றடையவில்லை. அக்கடன் திட்ட முறைகள் தொடர்பான விளக்கத்தினைப் பெற்றுக் கொள்வதற்காக மாணவர்களை ஊக்கப்படுத்தலுக்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுதல் வேண்டும்.

வியாபாரம் தொடர்பான 37 ம் வினாவிற்காக 20% மாணவர்களே மொத்தப்புள்ளிகளைப் பெற்றுள்ளனர். இவ்வினாவின் “அ” பகதியில் இறக்குமதி, ஏற்றுமதப் பொருட்களின் பெருமானம் என்பதற்குப் பதிலாக மொத்த இறக்குமதி, மொத்த ஏற்றுமதி எனும் விளக்கத்தைப் பெற்று விடையளித்ததே இதற்கான காரணமாகும். எனவே அவ்வெண்ணக்கருவினது வேறுபாட்டினை மாணவர்களுக்கு தெளிவுறுத்துதல் வேண்டும். அதே போன்று இலத்திரனியல் வியாபாரம், இலத்திரனியல் வணிகம் போன்ற எண்ணக்கருக்கல் தொர்பான விளக்கமொன்று மாணவர்களிடம் காணப்படவில்லை. எனவே இவ்வெண்ணக்கரு தொடர்பாகத் தனித்தனியாக அவற்றிற்கிடையிலான வேறுபாடுகளைப் பற்றிய தெளிவான விளக்கமொன்றை மாணவர்களுக்கு வழங்கப்படுதல் வேண்டும்.

சந்தைப்படுத்தல் முகாமைத்துவம் தொடர்பான 38 ஆம் வினாவிற்கான 25% மாணவர்களே மொத்தப்புள்ளியைப் பெற்றுள்ளனர். அவ்வினாவின் “அ” பகுதியில் சந்தைப்துண்டமாக்கல் எனும் எண்ணக்கருவைப் பற்றிச் சரியான விளக்கத்தைப் பெற்றிருக்காமையும் “ஆ” பகுதியில் சந்தைப்படுத்துவோரின் கோணத்தில் சந்தைக் கலவை மாறிகள் ஒன்றிற்கொன்று பொருந்தக்கூடியவாறு வாடிக்கையாளர்களின் பார்வையில் சந்தைப்படுத்தல் கலவையின் மாறிகளை குறிப்பிட்டுக் காட்டாதிருத்தல் இதற்கான காரணமாகும். இவ்வெண்ணக்கரு தொடர்பாக மாணவர்களுக்குச் சிறந்த முறையில் விளக்கத்தைப் பெற்றுக் கொள்ளக்கூடியவாறு கற்றல் - கற்பித்தல் செயலொழுக்கங்களைத் திட்டமிடுதல் வேண்டும்.

நிதி முகாமைத்துவம் தொடர்பான 39 ஆம் வினாவிற்கான மொத்தப் புள்ளியை 22% மாணவர்களே பெற்றுக் கொண்டுள்ளதுடன் 49% மாணவர்கள் எவ்விதப் புள்ளிகளையும் பெற்றுக் கொள்ளவில்லை. பங்குச் சந்தை தொடர்பிலான நிறுவனங்கள் தொடர்பாக சரியானதும் உறுதியானதுமான விளக்கத்தைப் பெற்றிருக்காமையே இதற்குரிய காரணமாகும். பங்குச் சந்தை தொடர்பாக நடைமுறை ரீதியான அறிவினை அதிகரிக்கச் செய்வதற்காக கற்றல் - கற்பித்தல் பெயன்முறையின் போது கருத்தரங்குகள், களச்சுற்றுளூாக்களை ஒழுங்கு செய்தல் போன்ற முறைகள் பின்பற்றுதல் மிகவும் வினைத்திரண் கொண்டதாக இருக்கும். அதே போன்று வகுப்பறையில் முன்வைப்பதற்கான (Presentation) சந்தர்ப்பங்களையும் வழங்குதல் வேண்டும்.

தகவல் முறைமையுடன் தொடர்புடைய 40 ஆம் வினாவிற்காக 7% மாணவர்களே பூரணமான புள்ளிகளைப் பெற்றுள்ள அதேவேலை 70% மாணவர்கள் எந்தவிதப் புள்ளிகளையும் பெற்றுக்கொள்ளவில்லை. தகவல் முறைமை தொடர்பாக செயல்துமுறை ரீதியான அறிவு மாணவர்களிடம் காணப்படாமையே இதற்குரிய காரணமாகும். செயற்பாட்டு செயன்முறைகளின் போது மாணவர்களுக்குச் சந்தர்ப்பங்களை வழங்குவதன் மூலம் இந்நிலைமையிலிருந்து தவிர்த்துக் கொள்ள முடியும்.

அரசும் வணிகம் தொடர்பான 42 ஆம் வினாவிற்காக 21% மாணவர்களே மொத்தப் புள்ளியைப் பெற்றுள்ளனர். அவ்வினாவானது நடைமுறை ரீதியான வினாவொன்றாக இருப்பதே இதற்குரிய காரணமாகும். இலங்கையில் வணிகம் தொடர்பாக அரச நிருவனங்கள் பற்றிய நடைமுறை ரீதியான அறிவு மாணவர்களிடத்தில் காணப்படாமையை அறியக் கூடியதாக உள்ளது. எனவே அந்நிருவனங்களது சரியான பெயர்கள், அவற்றின் காலத்திற்கேற்ற மாற்றங்கள் என்பவை தொடர்பாக கவனத்திற் கொள்ளப்படல் வேண்டும் என மாணவர்களுக்கு அறியச் செய்தல் வேண்டும்.

வணிக அமைப்புக்கள் தொடர்பான 43 ஆம் வினாவிற்காக 21% மாணவர்களே மொத்தப்புள்ளிகளைப் பெற்றுள்ளனர். 56% மாணவர்கள் எவ்விதப் புள்ளியும் பெற்றுக்கொள்ளவில்லை. சர்வதேச ரீதியாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கூட்டுறவுக் கொள்கைகள் தொடர்பான அறிவு அருகிச் செல்வது இதற்குரிய காரணமாகும். விடையளிக்கும் பொழுது ஆக்கபூர்வமான அறிவினை பயன்படுத்துவதற்கு மாணவர்களை ஊக்கப்படுத்தல் வேண்டும்.

வணிக முகாமைத்துவம் தொடர்பான 46 ஆம் வினாவிற்காக 18% மாணவர்கள் பூரணமான புள்ளிகளைப் பெற்றுள்ளனர். செயன்முறை (பாய்ச்சல்) எண்ணக்கரு, தலைமைத்துவப் பாணி என்பன தொடர்பாக தெளிவானதும் தீர்க்கமானதுமான விளக்கம் மாணவர்களிடம் காணப்படாமையே இதற்குரிய காரணங்களாகும். தூரநோக்கு, செயற்பாடு (பாய்ச்சல்) போன்ற எண்ணக்கருக்கள் தொடர்பாகவும், அவ்வெண்ணக்கருக்களிடையே காணப்படும் வேறுபாடுகள் பற்றியும் தெளிவானதும், உருதியானதுமான விளக்கமொன்றை மாணவர்களுக்குப் பெற்றுக் கொடுத்தல் வேண்டும். வணிக நிருவனங்கள் பலவற்றை நடைமுறை ரீதியான உதாரணங்களுடன் தூ ர நோக்கு, இலட்சிய நோக்கு என்பன தொடர்பாக மாணவர்களைக் கொண்டு ஒப்படைகளை மேற்கொள்வதில் ஈடுபடுத்தச் செய்யவும். அதே போன்று தலைமைத்துவப் பாத்திரத்தையும், அப்பாத்திரத்திற்குரிய பண்புகள் தொடர்பாகவும் மாணவர்களுக்கு விளக்கமளித்தல் வேண்டும்.

மணிதவள முகாமைத்துவம் தொடர்பான 48 ஆம் வினாவிற்கான மொத்தப் புள்ளிகளை 20% மாணவர்கள் பெற்றுள்ளனர். வேளைக் குறித்துறைத்தல், மரபுரிமைத்திட்டம் போன்ற எண்ணக்கரு தொடர்பாக மாணவர்களிடத்தில் போதியளவிலான அறிவற்றிருப்பதே இதற்குரிய காரணங்களாகும். தொழில் விபரம் வேளைக் குறித்துறைத்தல் என்பவற்றின் அட்டவணைகளை நடைமுறை ரீதியாக மாணவர்களைக் கொண்டு தயாரிப்பதன் மூலம் அவற்றில் உள்ளடக்கப்பட வேண்டிய விடயங்கள் தொடர்பானவை போன்று அவ்வட்டவணைகளுக்கிடையே காணப்படும் வேறுபாடுகள் பற்றியும் தெளிவானதும் சரியானதுமான விளக்கத்தினைப் பெற்றுக் கொடுத்தல் வேண்டும். அதே போன்று அக , புற ஈர்ப்பு வழிமுறைகள் தொடர்பாகவும் மாணவர்களை அறியச் செய்வதற்கான படிமுறைகள் மேற்கொள்ளுதல் வேண்டும்.

தகவல் முறைமை தொடர்பான 49 ஆம் வினாவிற்காக 17% மாணவர்களே பூரணமான புள்ளிகளைப் பெற்றுக் கொண்டுள்ளனர். தகவல் முறைமை தொடர்பாக மாணவர்களிடம் காணப்படும் அறிவு குறைவாகக் காணப்படுவதே இதற்குரிய காரணமாகும். தகவல் முறைமை தொடர்பாக நடைமுறை ரீதியான செயற்பாடுகள் மூலம் கற்றல் - கற்பித்தல் செயல் முறைகள் ஒழுங்கமைக்கப்படுவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளுதல் வேண்டும்.

## 2.2 வினாப்பத்திரம் II உம் விடையளிக்கப்பட்டமை தொடர்பான தகவல்களும்

### 2.2.1 வினாப்பத்திரம் II இன் கட்டமைப்பு

**நேரம் 03 மணித்தியாலங்களாகும். மொத்தப் புள்ளிகள் 100 ஆகும்.**

இவ்வினாப்பத்திரமானது இரு பிரிவுகளைக் கொண்டது.

I ஆம் பகுதி - கட்டமைக்கப்பட்ட கட்டுரை வகையிலான வினாக்கள் 4 ஆகும்.

II ஆம் பகுதி - கட்டமைக்கப்பட்ட கட்டுரை வகையிலான வினாக்கள் 4 ஆகும்.

* ஒவ்வொரு பிரிவுகளிலிருந்து குறைந்தது இரு வினாக்கள் வீதம் தெரிவு செய்து 5 வினாக்களுக்கு விடையளித்தல் வேண்டும்.

* ஒரு வினாவிற்கு 20 புள்ளிகள் வீதம் மொத்தப் புள்ளிகள் 100 ஆகும்.

* இறுதிப் புள்ளி கணிப்பீடானது I ஆம் வினாத்தாளுக்கான புள்ளிகள் = 100

II ஆம் வினாத்தாளுக்கான புள்ளிகள் = 100

இறுதிப் புள்ளிகள் = 200 ÷ 2

= 100

## 2.2.2 வினாப்பத்திரம் II - எதிர்பார்க்கப்பட்ட விடைகள், புள்ளி வழங்கும் திட்டம், விடையளித்தல் தொடர்பான அவதானிப்புக்களும், முடிவுகளும், ஆலோசனைகளும்

**வினாப்பத்திரம் II இல் ஒவ்வொரு வினாக்களுக்கும் விடையளிக்கப்பட்டமை தொடர்பான அவதானிப்பு, வரைபடம் 2, 3, 4.1, 4.2, 4.3 என்பவற்றின் அடிப்படையில் இது தயாரிக்கப்பட்டுள்ளது. வினாக்களுக்கு உரிய வரைபடங்கள் அவ்வவ் வினாவினதும் அவதானிப்பு, முடிவுகளுடனும் உள்ளது.**

### வினாப்பத்திரம் II - பகுதி I

### வினா இலக்கம் - 01

**1.** *பின்வரும் வரைவிலக்கணத்தைப் பயன்படுத்தி (i), (ii), (iii) ஆகிய வினாக்களுக்கு விடை எழுதுக.*

*"மனிதத் தேவைகளையும் விருப்பங்களையும் திருப்தி செய்வதற்காக பொருட்கள் மற்றும் சேவைகளின் உற்பத்தி, விநியோகம், வியாபாரம் ஆகியவற்றையும் இவற்றுடன் தொடர்புடைய ஏனைய சகல சேவைகளையும் உள்ளடக்கிய இலாபத்தை நோக்காகக் கொண்ட எந்தவொரு நடவடிக்கையும் வணிகமாகும்."*

(i) *முதலீட்டாளர்களுக்கு இலாபத்தை வழங்குவதற்கு மேலதிகமாக வணிகத்தில் இருந்து ஏனைய அக்கறையுடைய தரப்பினர் பெற்றுக்கொள்ளும் அனுகூலங்களை விளக்குக.* *(04 புள்ளிகள்)*

(ii) *மேற்கூறப்பட்ட வரைவிலக்கணத்தில் உள்ளடங்கியுள்ள பின்வரும் எண்ணக்கருக்களை விவரிக்குக.*

(அ) *தேவைகளும் விருப்பங்களும்*

(ஆ) *பொருட்களும் சேவைகளும்* *(04 புள்ளிகள்)*

(iii) (அ) *"வியாபாரத்தை" வரையறுக்க.*

(ஆ) *துணைநிலைச் சேவைகளைக் குறிப்பிடுக.*

(இ) *முதனிலை உற்பத்தியையும் இரண்டாம் நிலை உற்பத்தியையும் ஒப்பிடுக.*

(ஈ) *விநியோகத்தில் பங்குபற்றும் இடைநிலை வணிகர்கள்* **இருவரைக்** *குறிப்பிடுக.* *(04 புள்ளிகள்)*

(iv) (அ) *வணிகமொன்றின் அகச் சூழல் விசைகளைக் குறிப்பிடுக.*

(ஆ) *நீர் குறிப்பிட்ட அவ்விசைகளுள் ஏதாவது* **இரண்டைத்** *தெரிவு செய்து. அவை எவ்வாறு வணிக நடவடிக்கைகளில் (செயல்திறனில்) செல்வாக்கு செலுத்துகின்றன என்பதனைத் தனித்தனியாக விளக்குக.* *(04 புள்ளிகள்)*

(v) *பின்வரும் எண்ணக்கருக்களை வணிக ஒழுக்கத்துடன் தொடர்புபட்ட வகையில் விளக்குக.*

(அ) *உண்மையானவைகளை எடுத்துக் கூறுதல்* (Communicate truthfully)

(ஆ) *மற்றவர்களுக்கு தீங்கு செய்யாதிருத்தல்* (Not causing harm to others) *(04 புள்ளிகள்)*

*(மொத்தம் 20 புள்ளிகள்)*

1. (i)

| | | | |
|---|---|---|---|
| i. | முகாமையாளர் | - | இலாபம், வளர்ச்சி, தீர்மானம் எடுத்தலின் வெற்றி, தொழில் திருப்தி. |
| ii. | ஊழியர் | - | சம்பளமும் ஏனைய சலுகைகளும், பிறநலன்கள், தொழில் பாதுகாப்பு. |
| iii. | வாடிக்கையாளர் | - | நியாயமான விலை, தரமான பொருட்கள் சேவைகள். |
| iv. | வழங்குநர் | - | தொடர்ச்சியான கட்டளையைப் பெறல், உரிய நேரத்தில் கொடுப்பனவைப் பெற்றுக் கொள்ளுதல். |
| v. | கடன்கொடுத்தோர் | - | கடனை மீளப்பெறுதல், வட்டியை உரிய நேரத்தில் பெறுதல். |
| vi. | சமூகம் | - | சமூக நலன், சூழல் பாதுகாப்பு, லேலைவாய்ப்பு. |
| vii. | அரசு | - | வேலைவாய்ப்பு, தேசிய உற்பத்திக்கான பங்களிப்பு, வரிசெலுத்துதல். |
| viii. | போட்டியாளர் | - | சந்தைப் பங்கு, விலை. |
| ix. | எதிர்கால முதலீட்டாளர் | - | |

**நான்கு தரப்பினரைக் குறிப்பிட 4 x ½ = 02 புள்ளிகள்**
**ஒவ்வொரு தரப்பினருக்கும் 2 உதாரணம் வீதம் 4 x ½ = 02 புள்ளிகள்**

(ii) (அ) விருப்பங்கள் - தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு மேற்கொள்ளப்படும் பல்வேறு வழிமுறைகள் விருப்பமாகும்.

**(01 புள்ளி)**

தேவைகள் - மனிதன் உயிர் வாழ்வதற்குத் தேவைப்படும் உடல், உள ரீதியான தேவைப்பாடுகள் தேவையாகும்.

**(01 புள்ளி)**

(ஆ) பொருட்கள் - தொட்டுணரக்கூடிய தன்மையைக் கொண்டுள்ள உற்பத்திகள் பொருட்களாகும்.
சேவைகள் - ஒருவரால் இன்னொருவருக்கு வழங்கும் ஒரு செயற்பாடு சேவையாகும்.

**(01 புள்ளி)**

(இதனைப் பல்வேறு வழிகளில் விளக்கலாம். பொருத்தமான விடைக்குப் புள்ளிகளை வழங்கவும்.)

(iii) (அ) பொருட்கள் சேவைகளை கொடுக்கல்வாங்கல் செயற்பாட்டின் மூலம் உரிமை மாற்றம் செய்யும் நடவடிக்கை வியாபாரம் ஆகும்.

**(01 புள்ளி)**

(ஆ) 1. பணமும் வங்கியும் / நிதி.
2. போக்குவரத்து.
3. காப்புறுதி.
4. தொடர்பாடல்.
5. களஞ்சியப்படுத்தல்.

**(4 விடயங்களுக்கு 01 புள்ளி)**
**(2 அல்லது 3 விடயங்களுக்கு ½ புள்ளி)**

(இ)

| முதனிலை உற்பத்தி | இரண்டாம் நிலை உற்பத்தி |
|---|---|
| 1. இயற்கையில் இருந்து பெற்றுக்கொள்ளும் வளங்களில் எவ்வித மாற்றங்களையும் மேற்கொள்ளாமல் பயன்படுத்துதல்.<br><br>உதாரணம்: விவசாயம், மீன்பிடித்தல், காட்டுத் தொழில், சுரங்கமறுத்தல். | 1. முதனிலை உற்பத்தி மூலம் பெற்றுக்கொள்ளப்பட்ட பொருட்களை உருமாற்றம் செய்தல்.<br><br>உதாரணம்: கட்டட நிர்மாணம். |

(ஈ) 1. சில்லறை வியாபாரி
2. மொத்த வியாபாரி.
3. முகவர்.

**(2 விடயங்கள் X ½ = 01 புள்ளி)**

(iv) (அ) 1. உரிமையாளர்.
2. முகாமையாளர்.
3. ஊழியர்.
4. நிறுவனக் கலாச்சாரம்.
5. நிறுவன ஒழுங்கமைப்பு.
6. வளங்கள்.

**(4 விடயங்கள் X ½ = 02 புள்ளிகள்)**

(ஆ) 1. உரிமையாளர் = தூரநோக்கு, நிதிப்பலம், அனுபவம், அறிவு, திறன்
2. முகாமையாளர் = அறிவு, திறன், அனுபவம்
3. ஊழியர் = பயிற்சி, நேர் மனப்பாங்கு, விசுவாசம், செயற்றிறன்
4. நிறுவனக் கலாச்சாரம் = விசுவாசம், நம்பிக்கை, கலாச்சாரம், மனப்பாங்கு, பழக்கவழக்கம், விழுமியங்கள் (norms).
5. நிறுவன ஒழுங்கமைப்பு= அதிகாரம், வளங்கள் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ள முறைகள், அதிகாரப் பரவலாக்கம், மையப்படுத்தல், திணைக்களப்படுத்தல்.
6. வளங்கள் = நிதி, கட்டடம், இயந்திரம், தகவல், அனுபவம், காலம் போன்ற பௌதிக வளங்களினதும் மனித வளங்களினதும் பலம், பலவீனம்.

**(2 விடயங்கள் x 01 = 02 புள்ளிகள்)**

(v) (அ) உண்மைக்குப் புறம்பான வகையில் விளம்பர நடவடிக்கைகளை மேற்கொள்வதனைத் தவிர்த்து உண்மையான தகவல்களை மட்டுமே வெளிப்படுத்துதல்.

**(02 புள்ளி)**

(ஆ) ஏனைய வணிகங்களின் நன்மதிப்பிற்குத் தீங்கு விளைவிக்கும் நடவடிக்கைகளில் ஈடுபடாது தமது வணிக நடவடிக்கைகளில் ஈடுபடுதல்.

**(02 புள்ளி)**

**1 வது வினாவுக்கு விடையளித்தல் தொடர்பான அவதானிப்புக்களும், முடிவுகளும், ஆலோசனைகளும் :**




வினாப்பத்திரம் II இன் பகுதி I இல் அதிக மாணவர்களால் தெரிவு செய்த வினா இதுவாகும். 1 ஆம் வினாவினை 98% ஆனவர்கள் தெரிவுசெய்துள்ளனர். இவ்வினாவுக்கான மொத்தப்புள்ளி 20 ஆகும்.

இதில் 00 - 05 ஆயிடையில் 5%
06 - 10 ஆயிடையில் 14%
11 - 15 ஆயிடையில் 37%
16 - 20 ஆயிடையில் 44%
எனும் வகையில் புள்ளிகளைப் பெற்றுள்ளனர்.

இவ்வினாவுக்காக 16 அல்லது அதற்கு கூடுதலான புள்ளிகளைப் பெற்றோர் 44% மாவதோடு 5% இத்தினர் 5 அல்லது அதற்கு குறைவான புள்ளிகளையேப் பெற்றுள்ளனர்.




இவ்வினாவின் 11 உபபிரிவுகளிலும் கூடிய இலகுத்தன்மையைக் கொண்ட உபபிரிவாக (ii) (அ) உள்ளதுடன் அதன் இலகுத்தன்மை 93% ஆகும். அத்தோடு இலகுத்தன்மைக் குறைந்த உபபிரிவாக (v) (ஆ) உள்ளதுடன் அதன் இலகுத்தன்மை 46% ஆகும்.

(i) உபபிரிவிற்கான இலகுத்தன்மையானது 73% மாகும். இப்பிரிவு தொடர்பாக உயர் மட்டத்திலான அறிவு மாணவர்களிடத்தில் காணப்பட்டாலும் விடையளிக்கும் பொழுது அக்கரை செலுத்தும் பிரிவினர்களுக்கும் அனுகூலங்களுக்குமிடையிலான தொடர்பினை தெளிவாகச் சுட்டிக்காட்டாதிருந்தமையினால் அடைவு மட்டம் கீழ் நோக்கிச் சென்றுள்ளது. வினாக்களை நன்றாக வாசித்து கிரகித்துக் கொண்டதன் பின்னர் தெளிவாக விடையளித்தலுக்கு வழிகாட்டுதல் வேண்டும்.

(iv) (ஆ) உப பிரிவின் இலகுத்தன்மையானது 70% மாகும். அகச் சூழற் காரணிகளை பெயரிட்டுக் காணப்பட்டாலும் அக்காரணிகளானது வணிகத்தின் செயற்பாட்டில் தாக்கத்தை ஏற்படுத்தும் முறையினை வெவ்வேறாக வெளிப்படுத்திக் காட்டுவதற்கு இயலாமல் போனமையே இதற்குரிய முக்கிய காரணமாகும். எனவே கற்றல் - கற்பித்தல் செயலொழுங்கின் போது வணிகச் சூழற் காரணிகளானவை வணிகச் செயற்பாட்டில் தாக்கத்தை ஏற்படுத்தும் முறையினை மாணவர்களுக்கு தெளிவுறுத்துதல் வேண்டும்.

(v) (அ) உபபிரிவின் இலகுத்தன்மையானது 76% மாகவும் (v) (ஆ) உபபரிவின் இலகுத்தன்மையானது 46% மாகவும் காணப்படுகின்றது. வணிக விழுமிய எண்ணக்கரு சரியாக விளக்கப்படுத்தாது இருந்தமையே இதற்குரிய காரணமாகும். வணிக விழுமியங்கள் தொடர்பாக விரிவான விளக்கம் மாணவர்களுக்கு வழங்கப்படுதல் வேண்டும்.

## வினா இலக்கம் - 02

**2.** (i) (அ) அரசாங்கமொன்றின் **நான்கு** பொருளாதார நோக்கங்களைக் குறிப்பிடுக.

(ஆ) அரசாங்கமொன்றின் பொருளாதார நோக்கங்களை அடைவதற்கு, வணிகம் பங்களிப்புச் செய்யும் **நான்கு** வழிகளைக் குறிப்பிடுக. (04 புள்ளிகள்)

(ii) (அ) அரசாங்கமொன்றின் வருமானத்தின் பிரதான மூலங்கள் நேர் மற்றும் நேரில் வரிகள் ஆகும்.நேர் மற்றும் நேரில் வரிகளை உதாரணங்களுடன் தனித்தனியாக விளக்குக.

(ஆ) "GMP சான்றுறுதிப்படுத்தல்" என்பதனால் கருதப்படுவது யாது ?

(இ) உள்ளூரில் உற்பத்தி செய்யப்படும் சில உணவுப் பொருட்களுக்கு SLS சான்றுறுதிப்படுத்தலைப் பெற்றுக் கொள்வது கட்டாயமானதாகும். அவ்வாறான **இரண்டு** உற்பத்திப்பொருட்களைக் குறிப்பிடுக. (04 புள்ளிகள்)

(iii) ஆஜித், பிரகதி, செபி ஆகியோர் பங்குடைமை ஒன்றைக் கொண்டு நடத்துகின்றனர். பின்வரும் விடயங்கள் சம்பந்தமாக அவர்களுக்கிடையே முரண்பாடுகள் காணப்படுகின்றது.

1. இலாப நட்ட விகிதம்
2. ஈடுபடுத்தப்பட்ட மூலதனத்துக்கான வட்டி
3. பிரகதியும், செபியும் இயங்கும் பங்காளராகக் காணப்படுவதனால் அவர்கள் சம்பளத்தைக் கோருகின்றனர்.
4. ஆஜித் தன்னால் வழங்கப்பட்ட கடனுக்கு வட்டியைக் கோருகின்றார்.

மேற்குறிப்பிடப்பட்ட விடயங்கள் சம்பந்தமாக பங்குடைமை உடன்படிக்கையில் எந்தவொரு கருத்துக்களும் காணப்பட வில்லை. 1890 ஆம் ஆண்டின் பங்குடைமைச் சட்டத்திற்கு இணங்க மேற்கூறப்பட்ட பிரச்சினைகளை அவர்கள் எவ்வாறு தீர்த்துக் கொள்ளமுடியும் என்பதனைத் தனித்தனியாக விளக்குக. (04 புள்ளிகள்)

(iv) 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிச் சட்டத்தின் பிராகாரம் தனியார் கம்பனி ஒன்றைப் பதிவு செய்வதற்காகக் கம்பனிப் பதிவாளரிடம் விண்ணப்பப்பத்திரத்துடன் சமர்ப்பிக்க வேண்டிய ஆவணங்களைக் குறிப்பிட்டு விளக்குக. (04 புள்ளிகள்)

(v) (அ) அங்கீகார வணிகம் என்றால் என்ன விளக்குக.

(ஆ) அங்கீகார வணிகத்தின் மூலம் அங்கீகாரம் வழங்குபவரும், அங்கீகாரம் பெறுபவரும் அடைந்து கொள்ளும் **மூன்று** அனுகூலங்களைத் தனித்தனியாகக் குறிப்பிடுக. (04 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

2. (i) (அ)
1. நிறை தொழில்வாய்ப்பு.
2. நியாயமான வருமானப் பங்கீடு.
3. பொருளாதார வினைத்திறன்.
4. பொருளாதார வளர்ச்சி.
5. விலை உறுதித்தன்மை.
6. வெளிவாரியான உறுதித்தன்மை.
7. தரமான சூழல்.
8. பொருளாதாரசுதந்திரம்.

**(4 விடயங்கள் 4 x ½ = 02 புள்ளிகள்)**

(ஆ)
1. வரி செலுத்துதல்.
2. உள்நாட்டு வளப் பயன்பாடு.
3. அரச சட்டங்கள், பிரமாணங்கள் மற்றும் கொள்கைகளைப் பின்பற்றுதல்.
4. வேலைவாய்ப்புக்குப் பங்களிப்புச் செய்தல்.
5. சூழல் மாசடைவதனை இழிவுபடுத்துதல்.

**(4 விடயங்கள் 4 x ½ = 02 புள்ளிகள்)**

(ii) (அ) **நேர் வரிகள் -** வருமானம் மற்றும் செல்வங்களின் மீது தனிநபர் மற்றும் நிறுவனங்களினால் செலுத்தப்படும் வரியாகும். வரி செலுத்துபவராலேயே நேரடியாகத் தாங்கப்படும்.

உதாரணம்: வருமான வரி, கம்பனி வரி.

**நேரில் வரிகள் -** தனிநபர்கள் மற்றும் நிறுவனங்களின் நுகர்வு, செலவுகள் மீது விதிக்கப்படும் வரியாகும். இவ்வரிச் சுமையினைப் பிறிதொருவர் மீது சுமத்தலாம்.

உதாரணம்: பெறுமதி சேர் வரி (ஏயுவு)இ கலால் வரி, உற்பத்தி வரி

(ஆ) GMP = Good Manufacturing Practices

சிறந்த உற்பத்தி நடைமுறைகள - உற்பத்திச் செயற்பாட்டுத் தரத்தை உறுதிப்படுத்துவதற்காக உற்பத்தியின்போது பரிசோதித்து இலங்கைத் தரக் கட்டளைகள் பணியகத்தினால் வழங்கப்படும் சான்றிதழாகும்.

**(01 புள்ளி)**

(இ) 1. தகரத்தில் அடைக்கப்பட்ட மீன் (உள்ளூர் உற்பத்தி)
2. கறுப்புச் சீனி.
3. பழப்பாகு (Jam).
4. தகரத்தில் அடைக்கப்பட்ட பால்.
5. பழரசம் (Cordial).
6. ஜெலி (Jelly).
7. போத்தலில் அடைக்கப்பட்ட தண்ணீர்.
8. வினாகிரி.
9. பிஸ்கட்.

**(2 விடயங்கள் x ½ = 01 புள்ளி)**

(iii) i பங்காளரிடையே இலாப நட்டம் சமமாகப் பகிரப்படுதல்.
ii பங்காளரால் ஈடுபடுத்தப்பட்ட மூலதனத்துக்கு வட்டி இல்லை.
iii பங்காளர்களுக்கு சம்பளம் வழங்கப்படுவதில்லை.
iv அஜித்தினால் வழங்கப்பட்ட கடனுக்கு 5% வட்டி வழங்கப்படும்.

(iv) i அமைப்பு அகவிதிப் பத்திரம் = கம்பனியின் நோக்கம், முகாமைச் செயற்பாடு, நிர்வாகச் செயற்பாடு, பங்குதாரரின் உரிமை போன்றவற்றை வெளிப்படுத்துதல்.

ii கம்பனியின் பெயர் தொடர்பான விபரம் = கம்பனியின் பெயரானது தற்போது காணப்படும் ஏனைய கம்பனிகளின் பெயரை ஒத்ததாகக் காணப்படவில்லை என்ற உறுதிப் பிரகடனம்.

iii பணிப்பாளர் சம்மதக் கடிதம் = ஆரம்பப் பணிப்பாளர்களாகச் செயற்படுவதற்குச் சம்மதம் தெரிவித்த பணிப்பாளர்களின் சம்மதக் கடிதம்

iv செயலாளர் சம்மதக் கடிதம் = ஆரம்பச் செயலாளராகச் செயற்படுவதற்குச் சம்மதம் தெரிவித்த செயலாளரின் சம்மதக் கடிதம்

**(பெயரிட 4× x ½ = 02 புள்ளிகள்)**
**(விளக்க 4× x ½ = 02 புள்ளிகள்)**

(v) (அ) குறிப்பிட்ட பொருள் அல்லது சேவையை வழங்கும் நிறுவனம் ஒன்று, அப்பொருள் அல்லது சேவையைக் குறிப்பிட்ட பிரதேச சந்தையில் வேறு நிறுவனம் ஒன்று சந்தைப்படுத்துவதற்கு வாய்ப்பை வழங்குவதற்காக மேற்கொள்ளப்படும் ஒரு வணிக முறைமை ஆகும்.

**(01 புள்ளி)**

(ஆ)

| அங்கீகாரம் வழங்குபவர் | அங்கீகாரம் பெறுபவர் |
|---|---|
| 1. முதலீடு இன்றி வணிகம் விரிவடைதல். | 1. பாரிய வணிகத்தில் உட்புகக்கூடிய வாய்ப்புக் கிடைத்தல். |
| 2. மேம்படுத்தல் கிரயங்களை அங்கீகாரம் பெறுபவருடன் பகிர்ந்து கொள்ளலாம். | 2. வணிகம் தோல்வி அடைவதற்கான வாய்ப்புக்கள் குறைவாகக் காணப்படுதல். |
| 3. அங்கீகாரம் பெறுபவரின் வினைத்திறனான செயற்பாட்டின் மூலம் அங்கீகாரம் வழங்குபவர் நன்மை அடையலாம். | 3. மேம்படுத்தல் நடவடிக்கைகள் இலகுவாகக் காணப்படுதல். |
| 4. அங்கீகாரம் பெறுபவரின் முதலீட்டின் மூலம் பிரதிபலன்களைப் பெற்றுக் கொள்ளலாம். | 4. ஆலோசனைகள், பயிற்சிகளை அங்கீகாரம் வழங்குபவரிடம் பெற்றுக்கொள்ளலாம். |
| 5. அங்கீகாரம் பெறுபவரின் மூலம் மேன்மை அடையலாம். | 5. மூலப்பொருட்களைக் குறைந்த செலவில் பெற்றுக் கொள்ளலாம். |
| | 6. மூலதன உதவியைப் பெற்றுக் கொள்ளலாம். |

**(3 விடயங்களுக்கு x ½ = 01 ½ புள்ளிகள்)**

**2 வது வினாவுக்கு விடையளித்தல் தொடர்பான அவதானிப்புக்களும், முடிவுகளும், ஆலோசனைகளும் :**




2 ஆம் வினாவினை 76% மானவர்கள் தேர்ந்தெடுத்துள்ளனர். இவ்வினாவுக்கான புள்ளி 20 ஆகும்.

இதில் 00 - 05 ஆயிடையில் 10%
06 - 10 ஆயிடையில் 21%
11 - 15 ஆயிடையில் 38%
16 - 20 ஆயிடையில் 31%
எனும் வகையில் புள்ளிகளைப் பெற்றுள்ளனர்.

இவ்வினாவிற்காக 16 அல்லது அதற்கு கூடிய புள்ளிகளை 31% வீதத்தினர் பெற்றுள்ளதோடு, 10% மாணவர்கள் 5 அல்லது அதற்குக் குறைவான புள்ளிகளையே பெற்றுள்ளனர்.




இவ்வினாவின் 12 உபபிரிவுளினுள் இலகுத்தன்மை கூடிய உபபிரிவாக (iii) (1) உள்ளதுடன் அதன் இலகுத்தன்மை 91% ஆகும். இலகுத்தன்மை குறைந்த உபபிரிவாக (ii) (ஆ) உள்ளதுடன் அதன் இலகுத்தன்மை 29% ஆகும்.

(ii) (ஆ) உபபிரிவின் இலகுத்தன்மையானது 29% மாகவும் (ii) (இ) உபபிரிவின் இலகுத்தன்மை 38% மாகவும் காணப்படுகின்றது. தேசிய, சர்வதேச நியமங்களை உறுதிப்படுத்துதல் தொடர்பாக மாணவர்களிடம் காணப்படும் அறிவு நடைமுறையில் காணப்படாமையே இதற்குரிய காரணமாகும். புதிய நியமங்களை உறுதிப்படுத்துதல் தொடர்பான அறிவினை நடைமுறைப்படுத்துவதற்காக மாணவர்களிடம் தூண்டுதலை ஏற்படுத்துதல் வேண்டும்.

(iv) உபபிரிவின் இலகுத்தன்மை 53% மாகும். மாணவர்கள், வரையறுக்கப்பட்ட தனியார் கம்பனி ஒன்றைப் பதிவு செய்வதற்காக சமர்ப்பிக்கப்பட வேண்டிய ஆவணங்களைப் பெயரிட்டுக் காட்டப்பட்டிருப்பினும் அவை தொடர்பான விளக்கத்தை அளிக்க முடியாமல் இருந்தமையே இதற்குரிய முக்கிய காரணமாகும். புதிய கம்பனிச் சட்டத்திற்கமைய பதிவு செய்வதற்காக சமர்ப்பிக்கப்பட வேண்டிய ஆவணங்களில் உள்ளடக்க வேண்டிய விடயங்களையும் அவ்வொவ்வொரு ஆவணங்கள் மூலம் எதிர்பார்க்கப்படும் நோக்கங்கள் தொடர்பாக மொத்த விளக்கத்தைப் பெற்றுக் கொடுத்தல் வேண்டும்.

(v) (அ) உபபிரிவின் இலகுத்தன்மை 66% மாகவும் (v) (ஆ) உபபிரிவின் இலகுத்தன்மை 69% மாகவும் காணப்படுகின்றது. அங்கீகார வணிகம் என்பது யாது? என்பதை சரியாக கருத்துக் கூறுவது மாணவர்களுக்கு இயலாமல் போனமையே இதற்குரிய காரணமாகும். வரைவிலக்கணங்களை சரியாக முன் வைத்தல் தொடர்பாக மாணவர்களை அறியச் செய்வதின் ஊடாக இப்பிரச்சினையிலிருந்து தவிர்த்துக் கொள்ள முடியும்.

## வினா இலக்கம் - 03

**3.** (i) (அ) முயற்சியாளர், முயற்சியாண்மை மற்றும் முயற்சி (venture) ஆகியவற்றுக்கிடையே உள்ள தொடர்பை விளக்குக.

(ஆ) முயற்சியாளர்கள் உருவாகுவதில் செல்வாக்குச் செலுத்தும் பின்புலக் காரணிகள் **நான்கை** விளக்குக. (04 புள்ளிகள்)

(ii) 2012 ஆம் ஆண்டுக்கான அரசாங்க வரவு செலவுத் திட்டத்தின் மூலம் சிறிய நடுத்தர வணிகங்களின் (SME) அபிவிருத்திக்காகப் பிரேரிக்கப்பட்ட நடவடிக்கைகளைப் பரிசீலிக்குக. (04 புள்ளிகள்)

(iii) (அ) "பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்டது" என்பது சிறந்த பணத்தின் ஒரு சிறப்பியல்பு ஆகும். ஆனால் பணமானது பொதுவாக ஏற்றுக் கொள்ளப்படவேண்டுமாயின் வேறு சில சிறப்பியல்புகளையும் நிறைவேற்ற வேண்டியுள்ளது. அவ்வாறான சிறப்பியல்புகள் **நான்கைக்** குறிப்பிடுக.

(ஆ) பின்வரும் பண வகைகளை விளக்குக.

1. கடன் பணம்
2. சட்டப் பணம் (04 புள்ளிகள்)

(iv) இலங்கையின் நிதி முறைமையைக் கண்காணிக்கும் அமைப்பு இலங்கை மத்திய வங்கி ஆகும். இலங்கை மத்திய வங்கியின் நோக்கங்களைக் குறிப்பிடுவதுடன் இந்நோக்கங்கள் எவ்வாறு அடைந்து கொள்ளப்படுகின்றன என்பதனையும் விளக்குக. (04 புள்ளிகள்)

(v) தற்போது பெரும்பாலான வங்கிச் சேவைகள் இலத்திரனியல் ஊடாகவே செயற்படுத்தப்படுகின்றது. இலத்திரனியல் வங்கிச் சேவைகள் **நான்கை** விளக்குக. (04 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

### விடைகள்

3. (i) (அ)




**(பூரண விடைக்கு 02 புள்ளிகள்)**

(ஆ) i. குடும்பப் பின்னணி.
ii. கல்வியும் அனுபவமும்.
iii. புதியன புனைதல்.
iv. தலைமைத்துவமும் தூரநோக்கும்.
v. முன்மாதிரியான குணாதிசயம்.

**(4 விடயங்கள் x ½ = 02 புள்ளிகள்)**

(ii) 1. வருடாந்த விற்பனை ரூபா 5 மில்லியன்களுக்குக் குறைவாகக் காணப்படின் ஆரம்பச் செலவினை வரி செலுத்த வேண்டிய வருமானத்தில் இருந்து குறைத்துக் கொள்ளலாம்.

2. குறிப்பிட்ட சில வகையான தொழில்களில் ஈடுபடும் சிறிய நடுத்தர வணிகங்களுக்குத் தேசத்தைக் கட்டி எழுப்பும் வரியில் (Nation building tax) இருந்து விலக்கு அளித்தல்.

3. பொருளாதார சேவைக் கட்டணத்தில் (Economic service fees) இருந்து ரூபா 100 மில்லியன் வரைக்கும் வரிச் சலுகை.

4. வெளிநாட்டில் இருந்து கொள்வனவு செய்யப்படும் இயந்திரங்களுக்கு இறக்குமதி வரிச் சலுகை.

5. வங்கிகள், நிதி நிறுவனங்களின் முதலீட்டு நிதியில் குறைந்தது 10% ஆவது சிறிய நடுத்தர வணிகங்களுக்கு வழங்கப்படுதல் வேண்டும்.

6. மாவட்டமொன்றில் காணப்படும் இலங்கை வங்கி, மக்கள் வங்கி. பிரதேச அபிவிருத்தி வங்கி ஆகியவற்றின் கிளைகளில் குறைந்தது ஒரு கிளையிலாவது சிறிய நடுத்தர வணிகங்களுக்கான வங்கிச் சேவை காணப்படுதல் வேண்டும்.

7. சிறிய நடுத்தர வணிகங்களுக்கான கடனில் 50% அரசாங்கத்தினால் மீள் நிதியிடல் மேற்கொள்ளப்படும்.

8. சிறிய நடுத்தர வணிகங்களுக்கு கடன் வழங்குவதன் மூலம் வங்கிகள் பெற்றுக் கொள்ளும் வருமானத்திற்கான வரி 28%இல் இருந்து 24% ஆகக் குறைக்கப்பட்டுள்ளது.

**(4 விடயங்கள் x 01 = 04 புள்ளிகள்)**

(iii) (அ) i. இலகுவாக அடையாளம் காணக்கூடிய தன்மை
ii. நீடித்த வாழ்வுத் தன்மை.
iii. சிறிய அலகுகளாகப் பிரிபடக்கூடிய தன்மை.
iv. இலகுவாகக் கொண்டு செல்லக்கூடிய தன்மை.
v. போலிகளை உருவாக்க முடியாத தன்மை.
vi. அரிதானதாகவும் பொதுவானதாகவும் இருக்கக்கூடாது.

**(4 விடயங்கள் x ½ = 02 புள்ளிகள்)**

(ஆ) கடன் பணம் - பொருட்கள். சேவைகளைக் கொள்வனவு செய்யப் பயன்படுத்தக்கூடிய, தனிப்பட்டவர்களிடமிருந்து அல்லது வணிக நிறுவனங்களிடம் இருந்து பெற்றுக் கொள்ளக்கூடிய எதுவும் கடன் பணமாகும்.

**(01 புள்ளி)**

சட்டப் பணம் - ஒரு நாட்டின் அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட தாள். குற்றி நாணயங்கள் சட்டப் பணமாகும்.

**(01 புள்ளி)**

(iv) 1. பொருளாதார & விலை உறுதிப்பாடு
2. நிதி நிலை உறுதிப்பாடு

**(2 விடயங்கள் x 01= 02புள்ளிகள்)**

நோக்கங்களை அடைந்து கொள்ளும் விதம்:

1. பணவீக்கத்தைக் கட்டுப்படுத்துவதன் மூலம்.
2. .நாணயக் கொள்கையை நடைமுறைப்படுத்துவதன் மூலம்.
3. நாணய மாற்று வீதக் கொள்கையை நடைமுறைப்படுத்துவதன் மூலம்.
4. நாணயங்களை வெளியிடுதல் மற்றும் வழங்கல் மூலம்.
5. அரச பொருளாதார அறிவுறுத்தல்களைச் செயற்படுத்துவதன் மூலம்.

**(4 விடயங்கள் x ½ = 02 புள்ளிகள்)**

(v) 1. ATM சேவை - வங்கிக் கரும பீடத்தில் பெற்றுக் கொள்ளும் சேவைகளான பண வைப்பு, பணம் மீளப்பெறுதல் போன்ற சேவைகளை இலத்திரனியல் முறையில் பெற்றுக் கொள்ளக்கூடியதாக இருக்கும் சேவை.

2. EFTPOS - பொருட்கள், சேவைகளைக் கொள்வனவு செய்யும்போது கொடுப்பனவைப் பதிவு செய்யும் முறை.

3. On Line Banking : (Home Banking)/(Internet Banking) - இணையத்தின் உதவியுடன் வீட்டில் இருந்தவாறு வங்கிச் சேவைகளைப் பெறக்கூடியதாக இருக்கும் முறைகள்.

4. Tele Banking கையடக்கத் தொலைபேசி, தொலைபேசி என்பவற்றின் உதவியுடன் வங்கிகளுடன் தொடர்பினை ஏற்படுத்திப் பெற்றுக்கொள்ளும் சேவை.

**(குறிப்பிட 4 x ½ = 02 புள்ளிகள்)**
**(விளக்க 4 x ½ = 02 புள்ளிகள்)**

**3 வது வினாவுக்கு விடையளித்தல் தொடர்பான அவதானிப்புக்களும் முடிவுகளும் ஆலோசனைகளும் :**




3 ஆம் வினாவினை 58% மானவர்கள் தெரிவுசெய்துள்ளனர். இவ்வினாவுக்கான புள்ளி 20 ஆகும்.

இதில் 00 - 05 ஆயிடையில் 28%
06 - 10 ஆயிடையில் 50%
11 - 15 ஆயிடையில் 19%
16 - 20 ஆயிடையில் 3%
எனும் வகையில் புள்ளிகளைப் பெற்றுள்ளனர்.

இவ்வினாவிற்காக 16 அல்லது அதற்குக் கூடிய புள்ளிகளை 3% இத்தினர் பெற்றுள்ளதோடு, 28% மானவர்கள் 5 அல்லது அதற்கு குறைவானப் புள்ளிகளையே பெற்றள்ளனர்.




இவ்வினாவின் 8 உபபிரிவுளினுள் இலகுத்தன்மை கூடிய உபபிரிவாக (iii) (அ) - 2 உள்ளதுடன் அதன் இலகுத்தன்மை 69% ஆகும். இலகுத்தன்மை குறைந்த பிரிவான (ii) உள்ளதுடன் அதன் இலகுத்தன்மை 2% ஆகும்.

(i) (அ) உபபிரிவின் இலகுத்தன்மை 62% மாகவும், (1) (அ) உபபிரிவின் இலகுத்தன்மை 53% மாகவும் உள்ளது. முயற்சியாளர், முயற்சியாண்மை வணிகம் போன்றவற்றின் எண்ணக்கருக்கள் தொடர்பான தெளிவான விளக்கம் பெற்றிருக்காமையினால் அவ்வெண்ணக்கருக்களுக்கிடையிலான தொடர்பினைக் காட்டுவதற்கு மாணவர்களினால் இயலாமல் போயுள்ளது. எனவே எண்ணக்கருக்களை விளக்கப்படுத்தும் பொழுது அவற்றிற்கிடையே காணப்படும் தொடர்புகளிலும் வேறுபாடுகளிலும் கவனம் செலுத்துதல் வேண்டும். அதே போன்று முயற்சியாளர் உருவாவதற்காகப் பிண்ணனியாகக் காணப்பட்ட காரணிகளைப் பெயரிட்டுக் குறிப்பிடப்பட்டிருப்பினும் அவற்றைத் தனித்தனியாக விபரித்துக் காட்டுவதற்கு முடியாமல் போயுள்ளது. அக்காரணிகள் தொடர்பாக கலந்துறையாடும் பொழுது மாணவர்களின் கருத்துக்களையும் கருத்திற் கொண்டு விரிவானக் கலந்துறையாடலைக் கட்டியெழுப்புதல் வேண்டும்.

(ii) பகுதியின் இலகத்தன்மை 2% மாகும். 2012 ஆம் ஆண்டின் அரச வரவு செலவுத் திட்ட முன்மொழிவுகள் தொடர்பாக மாணவர்கள் அறியாமல் இருப்பதே இதற்குரிய காரணமாகும். புதிய வரவு செலவுத்திட்ட அறிக்கை, மத்திய வங்கியின் ஆண்டறிக்கை என்பவற்றை வாசிப்பதற்காக மாணவர்களை ஊக்கப்படுத்தல் வேண்டும்.

(iii) (அ) (1) உபபிரிவின் இலகுத்தன்மையானது 37% மாகும். கடன்பணம், சட்டப்பணம் என்பவற்றைச் சரியாக கருத்துக் கூறுவதற்கு இயலாமல் போனதே இதற்கான காரணமாகும். பண வகைகளை வேறுபடுத்தி இனம் காண்பதற்கு முடியுமான வகையில் கற்றல் - கற்பித்தல் செயலொழுக்கங்களை திட்டமிடுதல் வேண்டும்.

(iv) உபபிரிவின் இலகுத்தன்மையானது 49% மாகும். இலங்கை மத்திய வங்கியின் நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்ளும் முறையானது அதாவது மத்திய வங்கியின் கருமங்கள் தொடர்பான தெளிவான விளக்கமொன்று மாணவர்களிடத்தில் காணப்படாமையே இதற்குரிய காரணமாகும். மத்திய வங்கியின் தொழிற்பாடுகள் மூலமே அதன் நோக்கத்தினை நிறைவேற்றிக் கொள்கிறது என மாணவர்களுக்கு புரியச் செய்தல் வேண்டும்.

(v) உபபிரிவின் இலகுத்தன்மையானது 30% மாகும். இலத்திரனியல் வங்கி முறையின் அடிப்படையில் நடைபெறும் சேவைகள் தொடர்பான தெளிவான விளக்கம் மாணவர்களிடம் காணப்படாமையே இதற்குரிய பிரதான காணமாகும் எனவே இலத்திரனியல் வங்கியமைப்பு போன்று புதிய விடயங்கள் தொடர்பாக செயல்முறை ரீதியான அறிவினை இற்றைப்படுத்துதலில் (நடைமுறைப்படுத்துதலில்) மாணவர்களின் கவனத்தைச் செலுத்துவதற்கு ஆவணம் செய்தல் வேண்டும்.

## வினா இலக்கம் - 04

**4.** (i) (அ) பின்வருவன தொடர்பில் காப்புறுதியின் அனுகூலங்களைத் தனித்தனியாக விளக்குக.

1. தனிப்பட்டோர் மற்றும் குடும்பம் (individual and family)
2. வணிக நிறுவனம் (அலகு) (Business entity)

(ஆ) காப்புறுதி தொடர்பில் பின்வரும் பதங்களை விளக்குக.

1. இடரும் காரணமும் (Risk and cause)
2. நட்டங்களும் சேதங்களும் (Loss and damages) (04 புள்ளிகள்)

(ii) கடந்த அண்மைக் காலத்தில் இலங்கையின் வீதிப் போக்குவரத்து முறைமையில் தெற்கு அதிவேக நெடுஞ்சாலை ஒரு குறிப்பிடத்தக்க அபிவிருத்தி ஆகும். வினைத்திறனான வீதிப் போக்குவரத்துக்கு இவ்வகையான அதிவேக நெடுஞ்சாலைகள், எவ்வாறு வளர்ச்சியை ஏற்படுத்த முடியும் என்பதனை விளக்குக. (04 புள்ளிகள்)

(iii) ஒரு தொடர்பாடல் செயன்முறையில் உள்ளடக்கப்பட்டுள்ள துலங்கல் (response), பின்னூட்டல் ஆகியவற்றைத் தனித்தனியாக விளக்குக. (04 புள்ளிகள்)

(iv) "சிறப்புச் சந்தைகள்" என்பது சில்லறை வியாபாரத்தில் காணப்படும் ஒரு புதிய போக்கு ஆகும். நுகர்வோர் இடையே இச்சிறப்புச் சந்தைகள் பிரசித்தமாகக் காணப்படுவதற்கான காரணங்களை ஆராய்க. (04 புள்ளிகள்)

(v) (அ) மொத்த வியாபாரத்தை வரையறுக்குக.

(ஆ) **இரு** வகையான மொத்த வியாபாரிகளைக் குறிப்பிடுக.

(இ) ஒரு மொத்த வியாபாரியின் **நான்கு** தொழிற்பாடுகளைக் குறிப்பிடுக. (04 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

## விடைகள்

4. (i) (அ) தனிப்பட்டோர் மற்றும் குடும்பம் (Individual and family).

i. ஒருவர் மரணம் அல்லது அங்கவீனம் அடையும்போது அவருக்கு அல்லது அவரில் தங்கி வாழ்பவருக்கு பண ரீதியாக நன்மைபெற முடிதல்.
ii. ஓய்வு பெறும் பொழுது நன்மை அடைதல்.
iii. தங்கி வாழ்வோரின் கல்வி, திருமணம் தொடர்பான கொடுப்பனவைப் பெற முடிதல்.
iv. சத்திர சிகிச்சைக்கக் கொடுப்பனவுகளைப் பெற முடிதல்.

**(01 புள்ளி)**

வணிக நிறுவனம் (அலகு) (Business entity).

1. சகல வணிக இடர்களில் இருந்தும் பாதுகாப்பைப் பெற்றுக் கொள்ளுதல்.
2. வணிக நடவடிக்கை தொடர்ந்து இயங்குவதற்கு உதவுதல்.
3. வணிகம் தொடர்பான பாதுகாப்பை ஏற்படுத்துவதன் மூலம் முதலீட்டினை அதிகரித்தல்.

**(01 புள்ளி)**

(ஆ) இடர் - நட்டம் ஏற்படக்கூடிய நிகழ்தகவு இடர் ஆகும். **(½ புள்ளி)**

காரணம் - நட்டத்தை ஏற்படுத்தும் பல்வேறு செயற்பாடுகள் காரணம் ஆகும். **(½ புள்ளி)**

நட்டம் - சொத்துக்களுக்கு ஏற்படும் பணப் பெறுமதியான சேதம் நட்டம் ஆகும். **(½ புள்ளி)**

சேதம் - காரணத்தை அடிப்படையாகக் கொண்டு சொத்துக்களுக்கு ஏற்படும் சேதம் **(½ புள்ளி)**

(ii)
1. விரைவாகப் பயணத்தை மேற்கொள்ள.
2. நேரம் மீதப்படுத்தப்படும் - குறைவான காலப்பகுதியில் குறித்த இடத்தினைச் சென்றடைய முடிதல்.
3. கிரயம் குறைவடையும் - எரிபொருள் செலவு குறையும்.
4. வசதியாகச் செல்லக்கூடியதாக இருத்தல்.
5. பாதுகாப்புக் கூடியது - செல்லும் மார்க்கம், ஊடகம் தரமுடையதாக இருத்தல்.
6. ஏனைய வீதிகளில் வாகன நெரிசல் குறைவடைதல்.
7. போக்குவரத்தின் தரம் பேணப்படும்.

**(4 விடயங்கள் x 01 = 04 புள்ளிகள்)**

(iii) துலங்கல் (response) - தகவல் பெற்றுக்கொள்ளப்பட்ட பின்னர், தகவல் பெறப்பட்டவரால் வெளிப்படுத்தப்படும் நடவடிக்கை.

**(02 புள்ளிகள்)**

பின்னூட்டல் - தகவல் கிடைக்கப் பெற்றது அல்லது விளங்கிக்கொள்ளப்பட்டது என்பது தொடர்பாகக் கிடைக்கப் பெறும் பதில்.

**(02 புள்ளிகள்)**

(iv) i. வாடிக்கையாளரின் தேவைகள் அனைத்தையும் ஒரே கூரையின் கீழ் பெற்றுக் கொள்ளலாம்.
ii. சுயசேவை விற்பனை முறை.
iii. வாகனத் தரிப்பிட வசதி.
iv. ஏனைய சேவைகளைப் பெற்றுக் கொள்ளல்
உதாரணம் : வங்கி, மருந்துச்சாலை, சிற்றுண்டிச்சாலை
v. குளிரூட்டப்பட்ட அமைப்புக்கள்.
vi. பொருட்களின் தரம் உயர்வாகக் காணப்படுதல்.
vii. சிநேகபூர்வமான ஊழியர் படை.
viii. பல்வேறுபட்ட மேம்படுத்தல் முறைகள்.
ix. பொருட்களை மீளப்பெற்றுக்கொள்ளுதல் தொடர்பான கொள்கை.
x. இலத்திரனியல்கொடுப்பனவு முறைகள் மூலம் கொடுப்பனவுகளை மேற்கொள்ள முடிதல்.
xi. ஏனைய ஏற்றுக் கொள்ளக்கூடிய விடைகள்

**(4 விடயங்கள் x 01 புள்ளி = குறிப்பிட 04 புள்ளிகள்)**

(v) (அ) மீள் விற்பனை செய்வதனை நோக்கமாகக் கொண்டு பொருட்களைக் கொள்வனவு விற்பனை செய்தல். **(01 புள்ளி)**

(ஆ) i. உற்பத்தி மொத்த வியாபாரி.
ii. சுயாதீன மொத்த வியாபாரி.
iii. மொத்த வியாபார வணிகர்.
iv. மொத்த வியாபார முகவர்.

**(2 விடயங்கள் x ½ புள்ளி = 01 புள்ளி)**

(இ) i. கொள்வனவு செய்தல்.
ii. விற்பனை செய்தல்.
iii. களஞ்சியப்படுத்தல்.
iv. போக்குவரத்து வசதி.
v. சந்தை ஆய்வு.
vi. நிதி வசதிகளைப்பெறுதல்.
vii. மேம்படுத்தல்.
viii. இடரினை ஏற்றுக்கொள்ளுதல்.
ix. விநியோகம் செய்தல்.

**(4 விடயங்கள் x ½ புள்ளி = 02 புள்ளிகள்)**

**4 வது வினாவுக்கு விடையளித்தல் தொடர்பான அவதானிப்புக்களும், முடிவுகளும், ஆலோசனைகளும் :**




4 ஆம் வினாவினை 53% மானவர்கள் தெரிவுசெய்துள்ளனர். வினாப்பத்திரம் II இன் பகுதி I இல் குறைந்தளவானவர்களால் தெரிவுசெய்யப்பட்ட வினா இதுவாகும். இவ்வினாவுக்கான புள்ளி 20 ஆகும்.

இதில் 00 - 05 ஆயிடையில் 10%
06 - 10 ஆயிடையில் 30%
11 - 15 ஆயிடையில் 40%
16 - 20 ஆயிடையில் 20%
எனும் வகையில் புள்ளிகளைப் பெற்றுள்ளனர்.

இவ்வினாவிற்காக 16 அல்லது அதற்கு கூடிய புள்ளிகளை 20% வீதத்தினர் பெற்றுள்ளதோடு, 10% மானவர்கள் 5 அல்லது அதற்கு குறைவானப் புள்ளிகளையே பெற்றள்ளனர்.




இவ்வினாவின் 10 உபபிரிவுளினுள் இலகுத்தன்மை கூடிய உபபிரிவாக (i) (அ) (1) உள்ளதுடன் அதன் இலகுத்தன்மை 86% ஆகும். அதே போன்று இலகுத்தன்மை குறைந்த உபபிரிவாக (i) (ஆ) (2)உள்ளதுடன் அதன் இலகுத்தன்மை 28% ஆகும்.

(ஆ) (1) ஆவது உபபிரிவின் இலகுத்தன்மையானது 32% மாகவும் (ஆ) (2) ஆம் உபபிரிவின் இலகுத்தன்மை 28% மாகவும் காணப்பட்டது. காப்புறுதியுடன் தொடர்புடைய சொற் பதங்கள் தொடர்பாக தெளிவானதும், சரியானதுமான விளக்கமொன்று பெற்றிருக்காமையே இதற்குரிய காரணமாகும். கற்றல் - கற்பித்தல் கருமங்களின் போது சொற்பதங்கள் தொடர்பாக விளக்கமளிப்பதில் கூடிய கவனம் செலுத்தப்படல் வேண்டும்.

(iii) உபபிரிவின் இலகுத்தன்மை 54% மாகும். தொடர்பாடற் செயல் முறையின் அடிப்படைகள் தொடர்பாக விளக்கமளிப்பதற்கு மாணவர்களினால் முடியாது போயுள்ளது. இவ்வடிப்படைகள் தொடர்பாக விளக்கமான தெளிவொன்றை மாணவர்களினால் பெற்றுக் கொள்ளக் கூடியவாறு கற்றல் - கற்பித்தல் செயலொழுங்கைத் திட்டமிடல் வேண்டும்.

(v) (அ), (v) (ஆ), (v) (இ) ஆகிய உபபிரிவுகளின் இலகுத்தன்மையானது முறையே 61%, 54%, 57% வீதங்களாகக் காணப்பட்டன. வியாபாரம் தொடர்பாக பொதுவாக அறிந்திருக்க வேண்டிய பாடவிடயங்களில் மாணவர்கள் போதியளவான கவனத்தைச் செலுத்தாது இருப்பதே இதற்குரிய காரணமாகும். மொத்த வியாபாரம், சில்லறை வியாபாரம் என்பவற்றின் அடிப்படைப் பாட விடயங்கள் மீது மாணவர்களின் கவனத்தைச் செலுத்தக்கூடியவாறு கற்றல் - கற்பித்தல் கருமங்களின் போது நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும்.

## பகுதி II

### வினா இலக்கம் - 05

5. (i) *நிறுவன இலக்குகளை அடைந்து கொள்வதற்கு முகாமைத்துவச் செயன்முறையானது எவ்வாறு உதவுகின்றது என்பதனை விளக்குக.* *(04 புள்ளிகள்)*

(ii) (அ) *நெறிப்படுத்தல் என்றால் என்ன ?*

(ஆ) *சிறந்த தலைவர் ஒருவரின் சிறப்பியல்புகள்* **நான்கைக்** *குறிப்பிடுக.*

(இ) *ஜனநாயகத் தலைமைத்துவப் பாங்கை விவரிக்குக.* *(04 புள்ளிகள்)*

(iii) (அ) *அதிகாரத்தைக் கையளிப்பதனால் அடைந்து கொள்ளக்கூடிய அனுகூலங்கள் எவை ?*

(ஆ) *சில சமயங்களில் திட்டங்கள் தோல்வி அடைகின்றன. திட்டங்கள் தோல்வி அடைவதற்கான* **நான்கு** *காரணங்களைக் குறிப்பிடுக.* *(04 புள்ளிகள்)*

(iv) (அ) *செயற்பாட்டு முகாமைத்துவத்தின் உருமாற்றச் செயன்முறையின் தன்மையை எடுத்துக்காட்டுக.*

(ஆ) *சரக்கிருப்புக் கட்டுப்பாட்டு முறை என்ற வகையில் அதே நேரத் தந்திரோபாய முறைமையின்* (JIT) *முக்கியத்துவத்தை விளக்குக.* *(04 புள்ளிகள்)*

(v) *ஒப்பந்தகாரர் ஒருவர் விளையாட்டுக்கான பல்கூட்டுக் கட்டடத்தொகுதி ஒன்றைக் கட்டுவதற்கான ஒப்பந்தமொன்றைப் பெற்றுக் கொண்டார். இக்கட்டுமானத்துக்கு மிகவும் பொருத்தமான தளஅமைப்புத் திட்டத்தைக் குறிப்பிடுக. நீர் குறிப்பிட்ட தளஅமைப்புத் திட்டத்தின் தன்மையை விளக்குக.* *(04 புள்ளிகள்)*

*(மொத்தம் 20 புள்ளிகள்)*

### விடைகள்

5. (i) திட்டமிடல், ஒழுங்கமைத்தல், நெறிப்படுத்தல், கட்டுப்படுத்தல் ஆகிய கருமங்களை உள்ளடக்கியது முகாமைத்துவச் செயன்முறை ஆகும்.

* **திட்டமிடல் -**
எதிர்காலத்தில் அடைய எதிர்பார்க்கும் இலக்குகள், நோக்கங்களை உருவாக்கி அவற்றை நிறைவேற்றுவதற்கான தந்திரோபாயங்களை உருவாக்குவது திட்டமிடலாகும்.

* **ஒழுங்கமைத்தல் -**
உருவாக்கப்பட்ட இலக்குகள், நோக்கங்களை வினைத்திறனாகவும் பயனுறுதியாகவும் நிறைவேற்றுவதற்குத் தேவையான வளங்கள், அதிகாரங்கள், வேலைகள் போன்றவற்றைப் பகிர்ந்தளித்தல் ஒழுங்கமைத்தல் ஆகும்.

* **நெறிப்படுத்தல் -**
உருவாக்கப்பட்ட இலக்குகள், நோக்கங்களை வினைத்திறனாகவும் பயனுறுதியாகவும் நிறைவேற்றுவதற்காக மனித வளத்தின் மீது செல்வாக்குச் செலுத்தும் செயற்பாடு நெறிப்படுத்தல் ஆகும்.

* **கட்டுப்படுத்தல் -**
உருவாக்கப்பட்ட இலக்குகள், நோக்கங்களை வினைத்திறனாகவும் பயனுறுதியாகவும் நிறைவேற்றும் பொருட்டு தயாரிக்கப்பட்ட திட்டமிடல் சரியான முறையில் செயற்படுகின்றதா? அவ்வாறு செயற்படாவிடின் அவற்றைப் பரிசீலனை செய்து சீராக்குதல் கட்டுப்படுத்தல் ஆகும்.

**(தொடர்புபடுத்திக் கூறப்பட்டுள்ள பொருத்தமான விடைக்கு 04 புள்ளிகள் வழங்கவும்)**

(ii) (அ) நிறுவனத்தின் இலக்குகள், நோக்கங்களை வினைத்திறனாகவும் பயனுறுதியாகவும் நிறைவேற்றுவதற்காக மனித வளத்தின் மீது செல்வாக்குச் செலுத்தும் செயற்பாடு நெறிப்படுத்தல் ஆகும்.
இச்செல்வாக்கினைத் தலைமைத்துவம், ஊக்குவித்தல், தொடர்பாடல் என்பவற்றின் மூலம் மேற்கொள்ளலாம்.

**(01 புள்ளி)**

(ஆ) i. துணிவு.
ii. ஆளுமைத் தன்மை.
iii. ஆக்கத்திறன்.
iv. செல்வாக்குச் செலுத்தும் திறன்.
v. உறுதித் தன்மை.
vi. அர்ப்பணிப்பு.
vii. மனவுறுதி.
viii. சமூகமயமாக்கல்.
ix. மொழியாற்றல்.
x. முன்நோக்கிச்செல்லும் தன்மை.

**(4 விடயங்கள் x ½ = 02 புள்ளிகள்)**
**(ஏனைய பொருத்தமான விடைகளுக்கும் புள்ளிகள் வழங்கவும்.)**

(இ) தீர்மானங்கள்மேற்கொள்ளும்போது ஏனையோரின் பங்களிப்பினையும் பெற்றுக்கொண்டு செயற்படும் தலைவரின் தலைமைத்துவம் ஜனநாயகத் தலைமைத்துவம் எனப்படும். இத்தகைய தலைவர்களை இரண்டாக வகுக்கலாம்.

i. **செல்வாக்குச் செலுத்தும் பாங்கு** (Persuasive style)
ஏற்கனவே தீர்மானத்தை எடுத்து அதனை ஏனையோரின் சம்மதத்தின் ஊடாக நடைமுறைப்படுத்தும் தலைவர்.

ii. **ஆலோசனை பெறும் பாங்கு** (Consultative style)
ஏனையோருடன் கலந்துரையாடி அதன் அடிப்படையில் தீர்மானத்தை மேற்கொள்ளும் தலைவர்.

**(01 புள்ளி)**

(iii) (அ) i. மேல்மட்ட முகாமையாளரின் வேலைப்பழு குறைவடையும்.
ii. கீழ்மட்ட ஊழியர்கள் ஊக்குவிக்கப்படுவதுடன் அர்ப்பணிப்புடன் செயற்படுவர்.
iii. மேல்மட்ட முகாமையாளர்கள் முக்கியமான விடயங்களில் அதிக கவனம் செலுத்தக்கூடியதாக இருத்தல்.
iv. முகாமையாளர்களால் சகல நடவடிக்கைகளிலும் ஈடுபட முடியாது. எனவே, அதிகாரக் கையளிப்பு அவசியமாகும். இல்லையெனில் தவறுகள் ஏற்பட வாய்ப்பு உண்டு.
v. கீழ்மட்ட ஊழியர்கள் வேலைகளைக் கற்றுக் கொள்ளக்கூடியதாக இருப்பதுடன், இவை அவர்களின் பதவிஉயர்வுக்கும் வழி வகுக்கும்.

**(2 விடயங்கள் x 01 = 02 புள்ளிகள்)**

(ஆ) i. பிழையான தகவல்களை அல்லது இற்றைப்படுத்தப்படாத (update) தகவல்களைக் கொண்டு திட்டங்களைத் தயாரித்திருந்தால்.
ii. தமது சக்திக்கும் மீறிய திட்டங்களைத் தயாரித்திருந்தால்.
iii. கடந்த காலத் தகவல்களைக் கொண்டு திட்டங்களைத் தயாரித்திருந்தால்.
iv. அனைத்து முகாமைத்துவச் செயற்பாடுகளுடனும் இணைந்ததாகத் திட்டம் தயாரிக்கப்படாதிருந்தால்.
v. ஏனையோரின் பங்களிப்பும், அர்ப்பணிப்பும் காணப்படாமை.
vi. நடைமுறைக்க ஒவ்வாத முறையில் காணப்படின்.
vii. நெகிழ்வுத்தன்மை அற்றதாகக் காணப்படின்.

**(4 விடயங்கள் x ½ = 02 புள்ளிகள்)**

(iv)

உள்ளீடு → நிலைமாற்றல் செயற்பாடு → வெளியீடு

**(01 புள்ளி)**

| உள்ளீடு | நிலைமாற்றல் செயற்பாடு | வெளியீடு |
|---|---|---|
| 1.நிலம்.<br>2.உழைப்பு.<br>3.மூலதனம்<br>4.முயற்சியாண்மை.<br>5.நேரம்.<br>6.தகவல்.<br>7.அறிவு. | 1. வளங்களைப் பெற்றுக்கொள்ளுதல்.<br>2. உற்பத்திச்செயன்முறையைப் பின்பற்றுதல்.<br>3. உற்பத்திமுறையினைத் தீர்மானித்தல்.<br>4. தொழிநுட்ப அறிவின் பயன்பாடு. | பொருட்கள் சேவைகள். |

**(01 புள்ளி)**

(அ) i. காசுப் பாய்ச்சல் சிறப்பாக விருத்தி அடையும்.

ii. இருப்புச் செலவு இன்மை.

iii. விரயம் குறையும். (பழுதடைதல், காலங் கடந்த பொருள்).

iv. களஞ்சியப்படுத்தல் செலவு குறையும்.

v. களஞ்சியசாலைக்கான இட ஒதுக்கீடு அவசியமில்லை.எனவே, இவ்விடப்பரப்பை வேறு தேவைக்குப் பயன்படுத்தலாம்.

**(இக்கருத்தினை உள்ளடக்கிக் காணப்படின் 2 புள்ளிகள்)**

(v) நிலையான இடத்தள அமைப்பு. **(01 புள்ளி)**

உற்பத்திக்குத் தேவையான சகல மூலப்பொருட்கள், உழைப்பு, உபகரணம், சக்தி போன்ற பல்வேறு வளங்களை உற்பத்தி நடைபெறும் இடத்திற்கு கொண்டு சென்று உற்பத்தி நடைபெறும் முறை.

**(03 புள்ளிகள்)**

**5 வது வினாவுக்கு விடையளித்தல் தொடர்பான அவதானிப்புக்களும், முடிவுகளும், ஆலோசனைகளும் :**




5 ஆம் வினாவினை 81% மானவர்கள் தேர்ந்தெடுத்துள்ளனர். பகுதி II இல் கூடுதலான மாணவர்களால் தேர்ந்தெடுக்கப்பட்டது இவ்வினாவாகும். இவ்வினாவுக்கான புள்ளி 20 ஆகும்.

இதில் 00 - 05 ஆயிடையில் 27%
06 - 10 ஆயிடையில் 25%
11 - 15 ஆயிடையில் 27%
16 - 20 ஆயிடையில் 21%
எனும் வகையில் புள்ளிகளைப் பெற்றுள்ளனர்.

இவ்வினாவிற்காக 16 அல்லது அதற்கு கூடிய புள்ளிகளை 21% வீதத்தினர் பெற்றுள்ளதோடு, 27% மானவர்கள் 5 அல்லது அதற்குக் குறைவான புள்ளிகளையே பெற்றள்ளனர்.




இவ்வினாவின் 09 உபபிரிவுளினுள் இலகுத்தன்மை கூடிய இரண்டு உபபிரிவுகள் காணப்படுவதோடு அவை (i) (அ), (iii) (அ) ஆகவும், இவற்றின் இலகுத்தன்மைகள் 70% ஆகும். இலகுத்தன்மை குறைந்த உபபிரிவாக (iv) (அ) உள்ளதுடன் அதன் இலகுத்தன்மை 32% ஆகும்.

(1) ஆம் பிரிவின் இலகுத்தன்மையானது 54% மாகும். முகாமைத்துவச் செயன்முறைகள் தொடர்பான விளக்கம் மாணவர்களிடம் காணப்பட்டாலும் அமைப்பொன்றினால் எதிர்பார்க்கப்பட்ட நோக்கத்தை நிறைவேற்றிக் கொள்ளும் பொருட்டு முகாமைாத்துவச் செயன்முறையானது துணையாக அமையும் முறையினை விளக்கச் செய்வதற்கு மாணவர்களினால் முடியாமல் போயுள்ளது. எனவே கற்றல் - கற்பித்தல் செயலொழுக்கங்களின் போது முகாமைத்துவச் செயல் முறைகளினால் அமைப்பொன்றின் எதிர்பார்க்கப்பட்ட நோக்கத்தை நிறைவேற்றுவதற்காகத் துணையாக அமையும் முறையினை விரிவான கலந்துறையாடலொன்றை மாணவர்களுடன் கட்டியெழுப்பப்படுவதினூடாக இப்பாட விடயத்தைப் பெற்றுக் கொள்வதில் வெற்றிகரமாக மேற்கொள்ள முடியும்.

(iii) (ஆ) உபபிரிவின் இலகுத்தன்மையானது 57% மாகும். திட்டம் தோல்வியடைவதற்குரிய காரணங்கள் தொடர்பான தெளிவான விளக்கமொன்றில்லாதிருப்பதே இதற்குரிய காரணமாகும். திட்டங்களை தயாரிக்கும் பொழுது கவனம் செலுத்தப்பட வேண்டிய விடயங்கள் தொடர்பாக மாணவர்களை அறியச் செய்தல் வேண்டும்.

(iv) (அ), (iv) (ஆ) ஆகிய உபபிரிவுகளின் இலகுத்தன்மையானது முறையே 32%, 49% வீதங்களாகக் காணப்பட்டன. செயற்பாட்டு முகாமைத்துவத்திற்கான உருமாற்றுச் செயன்முறையின் தன்மையானது அட்டவணைகள் மூலம் சரியாக முன்வைப்பதற்கான விளக்கத்தினை மாணவர்கள் பெற்றிருக்கவில்லை. எனவே உருமாற்று செயன்முறைகளை மாணவர்களைக் கொண்டு அட்டவணைகள் தயாரிக்கப்பட்டு வகுப்பறையில் காட்சிப்படுத்தச் செய்வது மிகவும் பயனுறுதி கொண்டதாக இருக்கும்.

(v) ஆம் உபபிரிவின் இலகுத்தன்மை 56% மாகும். தள அமைப்புத்திட்டம் தொடர்பாக பெறப்பட்ட நியாயபூர்வமான அறிவினைப் பயன்படுத்துவதற்கான இயலுமை குறைவாகக் காணப்பட்டமையே இதற்குரிய காரணமாகும். எனவே தள அமைப்புத்திட்டம் தொடர்பாக செயல்முறையானது அறிவினை வழங்குவதற்காக கற்புலச் உதாரணம் :- ஒலி ஒளி நாடா Power Point Presentations போன்ற) சாதனங்கள் பயன்படுத்துதல், களச் சுற்றுளா போன்ற கற்றல் - கற்பித்தல் முறைகள் பயன்படுத்தப்படல் வேண்டும்.

## வினா இலக்கம் - 06

**6.** (i) (அ) உற்பத்திப்பொருள் ஒன்றின் தரம் என்பதனால் கருதப்படுவது யாது என்பதனை விளக்குக.

(ஆ) பின்வரும் எண்ணக்கருக்களை விளக்குக.

1. மொத்த தர முகாமைத்துவம் (TQM)
2. சிக்கனக் கட்டளைத் தொகை (EOQ) *(04 புள்ளிகள்)*

(ii) பின்வரும் மையச் சந்தைப்படுத்தல் எண்ணக்கருக்களை விளக்குக.

1. பெறுமதியும் (value) திருப்தியும்
2. பரிமாற்றமும் கொடுக்கல்வாங்கல்களும் *(04 புள்ளிகள்)*

(iii) வாடிக்கையாளர்களுக்கு மிகவும் உயர்வான பெறுமதியை வழங்குவதற்காக, சந்தைப்படுத்துவோர் தமது உற்பத்திப்பொருட்களை வேறுபட்ட மட்டங்களில் வழங்குகின்றார்கள். உற்பத்திப்பொருள் மட்டங்களை வரிசைக் கிரமமாகக் குறிப்பிடுவதுடன் அவை ஒவ்வொன்றையும் தனித்தனியாக விளக்குக. *(04 புள்ளிகள்)*

(iv) திரு. மகீபன் விவசாயத் துறையில் தான் பெற்றுக்கொண்ட அறிவு மற்றும் அனுபவத்தைக் கொண்டு அறுவடை செய்வதற்கான புதிய இயந்திரமொன்றை வடிவமைத்தார். இவ்வியந்திரத்தின் வினைத்திறனானது அதற்குரிய விவசாய அமைப்புக்களால் சான்றுறுதி செய்யப்பட்டிருந்தது. அவர் இவ்வியந்திரத்தை உற்பத்தி செய்து சந்தைக்கு அறிமுகப்படுத்தத் தயாராக இருந்தார். இவ்வியந்திரத்தை அறிமுகப்படுத்துவதற்கு பொருத்தமான மேம்படுத்தற் கருவி பற்றி அவர் தற்போது கருத்திற் கொள்கின்றார்.

வணிகக் கல்வியை கற்ற மாணவன் என்ற வகையில் மகீபனின் அறுவடை செய்யும் இயந்திரத்தைச் சந்தைக்கு அறிமுகஞ் செய்ய மிகவும் பொருத்தமான மேம்படுத்தற் கருவியைச் சிபாரிசு செய்வதுடன் உமது சிபாரிசுக்கான காரணங்களையும் தருக. *(04 புள்ளிகள்)*

(v) (அ) வணிகமொன்றின் தொழிற்படு மூலதனம் என்றால் என்ன ?

(ஆ) போதுமான அளவு தொழிற்படு மூலதனம் காணப்படாதபோது ஏற்படக்கூடிய எதிர் விளைவுகள் யாவை ?

(இ) போதுமான அளவு தொழிற்படு மூலதனம் இல்லையேல், தொழிற்படு மூலதனத்தை அதிகரித்துக் கொள்வதற்கு, எடுக்கப்படக்கூடிய குறுங்கால நடவடிக்கைகள் எவை ? *(04 புள்ளிகள்)*

*(மொத்தம் 20 புள்ளிகள்)*

## விடைகள்

6. (i) (அ) நுகர்வோரின் தேவைகளையும்,விருப்பங்களையும் பூர்த்தி செய்வதற்கு உற்பத்திப்பொருள் ஒன்றில் காணப்படும் ஆற்றல் அல்லது பண்பு.

**(02 புள்ளிகள்)**

(ஆ) i. நிறுவனத்தின் சகல மட்டங்களிலும் தரத்தினைப் பேணும் பொருட்டு மேற்கொள்ளப்படும் செயற்பாடு. இங்கு தரத்தினைப் பேணுவது சகலரினதும் பொறுப்பு ஆகும்.

**(01 புள்ளி)**

ii. நிறுவனத்தின் சரக்கிருப்புத் தொடர்பான மொத்தக் கிரயத்தை இழிவுபடுத்தும் வகையில் ஒரு தடவையில் கட்டளை இட வேண்டிய சரக்கிருப்பு அளவினைக் குறிப்பது சிக்கனக் கட்டளைத் தொகையாகும்.

**(01 புள்ளி)**

(ii) 1. i. நுகர்வோரின் தேவைகளை நிறைவேற்றிக் கொள்வது தொடர்பில் உற்பத்திப்பொருள் ஒன்றில் காணப்படும் ஆற்றல் அல்லது பண்பு தொடர்பாக வாடிக்கையாளரால் மேற்கொள்ளப்படும் மதிப்பீடு பெறுமதி ஆகும்.

ii. நுகர்வோரின் எதிர்பார்ப்புகளுக்கு ஏற்ப உற்பத்தியாளர் உற்பத்தியினை மேற்கொண்டிருப்பின் நுகர்வோருக்கு ஏற்படும் உள ரீதியான உணர்வு திருப்தியாகும்.

**(02 புள்ளிகள்)**

2. i. பெறுமதியுடையஒன்றை இரு கட்சியினருக்கு இடையில் கொடுக்கல்வாங்கல் செய்தல் பரிமாற்றம் ஆகும்.

ii. இரு பிரிவினருக்கிடையே அல்லது பலருக்கிடையே பெறுமதிகளைப் பரிமாற்றிக்கொள்வதன் மூலம் முடிவுக்குக கொண்டு வரப்படுவது கொடுக்கல்வாங்கல் ஆகும்.

**(02 புள்ளிகள்)**

(iii) 1. மைய உற்பத்திப்பொருள் - உற்பத்தி ஒன்றில் நுகர்வோர் எதிர்பார்க்கும் அடிப்படைப்பயன்.

2. அடிப்படைஉற்பத்திப்பொருள் - மைய உற்பத்திப்பொருளுக்கு மேலதிகமாக இனங்காணக்கூடிய பண்புகளை உள்ளடக்கிய உற்பத்திப்பொருள்.

3. எதிர்பார்க்கப்படும் உற்பத்திப்பொருள் - வாடிக்கையாளர்கள் எதிர்பார்ப்பதற்கும் மேலதிகமான பண்புகளை உள்ளடக்கிய உற்பத்திப்பொருள்.

4. விருத்தியாக்கப்பட்ட உற்பத்திப்பொருள் - வாடிக்கையாளர்கள் எதிர்பார்க்கின்ற மட்டங்களுக்கும் மேலதிகமான பண்புகளை உள்ளடக்கிய உற்பத்திப்பொருள்.

5. எதிர்கால உற்பத்திப்பொருள் - உற்பத்தியின் அனைத்து மட்டங்களிலும் மாற்றங்களை உட்புகுத்தி எதிர்காலத்தில் சந்தைக்கு அறிமுகப்படுத்தும் உற்பத்திப்பொருள்.

**(5 மட்டங்களும் ஒழுங்குமுறையில் குறிப்பிடப்பட்டிருப்பின் 04 புள்ளிகள்)**
**(4 மட்டங்கள் குறிப்பிடப்பட்டிருப்பின் 03 புள்ளிகள்)**
**(3 மட்டங்கள் குறிப்பிடப்பட்டிருப்பின் 02 புள்ளிகள்)**

(iv) இவ்வியந்திரத்தை அறிமுகப்படுத்துவதற்குப் பொருத்தமான மேம்படுத்தல் முறை நேர்ஆள் விற்பனை முறை (personal selling) ஆகும்.

மாணவர்கள் விளம்பரம் என எழுதியிருப்பினும் புள்ளி வழங்கவும்.

**(01 புள்ளி)**

**நேர்ஆள் விற்பனை**

- இதன் மூலம் பொருளை எவ்வாறு பயன்படுத்தலாம் என்பதனைச் செய்து காட்டலாம். இதனூடாக இலக்கு வாடிக்கையாளரிடமிருந்து சிறந்த கேள்வியைப் பெற்றுக் கொள்ளலாம்.

**அல்லது**

**விளம்பரம்**

- நேர்ஆள் விற்பனை ஒரு செலவு கூடிய செயற்பாடு ஆகும்.எனவே விளம்பரம் மூலம் குறைந்த செலவில் இவ்வியந்திரத்தை அறிமுகப்படுத்தலாம்.

**(02 புள்ளிகள்)**

(v) (அ) நாளாந்த நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு தேவைப்படும் முதல் தொழிற்படு மூலதனமாகும்.

**(01 புள்ளி)**

(ஆ) i. வணிக நடவடிக்கை தடைப்படும்.
ii. திட்டத்திற்கு அமைவாகச் செயற்பட முடியாமை.
iii. சொத்துக்கள் செயற்படாமையால் நட்டம் ஏற்படுதல்.
iv. நடைமுறைச் செலவுகளை மேற்கொள்ள முடியாமை.
v. வழங்குனர்களுக்கான பணத்தை மீளச் செலுத்த முடியாமை.
vi. ஏனைய பொருத்தமான விடைகள்

**(2 விடயங்கள் x ½ = 1 புள்ளி)**

(இ) i. மேலதிக இருப்புக்களை விற்பனை செய்தல்.
ii. காசு விற்பனையை அதிகரித்தல்.
iii. கொடுப்பனவுகளை இயன்றளவு தாமதப்படுத்துதல்.
iv. கடன்பட்டோரிடம் இருந்து விரைவாக கடன்களை அறவிடுதல்.
v. வழங்குனருக்குக் கொடுப்பனவுகளைத் தாமதப்படுத்துதல்.
vi. சொத்துக்களைக் காசு மூலம் கொள்வனவு செய்யாமல் குத்தகை மூலம் பெறுதல்.
vii. குறுங்காலக் கடன்களைப் (வங்கி மேலதிகப் பற்று) பெறுதல்.
viii. ஏனைய பொருத்தமான விடைகள்

**(4 x ½ = 02 புள்ளிகள்)**

**6 வது வினாவுக்கு விடையளித்தல் தொடர்பான அவதானிப்புக்களும், முடிவுகளும், ஆலோசனைகளும் :**




6 ஆம் வினாவினை 49% மானவர்கள் தெரிவுசெய்துள்ளனர். இவ்வினாவுக்கான புள்ளி 20 ஆகும்.

இதில் 00 - 05 ஆயிடையில் 31%
06 - 10 ஆயிடையில் 29%
11 - 15 ஆயிடையில் 24%
16 - 20 ஆயிடையில் 16%
எனும் வகையில் புள்ளிகளைப் பெற்றுள்ளனர்.

இவ்வினாவிற்காக 16 அல்லது அதற்குக் கூடிய புள்ளிகளை 30% வீதத்தினர் பெற்றுள்ளதோடு, 19% மானவர்கள் 5 அல்லது அதற்குக் குறைவான புள்ளிகளையே பெற்றளள்ளனர்.




இவ்வினாவின் 10 உபபிரிவுளினுள் இலகுத்தன்மை கூடிய உபபிரிவாக (v) (ஆ) உள்ளதுடன் அதன் இலகுத்தன்மை 82% ஆகும். இலகுத்தன்மை குறைந்த பிரிவாக (iv) உள்ளதுடன் அதன் இலகுத்தன்மை 38% ஆகும்.

(i) (அ), (i) (ஆ) (1), (i) (ஆ) (2) ஆகிய உபபிரிவுகளின் இலகுத்தன்மையானது முறையே 43%, 48%, 49% வீதங்களாகக் காணப்பட்டன. செயற்பாட்டு முகாமைத்துவத்தின் அடிப்படை எண்ணக்கருக்கல் தொடர்பாக மாணவர்களால் தெளிவானதும், சரியானதுமான விளக்கத்தைப் பெற்றிருக்காமையே இதற்குரிய காரணமாகும். நடைமுறை ரீதியான மாற்றங்களுக்கமைய இவ்வெண்ணக்கருவின் விளக்கத்தை மாணவர்களுக்கு வழங்கப்படல் வேண்டும்.

(iii) ஆவது உபபிரிவின் இலகுத்தன்மை 49% மாகும். உற்பத்திப் பொருள் மட்டங்களை வரிசைக் கிரமமாக பெயரிடுவதிலும், விளக்கமளிப்பதிலுமான விளக்கமின்மையே இதற்குரிய காரணமாகும். உற்பத்திப் பொருளொன்றின் மட்டங்களை வரிசைப்படி பெயரிட்டு அது தொடர்பான விளக்கத்தை நடைமுறை ரீதியான உதாரணங்களுடன் வழங்குவதில் கற்றல் - கற்பித்தல் செயன்முறையின் போது கவனம் செலுத்துதல் வேண்டும்.

(iv) ஆம் உபபிரிவின் இலகுத்தன்மை 38% மாகும். சந்தைப்படுத்தல் மேம்படுத்தல் கருவி தொடர்பாக அறிவு பூர்வமான அறிவினை செயல் முறையின் போது பயன்படுத்துவதற்கான தேர்ச்சி மாணவர்களிடம் காணப்படாமையே இதற்குரிய பிரதான காரணமாகும். நியாய பூர்வமாகக் கற்ற விடயங்களை நடைமுறையில் பயன்படுத்துவதில் மாணவர்களை ஈடுபடுத்துவதினூடாக இந்நிலைமையினை தவிர்த்துக் கொள்ள முடியும்.

(v) (அ), (v) (இ) ஆகிய உபபிரிவுகளின் இலகுத்தன்மையானது முறையெ 59%, 52% வீதங்களாக் காணப்பட்டன. வணிகமொன்றின் தொழிற்படு மூலதனம் தொடர்பான அறிவு மாணவர்களிடம் காணப்பட்டாலும் அவ்வெண்ணக்கருவை விளக்குவதற்கு மாணவர்களால் முடியாமல் போயுள்ளது. எனவே கற்றல் - கற்பித்தல் செயலொன்றின் போது அவ்வெண்ணக்கருவைச் சரியாக இனம் காண்பதற்கு ஆசிரியர் நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும்.

## வினா இலக்கம் - 07

**7.** (i) பின்வருவன வரையறுத்த அகிலா கம்பனியின் ஐந்தொகையில் இருந்து பிரித்தெடுக்கப்பட்ட சில தகவல்கள் ஆகும்.

- சாதாரண பங்கு மூலதனம் ரூ. 10 மில்லியன்
- முன்னுரிமைப் பங்கு மூலதனம், 10%, ரூ. 8 மில்லியன்
- தொகுதிக் கடன்கள் 12%, ரூ. 7 மில்லியன்

அண்மைக் காலங்களில் இக்கம்பனியின் இலாபத்தன்மையானது ஒரு கீழ் மட்டத்தில் காணப்படுகின்றது. தற்போது இக்கம்பனிக்கு மேலதிக நிதியாக ரூ. 2 மில்லியன் தேவைப்படுகின்றது. சாதாரண பங்குகள், முன்னுரிமைப் பங்குகள், தொகுதிக் கடன்கள் நீங்கலாக, இக்கம்பனிக்கான மேலதிக நிதியைப் பெற்றுக் கொள்வதற்கு மிகவும் பொருத்தமான நிதி மூலம் எது ? உமது விடையைக் காரணங்களுடன் விளக்குக.

(04 புள்ளிகள்)

(ii) (அ) பின்வருவன கொழும்பு பங்கு பரிவர்த்தனை நிலையத்தில் வரையறுத்த பொதுக்கம்பனிகளுக்குக் கிடைக்கக்கூடிய இரண்டு பட்டியலிடுத்தல் முறைகளாகும்.

1. ஒப்பப்பணத்துக்கான கொடைமுனைவு/ஆரம்பப் பொது வழங்கல் (offer for subscription/initial public offer)
2. விற்பனைக்கான கொடைமுனைவு (offer for sale)

மேற்கூறப்பட்ட இரண்டு பட்டியற்படுத்தல் முறைகளையும் தனித்தனியாக விளக்குக.

(ஆ) முதலீட்டாளர் ஒருவர் பங்குச் சந்தையில், சாதாரண பங்குகளில் முதலீடு செய்வதனால் அடைந்து கொள்ளக்கூடிய **நான்கு** அனுகூலங்களைக் குறிப்பிடுக. (04 புள்ளிகள்)

(iii) பின்வருவது பாடசாலையின் விவாத அணி ஒன்றுக்கு வழங்கப்பட்ட ஒரு தலைப்பு ஆகும். **"மனித வளமாயினும் சரி அல்லது ஏனைய வளங்களாயினும் சரி அவை நிறுவனமொன்றுக்கு மிகவும் முக்கியமானவையாகும்".** மனித வளத்திற்குச் சார்பாகப் பேசும் விவாத அணிப் பிரிவை நீர் பிரதிநிதித்துவப்படுத்துகின்றீர் என கருதிக் கொள்ளவும்.

ஒரு நிறுவனத்துக்கான மனித வளத்தின் முக்கியத்துவத்தை நியாயப்படுத்துவதற்கு நீர் குறிப்பிடும் அம்சங்களை விளக்குக. (04 புள்ளிகள்)

(iv) (அ) வேலை விவரணம் ஒன்றினால் கருதப்படுவது யாது ?

(ஆ) வேலை குறித்துரைத்தல் ஒன்றினால் கருதப்படுவது யாது ?

(இ) அறிமுகப்படுத்தல் நிகழ்ச்சி ஒன்றின் மூலம் அடைந்து கொள்ளக்கூடிய அனுகூலங்கள் எவை ?

(ஈ) வேலை நிறுத்தம் ஒன்றிற்குச் செல்லாமல் தொழிற் சங்கம் ஒன்றினால் மேற்கொள்ளக்கூடிய வேறு **இரண்டு** தொழிற்சங்க நடவடிக்கைகளைக் குறிப்பிடுக. (04 புள்ளிகள்)

(v) (அ) செயல்திறன் மதிப்பீட்டை வரையறுப்பதுடன் செயல்திறன் மதிப்பீட்டின் நோக்கங்களை விளக்குக.

(ஆ) பின்வருவனவற்றுக்கு சிறு குறிப்புக்கள் எழுதுக.

1. கூட்டுப் பேரம் பேசல்
2. பின்புலப் புலனாய்வு

(04 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

## விடைகள்

7. (i) சாதாரண பங்குகள் **(01 புள்ளி)**

தற்போது உயர் இணைப்பாகக் காணப்படுகின்றது. உயர் இணைப்புக் காணப்படும் பொழுது மேலும் கடன் மூலதனத்தைப் பெற்றுக் கொள்வது பொருத்தமற்றது.

(ii) கீழ் மட்டத்திலே இலாபம் காணப்படுவதனால் வட்டி அல்லது முன்னுரிமைப் பங்குகளுக்கு நிலையான பங்கிலாபத்தை வழங்க முடியாது போகும்.

(iii) சாதாரண பங்குகளை மீள் வழங்குவதற்கான கடப்பாடில்லாதிருத்தல்.

(iv) மேலும் கடன் தொகையினைப் பெற்றுக் கொள்ளுமாயின் கடன் கொடுனர்களின் செல்வாக்கு அதிகரிக்கும்.

(v) சாதாரண பங்குகளுக்கான நிதிக் கிரயம் குறைவடைவதனால் சாதாரணப் பங்குகள் மூலம் நிதியீட்டம் செய்வது பொருத்தமானதாகும்.

(vi) ஏனையவை **(03 × 01 = 01 புள்ளிகள்)**

(ii) (அ) i. முதல்முறையாகப் புதிய பங்குகளையும் தொகுதிக்கடன்களையும் பொதுமக்களுக்கு வழங்கும் பொதுக்கம்பனிகள் தம்மைப் பங்குச் சந்தையினூடாக பட்டியற்படுத்தும் முறையாகும். **(01 புள்ளி)**

ii. பொதுமக்களுக்குஏற்கனவே பங்குகளையும் தொகுதிக்கடன்களையும் வழங்கிய பொதுக் கம்பனிகள் பொது மக்களுக்கு பங்குகளைப் பங்குச் சந்தையினூடாக விற்பனை செய்வதற்குத் தம்மைப் பட்டியற்படுத்தும் முறையாகும். **(01 புள்ளி)**

(ஆ) i. பங்குச் சந்தையில் பங்குகளைக் கொள்வனவு, விற்பனை செய்யக்கூடிய வாய்ப்புக்கள் அதிகம்
ii. அதிக மூலதன இலாபத்தைப் பெறலாம்.
iii. நீண்டகால முதலீடு என்ற அடிப்படையில் அதிக பங்கிலாபத்தைப் பெறலாம்.
iv. மூலதன இலாபத்திற்கு வரி விலக்கினைப் பெற்றுக் கொள்ளலாம்.
v. பங்குப் பத்திரத்தைப் பிணையாக வைத்து கடன் பெற்றுக் கொள்ளலாம்.
vi. உரிமை வழங்கலைப் பெற்றுக் கொள்ளலாம்.
vii. வாக்களிக்கும் உரிமையையும் நிர்வாகத்தில் ஈடுபடக்கூடிய வாய்ப்பையும் பெற்றுக் கொள்ளலாம்.
viii. ஒதுக்கங்களை மூலதனவாக்கத்திற்குப் பயன்படுத்திச் சாதாரண பங்குதாரர்களுக்கு வழங்கலாம்.
ix. சாதாரண பங்குகள் திரவத்தன்மை கூடியது.

**(4 விடயங்கள் x ½ = 02 புள்ளிகள்)**

(iii) i. உயிருள்ள வளமாகும்.
ii. ஏனைய வளங்களை வழி நடத்தி, கட்டுப்படுத்தும் ஒரு வளம் ஆகும்.
iii. மனிதவளத்தின் வினைத்திறனூடாகநிறுவனம் சிறப்பாகச் செயற்படக்கூடிய தன்மை.
iv. குழுக்களாகச் செயற்படக்கூடிய தன்மை.
v. பயிற்சி, அபிவிருத்தி மூலம் மனித வளத்தின் பெறுமதி அதிகரிக்கும்.

**(2 விடயங்கள் x 02 = 04 புள்ளிகள்)**

(iv) (அ) வேலை ஒன்றிற்குரிய பணிகள், கடமைகள், பொறுப்புக்கள், வேலை நிபந்தனைகள் என்பவற்றை விபரிக்கும் கூற்று. **(01 புள்ளி)**

(ஆ) வேலை ஒன்றைச் செய்வதற்கு வேலைக்குப் பொருத்தமான நபரிடம் காணப்பட வேண்டிய தகைமைகளை (அறிவு, திறன், அனுபவம்) உள்ளடக்கிக் காணப்படும் விபரம்.

**(01 புள்ளி)**

(இ) i. புதிய தொழிலுக்கு விசுவாசமாக இருத்தல்.
ii. உற்பத்தித்திறன் அதிகரிக்கும்.
iii. நிறுவனத்திற்குச் சார்பாக இருத்தல்.
iv. வேலை மற்றும் வேலைச் சூழல் தொடர்பாக அறிந்திருத்தல்.
v. நேர் மனப்பாங்கு அதிகரிக்கும்.
vi. ஏனைய பொருத்தமான விடைகள். **(2 விடயங்கள் x ½ = 01 புள்ளி)**

(ஈ) i. கூட்டுப் பேரம்பேசல்.
ii. சட்டப்படி வேலை செய்தல்.
iii. மெதுவாக வேலை செய்தல்.
iv. மேலதிக நேர வேலையில் ஈடுபடாதிருத்தல்.
v. மறியல் போராட்டம்.
vi. வேலைத்தலத்தில் அமர்ந்திருத்தல். **(2 விடயங்கள் x ½ = 01 புள்ளி)**

(v) (அ) ஊழியர்கள் தமது செயற்பாடுகள் தொடர்பில் எவ்வாறு மேற்கொள்கின்றனர் என்பதனை மதிப்பீடு செய்யும் மனித வள முகாமைத்துவத் தொழிற்பாடு செயல்திறன் மதிப்பீடு ஆகும்.

**(01 புள்ளி)**

| **நிர்வாக நோக்கம்** | **அபிவிருத்தி நோக்கம்** |
|---|---|
| i. கூலியும் சம்பளமும். | i. பயிற்சி. |
| ii. பதவி உயர்வு பெறுதல். | ii. வழி நடத்தல். |
| iii. இடமாற்றம். | iii. வினைத்திறன் அதிகரிப்பு. |
| iv. மனித வளத் திட்டமிடல். | |

**(2 விடயங்கள் x ½ = 01 புள்ளி)**

(ஆ) i. ஊழியர்களின் தொழில்சார் நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்வதற்கு தொழிற்சங்க அங்கத்தவர்களுக்கும் நிர்வாகத்தினருக்கும் (முகாமைக்கும்) இடையே இடம்பெறும் பேச்சுவார்த்தை. **(01 புள்ளி)**

ii. விண்ணப்பதாரியின் குடும்ப, கல்வி, நிதிப் பின்னணி தொடர்பாக விபரங்களைப் பெற்றுக்கொள்வதற்கு மேற்கொள்ளப்படும் செயற்பாடு. **(01 புள்ளி)**

**7 வது வினாவுக்கு விடையளித்தல் தொடர்பான அவதானிப்புக்களும், முடிவுகளும், ஆலோசனைகளும் :**




7 ஆம் வினாவினை 31% மானவர்கள் தெரிவுசெய்துள்ளனர். பகுதி II இல் குறைந்தளவு மாணவர்களால் தெரிவுசெய்யப்பட்டது இவ்வினாவாகும். இவ்வினாவுக்கான புள்ளி 20 ஆகும்.

இதில் 00 - 05 ஆயிடையில் 18%
06 - 10 ஆயிடையில் 31%
11 - 15 ஆயிடையில் 32%
16 - 20 ஆயிடையில் 19%
எனும் வகையில் புள்ளிகளைப் பெற்றுள்ளனர்.

இவ்வினாவிற்காக 16 அல்லது அதற்குக் கூடிய புள்ளிகளை 19% வீதத்தினர் பெற்றுள்ளதோடு, 18% மானவர்கள் 5 அல்லது அதற்குக் குறைவான புள்ளிகளையே பெற்றள்ளனர்.




இவ்வினாவின் 12 உபபிரிவுளினுள் இலகுத்தன்மை கூடிய உபபிரிவாக (iv) (ஆ) உள்ளதுடன் அதன் இலகுத்தன்மை 81% ஆகும். இலகுத்தன்மை குறைந்த பிரிவாக (i) உள்ளதுடன் அதன் இலகுத்தன்மை 39% ஆகும்.

(i) ஆம் உபபிரிவின் இலகுத்தன்மை 39% மாகும். இணைப்பு நிலைமைகள் தொடர்பாக எண்ணக்கரு ரீதியான விளக்கமொன்று பெற்றிருக்காமையே இதற்குரிய காரணமாகும். வணிகமொன்றின் இணைப்பு நிலைமைகள் தொடர்பாக விளக்கத்தைப் பெற்று இதற்கமைய மேலதிக மூலதனத்தைத் திரட்டும் பொழுது பொருத்தமான முறைகள் தொடர்பாக மாணவர்களின் அறிவை விருத்தி செய்தல் வேண்டும். கற்றல் - கற்பித்தல் செயன்முறையின் போது எண்ணக்கருக்கள், அடிப்படைகள் தொடர்பாக மாணவர்களின் கவனத்தை ஈடுபடுத்தச் செய்து பொருத்தமான மட்டத்தில் தெளிவுபடுத்துவது முக்கியமானதாகும்.

(ii) (அ) (1) ஆம் உபபிரிவின் இலகுத்தன்மை 58% மாகவும் (ii) (அ) (2) ஆம் உபபிரிவின் இலகுத்தன்மை 40% மாகவும் காணப்பட்டது. பங்குச் சந்தையில் பட்டியல்படுத்தக் கூடிய இரு முறைகளில் “ஆரம்பப் பொது வழங்கலின் போது” எனும் முறை தொடர்பாக மாணவர்களிடம் விளக்கம் காணப்பட்டாலும் “விற்பனைக் கொடை முறையினூடாக” எனும் முறை தொடர்பாக மாணவர்களிடம் விளக்கமின்மையே இதற்குரிய காரணமாகும். பங்குச் சந்தையில் புதிய போக்குகள் தொடர்பாக வளவாளர்களைப் பயன்படுத்தி கருத்தரங்குகளை நடத்துவதினூடாக மாணவர்களின் அறிவை இற்றைப்படுத்தப்படல் வேண்டும்.

## வினா இலக்கம் - 08

**8.** (i) *பின்வரும் தகவல் முறைமைகளை வரையறுப்பதுடன், வணிக நிறுவனமொன்றில் இத்தகவல் முறைமைகளை எந்நபர்கள் பயன்படுத்துகின்றார்கள் என்பதனையும் குறிப்பிடுக.*

1. *கொடுக்கல்வாங்கல் செயன்முறைப்படுத்தல் முறைமை* (TPS)
2. *நிறைவேற்று உதவி முறைமை* (ESS) *(04 புள்ளிகள்)*

(ii) *ஒரு வணிக நிறுவனமானது நவீன தகவல் தொழினுட்பத்தைப் பயன்படுத்துவதனால் அடைந்து கொள்ளக்கூடிய அனுகூலங்கள் எவை ?* *(04 புள்ளிகள்)*

(iii) *பின்வருவனவற்றிற்கு சிறு குறிப்புகள் எழுதுக.*

1. *உலகளாவிய வெப்தளம்* (www)
2. *புற இணையம்* (Extranet) *(04 புள்ளிகள்)*

(iv) *நேரம் மற்றும் செலவினைக் கருத்திற் கொண்டு, சில வணிகர்கள் வணிகத் திட்டத்தைத் தயாரிப்பதற்கு விருப்பமற்றவர்களாகக் காணப்படுகின்றனர். வணிகத் திட்டம் பற்றி கற்றறிந்த மாணவன் என்ற வகையில், இவ்வாறான வணிகர்களுக்கு வணிகத்திட்டத்தின் முக்கியத்துவம் பற்றி எவ்வாறு அறிவுரை கூறுவீர் என்பதனை விளக்குக.* *(04 புள்ளிகள்)*

(v) (அ) *ஒரு வணிகத்தினால் ஆண்டின் இறுதியில் தயாரிக்கப்படும் நிதிக் கூற்றுக்களுக்கும், வணிகத்திட்டமொன்றில் உள்ளடக்கப்பட்டுள்ள நிதிக் கூற்றுக்களுக்கும் இடையே எவ்வாறான வித்தியாசங்களை நீர் காணுவீர் ?*

(ஆ) *வணிகத் திட்டத்தைத் தயாரிப்பதன் மூலம் ஒரு வணிகன் பல அனுகூலங்களை அடைந்து கொள்ளலாம். அவ்வாறான* **நான்கு** *அனுகூலங்களை விளக்குக.* *(04 புள்ளிகள்)*

*(மொத்தம் 20 புள்ளிகள்)*

## விடைகள்

8. (i) i. கொடுக்கல்வாங்கல் செயன்முறைப்படுத்தல் முறைமை (TPS). - நிறுவனத்தின் நாளாந்த நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு கணினியின் உதவியுடன் மேற்கொள்ளும் தகவல் முறைமை.

**(01 புள்ளி)**

(கீழ்மட்ட முகாமையாளருக்கு (அலுவலக முகாமையாளர், மேற்பார்வையாளர், பிரதான எழுதுவினைஞர்)

**(01 புள்ளி)**

ii. நிறைவேற்று உதவி முறைமை (ESS). - ஒழுங்குபடுத்தப்படாத தீர்மானங்களை மேற்கொள்வதற்குத் தேவைப்படும் தகவல் முறைமை.

**(01 புள்ளி)**

உயர் மட்ட முகாமையாளருக்கு (நிதி முகாமையாளர், சந்தைப்படுத்தல் முகாமையாளர்)

**(01 புள்ளி)**

(ii) i. மிக விரைவாக வணிக நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம்.
ii. கிரயம் குறைவு.
iii. தரம் உயர்வடைதல்.
iv. நம்பகத்தன்மைஅதிகரித்தல்.
v. துல்லியமானது.
vi. நெகிழ்வுத்தன்மை கொண்டது.
vii. ஊழியர்களின் வினைத்திறன் அதிகரிக்கும்.

**(குறிப்பிட்டு விளக்க 4 விடயங்களுக்கு x 01 = 04 புள்ளிகள்)**

(iii) i. வலையமைப்புச் சூழல் ஒன்றில் தகவல்களை வகைப்படுத்துதல், மீண்டும் பெற்றுக்கொள்ளுதல், தயாரித்தல், காட்சிப்படுத்துல் என்பவற்றுக்காக சர்வதேச ரீதியாக ஏற்றுக்கொள்ளப்பட்ட நியமங்களின் கீழ் அமைக்கப்பட்ட முறை.

**(02 புள்ளிகள்)**

ii. தெரிவு செய்யப்பட்ட வெளியாருடன் ஒன்றிணைந்து வலையமைப்பினைப் பயன்படுத்துவதற்கு உருவாக்கப்பட்ட வலையமைப்பு முறை.

**(02 புள்ளிகள்)**

(iv) வணிகத் திட்டமின்றி செயற்படும் பொழுது நிச்சயம் தோல்வியே ஏற்படும். திட்டம் காணப்படுமிடத்து வெற்றிகரமாக வணிக நடவடிக்கையை மேற்கொள்ளலாம்.

**(இக்கருத்தினை உள்ளடக்கி விடை எழுதப்பட்டிருப்பின் 04 புள்ளிகள்)**

(v) (அ) 1. ஆண்டின் இறுதியில் தயாரிக்கப்படும் நிதிக் கூற்றுக்கள் உண்மையான, நடைபெற்ற விபரங்களை உள்ளடக்கிக் காணப்படும்.
வணிகத் திட்டம் ஒன்றில் காணப்படும் நிதிக்கூற்று எதிர்காலத்திற்காக எதிர்வு கூறப்பட்ட தகவலை உள்ளடக்கியிருக்கும்.

2. ஆண்டின் இறுதியில் தயாரிக்கப்படும் நிதிக் கூற்றுக்கள் சட்டப்படி ஒவ்வொரு வருடமும் கட்டாயமாகத் தயாரிக்கப்பட வேண்டியதாகும்.
வணிகத் திட்டம் ஒன்றில் காணப்படும் நிதிக்கூற்றைச் சட்டப்படி தயாரிக்கப்பட வேண்டியதில்லை. தேவைப்படும் பொழுது மட்டும் தயாரிக்கலாம்.

**(2 விடயங்கள் x 01 = 02 புள்ளிகள்)**

(ஆ) i. மூலதனத் தேவைப்பாடு தொடர்பாக வங்கி, நிதி நிறுவனங்களுக்குச் சமர்ப்பிக்கலாம்.

ii. வணிகத்தில் அக்கறை செலுத்துவோர் எச்சந்தர்ப்பத்திலும் பார்வையிடலாம்.

iii. எழுத்து வடிவில் காணப்படுவதனால் நோக்கத்தை அடைவதற்கும், வழிகாட்டலுக்கும் இலகுவாக இருக்கும்.

iv. நிறுவனத்தின் நன்மதிப்பு அதிகரிக்கக்கூடியதாக இருக்கும்.

v. நிறுவன நடவடிக்கைகளை மேற்கொள்ள இலகுவாக இருக்கும்.

vi. ஏனைய பொருத்தமான விடைகள்

**(4 விடயங்கள் x ½ = 02 புள்ளிகள்)**

**8 வது வினாவுக்கு விடையளித்தல் தொடர்பான அவதானிப்புக்களும், முடிவுகளும், ஆலோசனைகளும் :**




8 ஆம் வினாவினை 46% மானவர்கள் தெரிவுசெய்துள்ளனர். இவ்வினாவுக்கான புள்ளி 20 ஆகும்.

இதில் 00 - 05 ஆயிடையில் 33%
06 - 10 ஆயிடையில் 32%
11 - 15 ஆயிடையில் 24%
16 - 20 ஆயிடையில் 11%
எனும் வகையில் புள்ளிகளைப் பெற்றுள்ளனர்.

இவ்வினாவிற்காக 16 அல்லது அதற்குக் கூடிய புள்ளிகளை 11% வீதத்தினர் பெற்றுள்ளதோடு, 33% மானவர்கள் 5 அல்லது அதற்குக் குறைவான புள்ளிகளையே பெற்றள்ளனர்.




இவ்வினாவின் 8 உபபிரிவுளினுள் இலகுத்தன்மை கூடிய பிரிவாக (iv) உள்ளதுடன் அதன் இலகுத்தன்மை 63% ஆகும். இலகுத்தன்மை குறைந்த உபபிரிவாக (iii) (2) உள்ளதுடன் அதன் இலகுத்தன்மை 24% ஆகும்.

(i) (1), (i) (2) ஆகிய உபபிரிவுகளின் இலகுத்தன்மையானது முறையே 49%, 45% வீதங்களாகக் காணப்பட்டுள்ளது. கொடுக்கல் வாங்கல் செயன்முறைப்படுத்தல் முறைமை, நிறைவேற்று உதவி முறைமை என்பவை தொடர்பான கொள்கை ரீதியான அறிவு காணப்பட்டாலும் வணிக நிருவனமொன்றில் அவற்றைப் பரிசீலனை செய்யும் நபர்கள் தொடர்பாக விளக்கமற்றிருப்பதே இதற்குரிய காரணமாகும். வகுப்பறைக் கற்றல் - கற்பித்தல் செயல்முறையின் போது தகவல் முறையானது மாணவர் அனுபவங்கள் நடைமுறைச் சந்தர்ப்பங்களுடன் ஒத்துப் போதல் வேண்டும்.

(iii) (1) ஆம் உபபிரிவின் இலகுத்தன்மை 26% மாகவும் (iii) (2) ஆவது உபபிரிவின் இலகுத்தன்மை 24% மாகவும் காணப்பட்டது. தகவல் முறைமை தொடர்பான உள்ளீட்டுப் பதங்கள் பற்றிய கருத்துக்களை வெளிப்படுத்திக் காட்டுவதற்கு மாணவர்களினால் இயலாமல் போனதே இதற்கான முக்கிய காரணமாகும். இவ்வுள்ளீட்டுப் பதங்கள் தொடர்பாகச் சரியான கருத்தினை வெளிப்படுத்திக் காட்டுவதில் மாணவர்களை ஈடுபடுத்தச் செய்தல் வேண்டும்.

(v) (அ), (v) (ஆ) ஆகிய உபபிரிவுகளின் இலகுத்தன்மை முறையே 49%, 58% வீதங்களாகக் காணப்பட்டன. வணிகத்திட்டம் தொடர்பாக மாணவர்களிடத்தில் காணப்பட்ட அறிவு குறைவாகவே காணப்பட்டது. வகுப்பறைக் கற்றல் - கற்பித்தல் செயல் முறைகளின் போது மாணவர்களை நடைமுறை ரீதியாக வணிகத்திட்டமொன்றைத் தயாரிப்பதில் ஈடுபடுத்தச் செய்யவும்.

2.2.3 **வினாப்பத்திரம் II இற்கு விடையளித்தல் தொடர்பான முழு அவதானிப்புகள், முடிவுகள் மற்றும் ஆலோசனைகள் :**




இரண்டாம் வினாப்பத்திரத்திற்கு விடையளிக்கும்போது அதிகமான இலகுத்தன்மையினை 1 ஆம் வினாவிற்கு காட்டியுள்ளதோடு அதன் இலகுத்தன்மை 76% ஆகும். குறைவான இலகுத்தன்மையினை 3 ஆம் வினாவிற்கு காட்டியுள்ளதோடு அதன் இலகுத்தன்மை 39% ஆகும்.

1 ஆம், 2 ஆம் வினாக்கள் கட்டாய வினாக்களான போதும் அவற்றின் இலகுத்தன்மைகள் 60% இற்கும் அதிகமாகும்.

3 தொடக்கம் 8 வரை தெரிவு வினாக்களாவதோடு, 3 ஆம் வினா தவிர ஏனைய வினாக்களின் இலகுத்தன்மைகள் முறையே 50% இற்கும் அதிகமாகும்.

அத்தோடு மாணவர்கள் விடையெழுதும்போது அதிகமாக தெரிவு செய்துள்ளது 5 ஆம் வினாவையேயாகும். அதன் இலகுத்தன்மை 56% ஆகும். குறைவான தெரிவாக 7 ஆம் வினா காணப்படுவதோடு அதன் இலகுத்தன்மை 60% ஆகும்.

4 ஆம் 6 ஆம் 8 ஆம் வினாக்களுள் அதிகமாகத் தெரிவு செய்துள்ளது 4 ஆம் வினாவாகும். அதன் இலகுத்தன்மை 63% ஆகும். 6 ஆம் 8 ஆம் வினாக்களின் இலகுத்தன்மை முறையே 51% உம் 50% உம் ஆகும்.

# III ஆம் பகுதி

## 3.0 விடையளிக்கும் பொழுது கவனத்திற் கொள்ளப்பட வேண்டிய விடயங்களும், முன் மொழிவுகளும் :

## 3.1 விடையளிக்கும் பொழுது கவனத்திற் கொள்ளப்பட வேண்டிய விடயங்கள் :

**பொதுவான ஆலோசனைகள் :**

* வினாப்பத்திரத்திலுள்ள பிரதான அறிவுறுத்தல்களை வாசித்து விளங்கிக்கொள்ள வேண்டும். அதாவது ஒவ்வொரு பகுதியிலுமிருந்து எத்தனை வினாக்களுக்கு விடையளிக்கப்பட வேண்டும், எந்த வினா கட்டாயமானது, எவ்வளவு காலம் வழங்கப்பட்டுள்ளது, எவ்வளவு புள்ளிகள் கிடைக்கப்பெறும் என்பன தொடர்பாகக் கவனத்திற் கொள்ளப்பட வேண்டும். வினாக்களை நன்கு வாசித்து சரியாக விளங்கி வினாக்கள் தெரிவு செய்யப்பட வேண்டும்.
* பத்திரம் I இற்கு விடையளிக்கும்போது மிகச் சரியான விடையை மட்டுமே தெரிவுசெய்ய வேண்டும்.
* பத்திரம் II இற்கு விடையளிக்கும்போது எல்லா பிரதான வினாக்களையும் புதிய தாளில் எழுதத் தொடங்க வேண்டும்.
* விடைகள் தெளிவான கையெழுத்தில் எழுதப்படல் வேண்டும்.
* பரீட்சார்த்திகள் விடைத்தாளின் எல்லாப் பக்கங்களிலும் உரிய இடங்களில் தமது சுட்டெண்ணை எழுதுதல் வேண்டும்.
* வினா இலக்கம், உபபிரிவுகளின் இலக்கங்கள் சரியாக எழுதப்பட வேண்டும்.
* சரியான சுருக்க விடையளிக்கத் தேவையான சந்தர்ப்பத்தில் விரிவாக விடையளிப்பதை தவிர்ப்பதோடு, விரிவாக விடையளிக்கத் தேவையான சந்தர்ப்பத்தில் சுருக்கமாக விடையளித்தலையும் தவிர்த்தல் வேண்டும்.
* வினாவில் கேட்கப்பட்டுள்ளவாறு விடைகள் தர்க்கரீதியாகவும், பகுப்பாய்வு முறையிலும் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.
* II ஆம் வினாப்பத்திரத்திற்கு விடையெழுதும்போது பிரதான வினாவின் உபபிரிவுகள் அனைத்தையும் நன்கு வாசித்து ஒவ்வொரு உபபிரிவுக்குமான எதிர்பார்க்கப்பட்ட விடையினை மாத்திரம் எழுதுதல் வேண்டும்.
* வினாக்களுக்கு விடையளிக்கும்போது வழங்கப்பட்டுள்ள நேரத்தினை சரியான முறையில் முகாமைத்துவம் செய்துகொள்ள வேண்டும்.
* விடையெழுதும்போது சிவப்பு, பச்சை நிற மை பேனைக்கள் பாவித்தலைத் தவிர்க்கவும்.

**விஷேட ஆலோசனைகள் :**

* வணிகக் கல்விப் பாடத்தில் பயன்படுத்தப்படும் குறிப்பிட்ட உள்ளீட்டுச் சொற்பதங்களை குறித்த இடங்களில் பயன்படுத்துதல் வேண்டும்.
* அட்டவணைகள் படங்கள் என்பன வேண்டப்படும் சந்தர்ப்பங்களின் போது மிகத் தெளிவாக வரைந்து ஒழுங்கு முறையாகக் காட்டப்படல் வேண்டும்.

## 3.2 கற்றல் - கற்பித்தல் செயன்முறைகள் தொடர்பான கருத்துக்களும், முன்மொழிவுகளும் :

* ஆசிரியர் வணிகக் கல்விப் பாடம் தொடர்பாக ஆளமானதும், தெளிவானதும் இற்றைப்படுத்தக் கூடியதுமான அறிவுடனும் கற்றல் - கற்பித்தல் செயலொழுங்கில் பிரவேசிக்க வேண்டும்.வணிகக் கல்வியானது நாளுக்கு நாள் மாற்றமடைந்து செல்கின்ற அனேக பாட விடயங்களை உள்ளடக்கியதாக இருக்கின்றது. எனவே அவ்வாசிரியர்கள் அம்மாற்றங்கள் தொடர்பாக அறிந்து கொள்பவராக இருக்க வேண்டும்.

* வணிகக் கல்விப் பாடமானது நியாய பூர்வமான அறிவுக்கிணைவாக விரிவடைந்து செல்லும் பாடமொன்றாகும். எனவே அப்பாடமானது துறையினுள் நிலைத்திருப்பதற்கும் விருப்பம் கொள்வதற்கும் (Live & Love) ஆசிரியர் உடன்பட வேண்டுவதுடன் அதற்காக மாணவர்களுக்கு வழிகாட்டலொன்றையும் மேற்கொள்ளுதல் வேண்டும்.

* வணிகக் கல்வி ஆசிரியர் வகுப்பறையினுள் இடம் பெறும் பொதுவான கற்றல் - கற்பித்தல் செயன்முறைகளுக்கு மேலதிகமாக குழுச் செயற்பாடுகள், களச் சுற்றுளா, செயற்திட்டம், கண்காட்சி முன்வைப்புக்கள் போன்ற செயற்பாடுகள் என்பவற்றை பாடம் தொடர்பான அறிவைப் பெறுவதற்காகப் பயன்படுத்தல் வேண்டும். இச்செயற்பாடுகளின் போது மாணவர்களின் உச்சப் பங்களிப்புக் கிடைக்கும் வகையில் கற்றல் - கற்பித்தல் செயல்முறைகள் ஒழுங்கமைக்கப்பட வேண்டும்.

* பாட அறிவினை உறுதிப்படுத்தும் பொழுது வசதிகளுக்கமைய ஒளி ஒலிக் காட்சிகள், கணினி மென், வண் தொகுதிகள், வலையமைப்புக்களைப் பயன்படுத்தும் சந்தர்ப்பங்களுடன் பல்லூடகச் சாதனம் (Multy media) போன்ற நவீன தொழில் நுட்ப முறைகளையும் பயன்படுத்துவது மிகப் பொருத்தமானதாகும்.

* பாட விளக்கத்தினையும், அறிவினையும் இற்றைப்படுத்துவதற்காக இலங்கை மத்திய வங்கியின் ஆண்டறிக்கையினையும், ஏனைய வெளியீடுகள், வருடாந்த வரவு செலவுத்திட்ட முன் மொழிவுகள், பாடத்திற்குரிய கட்டளைச் சட்டங்கள், கட்டளைகள், சட்டதிட்டங்கள் நிறுவன ரீதியான உதவிகளை வழங்கும் அமைப்புகளது சட்டரீதியான அறிக்கைகள் என்பவற்றை பரிசீலனை செய்தல் வேண்டும்.

* வணிகக் கல்விப் பாடத்திட்டத்தின் எதிர்பார்ப்புக்களை பரிசீலனை செய்யும் பொழுது கற்றல் - கற்பித்தல் செயன்முறையினூடாக நிறைவேற்றிக் கொள்ள வேண்டிய சிறப்பு எதிர்பார்ப்புத் துறையொன்று காணப்படுகின்றது. அவ்வெதிர்பார்ப்பானது பிரதானமாக அன்றாட வாழ்க்கைக்குத் தேவையான அறிவு, திறன், மனப்பாங்கு என்பவற்றைப் பெற்றுக் கொள்ளும் வகையில் தயாரிக்கப்பட்டுள்ளது. இதனை விட தனி நபர்களுக்கிடையிலான தொடர்புகள் கட்டியெழுப்பக்கூடிய வாழ்க்கைப் பழக்கவழக்கங்களாகக் கற்றல் பேறுகளைத் தயாரித்தல் வேண்டும். அவ்வெதிர்பார்ப்புக்களை அடைந்துக் கொள்ளக்கூடியவாறு வணிகக் கல்விப் பாடத்தினைக் கற்பிக்கும் போது பல்வேறு முறைகளைப் பின்பற்றுவது தொடர்பில் ஆசிரியர் கவனம் செலுத்துதல் வேண்டும். ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டியுனூடாகக் காட்டப்படும் வழிகாட்டல்களை உரியவாறு ஆசிரியர்கள் பின்பற்றுவதினூடாக வெற்றிகரமான கற்றல் - கற்பித்தல் செயன்முறைக்குக் காரணமாக அமையும்.

* க.பொ.த (உ.தர) வணிகக் கல்வி வினாப்பத்திரத்திற்கு விடையளித்துள்ள முறையினை நோக்கும் பொழுது வணிகக் கல்விப் பாடத்துடன் தொடர்புடைய எண்ணக்கருக்கல், சொற்பதன்கள் புதிய போக்குகள் என்பன தொடர்பில் மாணவர்களிடம் காணப்படும் அறிவு போதுமானதாக இல்லை என்பது எமக்குத் தெரியவருகின்றது. அதே போன்று விடையினைச் சரியாக பொருத்தித் தெளிவாக முன்வைப்பதற்கு மாணவர்கள் தேவையான தேர்ச்சிகளைப் பெற்றிருக்காமையை அறியக் கூடியதாக இருப்பது இன்னுமோர் காரணமாகும். எனவே அவ்விடயங்கள் தொடர்பில் வகுப்பறைக் கற்றல் - கற்பித்தல் செயற்பாட்டின் போது கவனம் செலுத்தல் வேண்டும்.

* ஆசிரியர் தமது கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகளுக்குக்கிடையில் மாணவர்களை மதிப்பீட்டிற்குற்படுத்துதல் வேண்டும். வகுப்பறையில் மாணவர்கள் கற்றலில் ஈடுபட்டிருக்கும் பொழுது ஆசிரியருக்கு மாணவர்களின் கற்றல் இயலுமை, இயலாமை, ஆற்றல்கள் என்பன தொடர்பாக அறிந்து கொள்ள கூடியதாக இருக்கிறது. இதற்கமைய கற்றல் - கற்பித்தல் செயலொழுக்கங்களுக்கிடையில் மாணவர்களின் பலவீனங்களை இனம் கண்டு அதற்கான மீளவலியுருத்தல் வேலைத்திமொன்றைச் செயற்படுத்துவதற்கு ஆசிரியர் திட்டமிட்டுக் கொள்ளுதல் வேண்டும்.